கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(16.07.2017 - 16 ஆடி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 164, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



புனித அன்னம்மாளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்



## கத்தோலிக்க திருச்சபையில் சிங்கள கத்தோலிக்கர், தமிழ் கத்தோலிக்கர் என்ற பிரிவினை கிடையாது

கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க கொழுப்பு யோசேவ்வாஸ் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட திருவிழிப்பு 01.07.2017 அன்று சனிக்கிழமை கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அன்றைய நிகழ்வில் கலந்து கொண்ட பேராயர் தனது மறையுரையில் புனிதர்களின் வாழ்வைப் பற்றி எடுத்துரைத்தார். கத்தோலிக்க திருச்சபை அனைவருக்குமே. அங்கு பிரிவினை கிடையாது. ஆதலால் நாம் வேறு ஒரு சபையை தேடி போக தேவையில்லை. 2000 ஆண்டுகளுக்கு பழைமையான கத்தோலிக்கத் திருச்சபை ஆயிரக்கணக்கான புனிதர்களை தந்திருக்கிறது. ஆகவே இந்த கத்தோலிக்க திருச்சபையை சந்தேகப்படத் தேவையில்லை. கத்தோலிக்க திருச்சபை உலகளாவிய திருச்சபை. இங்கு சிங்கள கத்தோலிக்கர், தமிழ் கத்தோலிக்கர் என்ற பிரிவினை இல்லை. நாம் எல்லோரும் கத்தோலிக்கரே, நாம் கத்தோலிக்க திருச்சபையில் அங்கத்துவம் வகிப்பது பற்றி பெருமைப்பட வேண்டும். மேலும் புனிதர்களைப் பற்றி...

02

## குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகள்



அருட்தந்தை
மகேஹந்திர குணதிலக்க அடிகள்

"நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை, நான் தான் உங்களை தேர்ந்துகொண்டேன்" (யோவா 15:16)


குருத்துவ வாழ்வு என்பது மகத்தானது, புனிதமானது
இந்த குருத்துவ வாழ்வு கருணையுடன் கையளிப்பதற்காக
இறைவன் தரும் சந்தர்ப்பமாகும்.

இறைவன் தந்த சந்தர்ப்பத்தை கருணையுடன், இரக்கத்துடன், அர்ப்பணத்துடன் வாழ்ந்து, கிறிஸ்துவின் திருவுருவாய், கிறிஸ்துவின் மறுவுருவாய் இறை உள்ளம் கொண்ட இறைமனிதராய், தித்திக்கும் நற்செய்தியை எத்திக்கும் சென்று தம்மையே அர்ச்சனையாக்கி அடியவர்க்கு அடியவராய், தொண்டர்களுக்கு தொண்டராய், பணியாளர்களுக்கு பணியாளராய் வாழ்ந்து இன்று 25.07.2017 தமது 25 வருட குருத்துவ யூபிலி ஆண்டை நினைவுகூறும் அருட்தந்தையர்களே! உங்களை ஞான ஒளி பத்திரிகையின் ஊடாக வாழ்த்துகின்றோம். நீங்கள், குருத்துவ வாழ்வில் மேலும் பல ஆண்டுகள் கண்டு, பணி வாழ்வில் சிறப்புற்று பணியாற்ற இறையாசீர் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.



அருட்தந்தை. கலாநிதி
கெமிலஸ் பர்னாந்து அடிகள்

## நாம் வணக்கம் செலுத்துவது கடவுளுக்கு மட்டுமே



கர்தினால் பேராயரின் கொள்ளுப்பிட்டி பங்கு விஜயம் 14

**எமது கத்தோலிக்க மக்கள் முழு மன நம்பிக்கையும் மன உறுதிப்பாடும் இல்லாமல் வாழ்கிறார்கள்.**

**உயர்மறைமாவட்ட ஆயர் குருக்களுக்கான கூட்டத்தில் பேராயர் 10.07.2017** 04

## தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கின்றார் (உரோ 8:30)



இயேசுவோடு இணைந்து, தமது குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவு காணும் அருட்தந்தையர்களை ஞான ஒளி, மகிழ்வோடு வாழ்த்துகின்றது!!!

### குருத்துவ வாழ்வில் 25வது ஆண்டு வெள்ளி விழா கொண்டாடுபவர்கள்

- ★ அருட்தந்தை லின்டன் ஜோசப் அடிகள்
- ★ அருட்தந்தை பிரசாத் பொன்னப்பெரும
- ★ அருட்தந்தை கலாநிதி கெமிலஸ் பர்னாந்து அடிகள்
- ★ அருட்தந்தை ஸ்ரீகாந்த பர்னாந்து அடிகள்
- ★ அருட்தந்தை மஹேந்திர குணதிலக்க அடிகள்
- ★ அருட்தந்தை அன்டன் ஜயனந்த அடிகள் (வெளிநாட்டில்)
- ★ அருட்தந்தை ரொஷான் பர்னாந்து அடிகள் (வெளிநாட்டில்)

## டெங்கு கொள்ளை நோயிலிருந்து பாதுகாப்பு வேண்டி ஒரு வார செபமும் உபவாசமும்

அன்புக்குரிய சகோதரர்களே,

இலங்கை நாட்டை பெருமளவு தாக்கியுள்ள டெங்கு வியாதியால், நாடுபூராகவும் ஆயிரக்கணக்கான மக்கள் பலவித நோக்காடுகளினால் துன்புறுவது பற்றி நாம் அறிந்துள்ளோம். இந்த ஆபத்தான நிலைப்பாட்டிலிருந்து விடுதலை பெற எடுக்கப்படும் அனைத்து முயற்சிகளும் எதிர்பார்ப்பிற்கு அப்பாற்பட்டவையாகவே உள்ளது. இந்நிலைப்பாடானது....

02

## "முத்துராஜவலையில் குப்பைகளைப் போட வேண்டாம்"

கொழும்பு நகரினுள் சேர்க்கப்படும் குப்பைகளை முத்துராஜவலைப் பகுதிக்கு கொண்டு சென்று, சூழல் மாசடைவது குறித்து எவ்வித அவதானமுமின்றி, அவற்றை அங்கு போடுவதற்கு கொழும்பு மாநகரசபை மற்றும் அரசாங்கத்தின் ஒரு சில நிறுவனங்களும் இணைந்து மீண்டும் செயற்படுவது குறித்து எமக்கு அறியக்கிடைத்துள்ளது.

15

**ஆண்டவர் நீரே நல்லவர் மன்னிப்பவர் (திபா 86)**

# குருத்துவ வாழ்வில் 30 ஆண்டுகள்



**அருட்பணி. இக்னேஷியஸ் வருணகுலசிங்கம்**

**1987 - 2017**

சேவைகள் புரிந்திட ஆர்வங் கொண்டு
உம் வாழ்வையே சேவையாக்கி
முப்பது ஆண்டுகள் நின்றுழைத்து - எம்
மறைநிலம் போற்றும் மகனானீர்....

மறைநிலத்தின் பல பங்குகளிலே
அயராது தொடர் பணி செய்து
மக்கள் மனங்கள் போற்றும் - மறை
மகனின் சேவைகளை பகிர்ந்திட்டீர்...

ஆர்வங் கொண்ட வழிபாடுதனையே - நின்
சேவைகளில் முதன்மையாக்கி
ஒழுங்கு பெற்ற வாழ்க்கை முறையை - பல
கோணங்களில் புரிய வைத்தீர்...

கள்ளமில்லா உள்ளங் கொண்டு - பல
உள்ளங்களின் தந்தையானீர்
கருத்துடனே பிறர் குரலுக்கு
அன்புடன் செவிசாய்த்தீர்...

தமிழ் மக்களின் குரல் வழியில் - பல
செயற்திட்டங்களை முன்னெடுத்தீர்
அயராது குரல் கொடுத்து - சில
உரிமைகளை வென்றெடுத்தீர்

இத்தனை வளமும் கொடுத்த இறைவன்
பல ஆண்டு விழா காண
அத்தனை அன்பு உள்ளங்களுடன்
ஆசிப்பாராக வாழ்க! வாழ்கவே!

அன்புடன் சகோ. டிலோப்ட்சன்

## 01 கத்தோலிக்க...

மிக விபரீதமாக பரவி வருகிறது. தெய்வீக குணமளிக்கும் வல்லமை கொண்ட நம் இயேசுபிரான் அவரது இவ்வுலக வாழ்நாட்களில் பல்வகை நோக்காடுகளுக்குள்ளான பல நோயாளிகளை தமது தெய்வீக அதிகாரத்தால் குணமாக்கி சுகமளித்ததை கிறிஸ்தவர்களாகிய நாம் விசுவசிக்கின்றோம். எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசுவில் ஆழ்ந்த அசையாத விசுவாசம் கொண்டவர்களாக அவரது இரக்கப் பெருக்கத்தால் குணமளிக்கும் வல்லமை இன்றும் நம்மத்தியில் செயலாற்ற வேண்டுவது செபிப்பது நமது முக்கிய கடமையாக அமைகின்றது. நமது நாட்டிற்காகவும், நோய்வாய்ப்பட்டுள்ளோருக்காகவும், உயிர் இழப்புக்குள்ளானோரின் குடும்பங்களுக்காகவும் இவ்விபரீத நிலைப்பாட்டின் விடுதலைக்காக உழைக்கும் அனைத்து பணியாளர்களுக்காகவும் உருக்கமான விசுவாசத்தோடு செபிப்போமாக.

ஆக, ஆடி மாதம், சனிக்கிழமை 15ம் திகதியிலிருந்து ஞாயிறு 23ம் திகதி வரையிலான ஒரு வார காலத்தை செபத்தோடு, உபவாசத்திலும் ஒன்றிணைந்து இந்த முக்கிய கருத்துக்காக செபிக்க, நான் உங்களை அழைக்கின்றேன். இந்த நமது தேவையில் துணைக்கரம் நீட்ட அன்னையாம் புனித மரியாளிடமும், அனைத்து புனிதர்களிடமும் மன்றாடுவோம். நோய்வாய்ப்படும் மக்கள் மத்தியில் வல்லமையோடு துணைநிற்கும் புனித செபஸ்தியாரை நோக்கி நவநாள் வழிபாட்டை ஒழுங்கு செய்து செபிக்க வேண்டுகிறேன். திருப்பலி வேளையில் விசேஷ செபங்கள் ஒப்புக்கொடுக்கவும் இறுதி மூன்று நாட்களாகிய வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் புனித செபஸ்தியாரின் மற்றும் நோயாளருக்கு குணமளிக்கும் வல்லமை நிறைந்த புனிதர்களின் சுருபங்கள் தாங்கிய ஊர்வலம் ஒன்றையும் அனைத்து பங்குகளிலும் செயல்படுத்த வேண்டுமென ஆசிக்கின்றேன்.

நமது செபம், செயலாற்றல் நிறைந்ததாக விளங்க, இவ்வார காலத்தில் உதவி தேவையானவர்களுக்கான தான தர்ம நிகழ்ச்சிகளிலும், சுற்றுப்புறங்களை சுத்தம் செய்து, டெங்கு நுளம்பு இனப்பெருக்கமடையும் இடங்களை இனங்கண்டு அழிக்கும் செயற்திட்டங்களை அமைத்து செயற்படவும், நமது பலவீனங்கள், பாவங்களிலிருந்து மீட்புப் பெறும்படியுமாக செப, உபவாச முயற்சிகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வது மிக உதவியாக அமையும்.

இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஒவ்வொருவரும் ஈடுபாடு கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். இறைவன் நமது நாட்டை தம் ஆசீரால் நிரப்பவும், இத்தீவிர கொள்ளை நோயிலிருந்து நம்மை மீட்கவும் சுக நல ஆசீரால் நம் மக்களை காப்பாற்றவும், நமது தன்னலப்பற்றற்ற செயல்களாலும், விசுவாசம் நிறைந்த செபங்களையும் இறை சந்நிதானத்தை நோக்கி அலை அலையாக எழுப்புவோம்.

இறை ஆசீர் உங்களது ஆகட்டும்.

அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை,
கொழும்பு உயர் மறைமாவட்டம்



22.06.2017 கொழும்பு டவர் மண்டபத்தில் கொழும்பு டிலாசால் கல்லூரியினால் நடாத்தப்பட்ட "சிதுதெர" கலை நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக வருகை தந்திருந்த கொழும்பு உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து அடிகளாரையும், கொழும்பு வலயக் கல்வி பிரதி அத்தியச்சகர் திருமதி. மாலினி பண்டார நாக்கவும் கல்லூரியின் அதிபர் அருட்பணி. நியூமன் முத்துத்தம்பியுடன் அமர்ந்திருப்பதை படத்தில் காணலாம்.

தகவல். அருட்பணி. நியூமன் முத்துத்தம்பி

# திருப்பாலத்துவ மறைதூதர்களின் ஒளியாவோம்



"திருப்பாலத்துவ மறைதூதர்களின் ஒளியாவோம்" என்ற தலைப்பின் கீழ் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான ஒன்றுகூடல் ராகமை, தேவத்தை, தியான இல்லத்தில் 26.06.2017 திங்கட்கிழமை (நோன்பு விடுமுறை) அன்று காலை 8.30 மணிமுதல் மாலை 3.30 மணிவரை நடைபெற்றது.

கொழும்பு உயர்மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்தந்தை குருசன் குமார் பெரேரா அவர்களின் தலைமையின் கீழ் அருட்தந்தை லூயிட்ஸ் அடைக்கலம் அவர்களால் வழிநடத்தப்பட்டது. ஒரு மனிதனுக்குரிய வளர்ச்சியான உடல், ஆன்மீகம், மனம், உணர்வு, அறிவு போன்றவைகள் சரியான விதத்தில் சம அளவாக வளர்ச்சி பெற்றிருத்தலின் அவசியம் பற்றியும், அதனை நாளாந்த பயிற்சிகளின் மூலம் தம்மைத் தாமே வளர்த்துக் கொள்ள ஆர்வம் காட்ட வேண்டும் என பல உதாரணங்களின் மூலம் எடுத்துக் காட்டினார்கள். இந்நிகழ்வில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 12 பங்குகளில் திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள் இறைபணி புரிபவர்கள் 68பேர் கலந்து கொண்டனர். இவற்றை படத்தில் காணலாம்.

தகவல் : திருமதி. அனஸ்லின்

## 01 கத்தோலிக்க...

கூறும் போது இதை கத்தோலிக்க திருச்சபையில் எனக்கும் உங்களுக்கும் புனிதராக வரமுடியும். உதாரணமாக புனித குழந்தை திரேசம்மாளின் குடும்பத்தை எடுத்துக் கொண்டால் அவரின் பெற்றோர்களும் புனிதராக்கப்பட்டார்கள். இப்பொழுது அவருடைய சகோதரிகளையும் புனிதராக்க ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே எங்களுடைய குடும்பம் முழுவதுமே புனிதராக வாழ முடியும். என்று தனது மறையுரையில் கூறினார்.

# இறைபதம் அடைந்தார்

## அருட்தந்தை சிசில் குமார அடிகளார்



# கத்தோலிக்க மறைபாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வு - 2017

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மேற்படி தேர்வு 2017 ஐப்பசி மாதம் நடைபெற இருப்பதாக, 2017, ஆடி மாதம் 07ம் திகதிக்கான வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தேர்வுக்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதி நாள் 08 - 08 - 2017 ஆகும்.

கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி தேர்வில் தோற்றுவதற்கு பங்கு மாணவர்களை அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பங்குத்தந்தை, தனது பங்கின் கத்தோலிக்க மறைப்பாடசாலை இறுதி சான்றிதழ் தேர்வுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளினது மறைப்பாடசாலையின் தலைமையானவராக இருப்பதால் இத்தேர்வில் தோற்றுவதற்கு விண்ணப்பதாரரை ஊக்கப்படுத்தும் பொறுப்பு அவரை சார்ந்ததாக உள்ளது. ஆகவே பரீட்சைக்குத் தோற்றுமாறு மாணவர்களை ஊக்கப்படுத்தவும். விண்ணப்பப்பத்திரம் இதுவரை கிடைக்காத பங்குகளில், மறைப்பாடசாலையின் பெயர், முகவரி, விண்ணப்பதாரரின் எண்ணிக்கை ஆகியவை பங்குக் குருவினால் குறிப்பிடப்பட்டு பரீட்சை ஆணையாளர், ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு 21-07-2017 க்கு முன் அனுப்பப்பட வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 07-07-2017 வர்த்தமானியைப் பார்க்கவும்.

அருட்தந்தை பியல் ஜானக்க பர்னாந்து
தேசிய மறைக்கல்வி இயக்குனர்.

# அன்னை திரேசா முதியோர் இல்லத்தரிசனை



யாழ் மறைமாவட்டத்தில் இறைபணியாற்றிவரும் புனித கிளறேசியன் மிஷனரியினரின் (உ.அக) பொதுநிலையினரால் 01.07.2017 சனியன்று அன்னை திரேசா முதியோர் இல்லம் தரிசிக்கப்பட்டது. கடந்த ஆண்டு (2016) இதே நாளில் கிளறேசியன் இல்லத்தில் அமைந்திருக்கும் புனித. கிளாரட்டின் இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டின் நினைவாக இறை இரக்கத்தின் உருவப்படம் ஸ்தாபிக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் கிளறேசியன் பொதுநிலையினரால் இறை இரக்கத்தின் பக்தி நவநாள் செய்யப்பட்டு வந்தது.

01.07.2017 சனிக்கிழமை இப்பக்தி முயற்சியின் முதலாவது வருட நிறைவு நாளை நினைவுகூரும் வகையில் அருட்தந்தை றெக்ஸ் கொன்சன்ரைன் உ.அக அடிகளாரால் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தொடர்ந்து கிளறேசியன் பொதுநிலையினரின் ஆன்ம இயக்குனர் அருட்தந்தை ஸ்ரீபன் சிங்கராயர் அடிகளாரின் வழிநடத்தலோடு கிளறேசியன் பொதுநிலையினர் கோப்பாய் அன்னை திரேசா முதியோர் இல்லம் சென்று சிறுவழிபாடு செய்து சபையினரால் சேகரிக்கப்பட்ட அவசியப் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

தனிவரம் பெற்ற புனித. கிளாரட்டின் சமூகப் பணியிலும், ஆன்மீகப் பணியிலும் ஈடுபாடு கொண்டுள்ள சபையினர் "இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன்" என்று விசுவாசத்துடன் தமது பணியைத் தொடர்கின்றனர்.

தகவல் : திரு. தேவதாஸ் கிளறேசியன் பொதுநிலையினர்.

தனது குருத்துவ வாழ்வினூடாக தன்னுடைய ஆற்றல்கள் திறமைகள் அனைத்தையும் முழுமையாக பயன்படுத்தி, இறைவனின் மகிமையைப் எடுத்துரைத்தார். அவரது இறுதி அஞ்சலி திருப்பலியை (06.07.2017) கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில், உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்களான மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, மற்றும் மேதகு மெக்சல் சில்வா ஆண்டகையும், ஓய்வு பெற்ற பேராயர் ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை ஆகியோருடன் நூற்றுக்கும் மேற்பட்ட குருக்கள், துறவியர், பொதுநிலையினரோடும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் பங்குபற்றி இறுதி அஞ்சலியை செலுத்தியமைக் குறிப்பிடத்தக்கது.

தகவல் மற்றும் படங்கள் : திரு. சுனில்

# ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
16 ஆடி, 2017 ஞாயிற்றுக்கிழமை.


**வாழ்க்கை என்பது ஒருமுறை தான். அதுவும் வாழ்வதற்கே. எனவே கடவுள் தந்த இந்த அழகிய வாழ்வை அர்த்தத்தோடும் மனமகிழ்வோடும் வாழ்ந்திடுவோம்.**

எமது பரிசுத்த திருச்சபையானது இம்மாதத்தில் புனித யாகப்பர் மற்றும் புனித அன்னம்மாள் ஆகியோரின் திருநாட்களை நினைவுகூர்கிறது. இவ்விருவரின் வாழ்வும் திருச்சபையினராகிய எமக்கு சிறந்த எடுத்துக்காட்டான வாழ்வாக அமைகின்றது. எனவேதான் இன்று இறைமக்கள் இவ்வாலயங்களுக்கு நம்பிக்கையோடும் பக்தியோடும் சென்று வருவதையும், எந்தவித சிரமங்களையும் பாராது திருயாத்திரை செல்வதையும் நாம் காண முடிகிறது.

புனித யாகப்பர் செபதேயு சலோமி இவர்களின் மகன். சொந்த ஊர் கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா. இவரும் இவரது தம்பியுமான அருளப்பரும் மீன் வலைகளை பழுது பார்த்துக்கொண்டிருக்கும்போது இயேசுவால் அழைப்புப் பெற்றவர்கள். இயேசுவின் அழைப்பிற்கு மறுப்பேதும் கூறாமல் இயேசுவை பின்சென்றவர்கள். இவரது விழா சாதாரண மக்களின் மேன்மையை உணர்த்தி நிற்கின்றது. இயேசுவைக் கண்டுகொண்டு அவருக்காக வாழும்போது நாம் நம்மையே இறைவனுக்கு அர்ப்பணமாக்குகின்றோம் என்பது உறுதியாகின்றது. இயேசுவோடு நாம் மகிமையடைய விரும்பினால் அவர் பருகிய கசப்பான கிண்ணத்திலிருந்து நாமும் பருகத் தயாராயிருக்க வேண்டும் என்பதை எமக்கு எடுத்தியம்புகின்றது.

அடுத்ததாக உலகம் போற்றும் அன்னையாகிய மரியன்னையின் தாயான அன்னம்மாளின் திருநாளை கொண்டாடுகின்றோம். அன்னா என்றால் இறைவனின் அருள் என்பது பொருள். அன்னம்மாள் பெத்லகேமில் பிறந்தார். நாசரேத்தில் வாழ்ந்த சுவக்கீன் என்பவரை மணந்தார். இருவரும் தாவீது அரசருடைய குடும்பத்தை சேர்ந்தவர்கள். இவர்களுக்கு நெடுங்காலமாக குழந்தையின்றி இருந்தார்கள். இறையருளால் அன்னை மரியை பெற்றெடுத்தார்கள். சுவக்கீன் அன்னம்மாள் கடவுள் முன்னிலையில் மாசற்றவர்களாக விளங்கியதால் அவர்களால் உலகிற்கோர் உத்தமபுத்திரியை பெற்றுதர முடிந்தது. அடிமைப்படுத்தப்பட்ட சமுதாயத்தில் அவர்கள் வாழ்ந்த போதிலும் அவர்கள் மரியாளை பண்பும் பணிவும் மனதைரியமும் கொண்ட புரட்சிப்பெண்ணாக வளர்த்தார்கள். எனவேதான் பெண்களுக்குள் பேறுபெற்றவளாகத் திகழ்ந்தாள். நாம் வாழுகின்ற சூழல்தான் நமது அனுபவங்களை தீர்மானிக்கிறது. நல்ல சூழல் அமையும்போது நாம் பெறும் அனுபவம் நம்மை பண்படுத்தும். அது நமக்கு பலன் பல கொடுக்கும். அதேவேளையில் சூழல் நமக்கு சாத்தியமற்றதாக அமையும்போது அது பலன் கொடுக்காது நம்மை பலவீனப்படுத்துவதாய் மாறிவிடுகின்றது. எம் அனைவருக்கும் பண்பட்ட நிலம் அடித்தளமாக அமையும்போது பலமடங்கு பலன் தரும். பாறை நிலத்தையும் வழியோரத்தையும் முட்புதரையும் அடித்தளமாக அமைத்துக் கொள்ளாமல் பண்பட்ட நிலத்தை அடித்தளமாக்கிடுவோம். நல்ல சூழலை உருவாக்கிட எம் ஒவ்வொருவருக்கும் முடியும். எம் வாழ்வு எமது கையில். நாமும் இந்த புனித யாகப்பர் போன்று புனித அன்னம்மாள் போன்று கடவுளுக்கு உகந்த மக்களாக மாறிட ஆசைப்படுவோம். வாழ்க்கை என்பது ஒருமுறை தான். அதுவும் வாழ்வதற்கே. எனவே கடவுள் தந்த இந்த அழகிய வாழ்வை அர்த்தத்தோடும் மனமகிழ்வோடும் வாழ்ந்திடுவோம்.

தற்போது எமது சுற்றுச் சூழல் பல்வேறு காரணங்களால் மாசுடைவதால் ஏற்படும் பல்வேறு விதமான நோய்கள், துன்பங்கள் பற்றியும் எமது கருத்தில் கொள்வோம். விசேட விதமாக டெங்கு போன்ற மிக பயங்கரமான நிலையினால் நாட்டில் பல பாகங்களிலும் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்காகவும், விசேடமாக குழந்தைகளுக்காகவும் இறைவனை மன்றாடுவோம். எமது சூழலை பாதுகாப்பதன் வழியாக இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து மீண்டு, புது வாழ்வைக் கட்டியெழுப்ப, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

இறையாசீருடன்
ஆசிரியர்

# உத்தரிய மகிமை

## “என் உத்தரியம் ஆபத்தின் கேடயம்”



13ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் கார்மேல் துறவற சபைக்கு அதிபராய் இருந்த புனித சீமோன் ஸ்டாக் என்பவருக்கு 1251ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16ஆம் நாள் கேம்பிரிட்ஜ் நகரில் அன்னை மரியாள் காட்சியளித்து ஒரு ஆடையைக் காண்பித்து “இது உன் சபையார் அணிந்து கொள்ள வேண்டிய விஷேசமான உடை இவ்வுடையை அணிந்துகொண்டு மரிப்பவர்கள் விண்ணகப் பேரின்ப வாழ்வை அடைவர். இது இரட்சணியத்தின் அடையாளமாகவும், ஆபத்தின் கேடயமாகவும் புனிதமுடையதாகவும் இருக்கும்” என்று கூறி மறைந்துவிட்டாள். அது முதல் கார்மேல் சபை குருக்களும், கன்னியர்களும், சகோதரர்களும் இந்த உத்தரியத்தை (உடையை) தங்கள் சபையின் விஷேச உடையாக மதித்து உபயோகித்து வருகின்றனர்.

இக்காட்சி நடந்து 50ஆம் ஆண்டுகளுக்குப் பின் அன்னை மரியாள் திருத்தந்தை 22ஆம் அருளப்பருக்கு காட்சி தந்து “உத்தரிய சபையார் உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்து வெகு சீக்கரம் அவர்கள் மரித்த முதல் சனிக்கிழமை மீட்டுக் கொள்ளப்படுவார்கள்” என்று தெரிவித்தார். கார்மேல் சபையார் அன்னை மரியாளிடம் பெற்ற எண்ணிறைந்த நன்மைக்கு நன்றி செலுத்தும் முகமாக ஆண்டுதோறும் திருநாள் கொண்டாட தீர்மானித்து அன்னை காட்சியளித்த ஜுலை மாதம் 16ஆம் நாளைத் தேர்வு செய்து மிகச் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தார்கள். 1387ஆம் ஆண்டு அக்கால மன்னர்கள் திருவிழாவினை உலகமெங்கும் கொண்டாட வேண்டுமென்று திருத்தந்தையிடம் விண்ணப்பித்தார்கள். திருத்தந்தை அனுமதியளித்து அன்று முதல் உலகமெங்கும் கார்மேல் அன்னை திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது. கணக்கற்ற புதுமைகள் கார்மேல் அன்னை வழியாய் பெற்றிருக்கின்றனர்.

'AD jesum Per Mariam" (மாதாவின் வழியாய் இறை இயேசுவிடம் சென்றவர்களின் எண்ணிக்கை எத்தனை என்று கணிக்க முடியாது” “என் உத்தரியம் ஆபத்தின் கேடயம்” என்ற அன்னை திருவுளம் பற்றியது போல சோதனை வேளைகளில் தாங்கள் அணிந்திருக்கும் உத்தரியத்தினால், சோதனைக்கு உட்படாதபடி காப்பாற்றப்பட்டதாக இறைமக்கள் உணர்ந்தனர்.

திருமறையின் அங்கீகாரம் பெற்று இறை மக்களால் தற்போது உபயோகப்படுத்தி வரும் உத்தரியங்கள் சுமார் 18 இவற்றுள் மிகப் பழைமை வாய்ந்ததும், உலகெங்கும் பரவியிருப்பதுமான உத்தரியம் “கார்மேல் மாதா உத்தரியம்” இன்று பிள்ளைகளுக்கு அருள்சாதனங்களில் ஒன்றான “முதல் நன்மை” கொடுத்தும், உத்தரியத்தை கழுத்தில் போட்டுவிடுவது உலகமெங்கிலுமுள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ நாடுகளில் வழக்கமாக இருந்து வருவதை நன்கறியலாம்.

நமது நாட்டிலும் தொன்று தொட்டு இந்தப் புனித பழக்கம் உள்ளது. உத்தரியம் அணியச் செய்வது அன்னை மரியாளுக்குப் பிரியமான செயலாகும். தற்காலத்தில் பயணிக்கும் அனைவருக்கும் பொக்கெட்டுகளிலும், ஆடைகளில் வைக்கும் வகையில் சிறிய உத்தரியங்கள் உள்ளன. அவை அர்ச்சிக்கப்பட்டவை. ஆபத்து, விபத்து ஆகிய நேரங்களில் அவை நம்மைக் காக்கின்றன. ஆதலால் உத்தரியத்தின் உன்னதத்தினை அறிந்த கார்மேல் அன்னையிடம் நம் விண்ணப்பங்களைக்

# உண்மை உறைக்கும்

கமிலஸ்





# குருத்துவ துறவற வாழ்வு

வசந்தத்தில் வாழ்வதற்கல்ல, மாறாக கசந்த பணியை செய்வதற்கு விடுக்கப்பட்ட ஓர் உன்னத அழைப்பு. இது ஒரு பலி வாழ்வு. இறைவனுக்கென்று பலியாவதற்காக உலகினின்று பிரித்து வைக்கப்பட்டவர்கள் தான் குருக்களும் / துறவியர்களும். இறைவனுக்கு சேவை புரிவதையே முழு மூச்சாகக் கொண்டு வாழ தனது ஆளுமை, சக்திகள் செயல்கள் யாவற்றையும் "இறைவனுக்கே சொந்தம்" என்று வாழத் தெரிந்தவர்கள்.

- ☆ மெழுகுதிரி போன்று தன்னையே பிறர் வாழ்வின் வசந்தத்திற்காக உருக்கிக் கொள்கின்ற வாழ்வு
- ☆ உப்பைப் போன்று பிறர் வாழ்வு சுவைப்பட தன்னையே கரைத்துக் கொள்கின்ற வாழ்வு
- ☆ பஞ்சு போன்று புரையோடிக்கிடக்கின்ற இச்சமுதாயத்தின் புண்களைத் துடைக்கின்ற வாழ்வு

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் துறவறத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றார்.

"நற்செய்தியின் தீவிரத்தன்மை துறவறத்தோருக்கு மட்டும் உரிய ஒன்றல்ல, அது இறைநம்பிக்கையாளர்கள் அனைவரிடமும், எதிர்பார்க்கப்படும், ஒன்றாகும். ஆனால் துறவறத்தோர் ஆண்டவரைச் சிறப்பான விதத்தில் பின் தொடர்கின்றனர். ஓர் இறைவாக்கினருக்குரிய சாட்சிய வாழ்வையே நான் உங்களிடம் எதிர்பார்க்கின்றேன். இருபால் துறவியர்கள் உறக்க நிலையில் உள்ள உலகை உசுப்பி எழுப்புபவர்களாக இருக்க வேண்டும்.

அர்ப்பண வாழ்வு, இயேசுவுக்கு சாட்சியம் பகரும் வாழ்வு, மாறிவரும் காலச் சூழ்நிலைகளுக்கேற்ப மக்கள் கடவுளை மறந்து வெகு தொலைவில் விலகிச் சென்று கொண்டிருக்கின்ற இக்காலத்தில் துறவியர்கள், குருக்கள், தங்கள் அர்ப்பண வாழ்வை, புதுப்பணிகளை சவால்களுக்கேற்ப புதுப்பித்துக்கொள்ள வேண்டும். உறக்க நிலையில் உள்ள உலகைத் தங்கள், வார்த்தைகளால் அல்ல சாட்சிய வாழ்வினால் கட்டியெழுப்ப வேண்டும். துறவற குருத்துவ வாழ்வு இலக்கற்ற பொறுப்பற்ற வாழ்வு அல்ல, மாறாக தனது இன்ப, துன்பம் அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்துவிட்டு இறைவனில் ஏழைகளுக்கு ஆற்றும் பணியில் மகிழ்வைக் காணத் துடிக்கும் வாழ்வாகும்.

மாறிவரும் உலகில் துறவியர்கள் வித்தியாசமானவர்களாக வாழ்வது சாத்தியம் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். ஏனெனில் அர்ப்பண வாழ்வு வாழ்வோர், இறைவாக்குப் பணியை அடிப்படையாக் கொண்டு வாழ அழைக்கப்படுகின்றார்கள். மக்களை மறந்தவர்களாக மக்களை கைவிட்டுவிட்டு நிறுவனங்களை காப்பதில் காலத்தை விரயமாக்கும், குருத்துவ துறவற நிலை சாத்தியம் இன்றைய ஒரு பெரிய சவாலாகும்.

குருகுலத்தார் மற்றும் துறவறத்தார், மத்தியில் காணப்படும் சாதியம் பணம் பதவி, இரக்க -மற்றதன்மை, குழுமனப்பான்மை, அதிகாரம் போன்ற தீமைகள் சாட்சிய வாழ்வுக்கு எதிரானவையாக உள்ளன. இதற்கு மாறாக திருச்சபை வாழ்வில் பங்கு கொண்டு, விவிலியம், மறைக்கல்வி, திருவழிபாடு, மறைக்கோட்பாடு, மறைப்பணி, கிறிஸ்தவ ஒன்றிப்பு, நற்செய்தி அறிவிப்பு, சமூக ஈடுபாடு போன்றவற்றை தமதாக்கிக் கொண்டு பணியாற்ற சாட்சியம் பகர இரண்டாம் வத்திக்கான் சங்கம் அறிவுறுத்துகிறது.

## குருவானவர்கள் யார்?

குருவானவர்கள் யார்? மனிதனைப் புனிதனாக மாற்றிட, புனிதராம் கடவுள் மனிதனானார். மனித அவதாரம் எடுத்த இறைமகன் இயேசுவின் இலட்சியம் நிறைவேற, அவரது பாதச்சுவடுகளைப் பின்பற்றி, ஒவ்வொரு மனிதனையும் புனிதனாக்கும் புனிதப்பணி செய்பவர்கள் குருக்கள், ஞான வாழ்வில் ஒரு முனையில் கடவுளும், மற்றொரு முனையில் மனிதனும் இரு துருவங்களாக இடம் பெற்றுள்ளனர்.

ஞான வாழ்வில் கடவுளின் பங்கு என்ன? கடவுள் தன் ஏகமகன் கிறிஸ்துவின் மூலமும், திருச்சபையின் மூலமும், தன்னையே மனிதனுக்கு கொடுக்கச் சித்தமானார். கடவுள் இச்சித்தத்தை நிறைவேற்றுவதில் கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் கடவுளின் பிரதிநிதியாயிருந்து பணிபுரிபவர் குருவானவர்.

ஞான வாழ்வில் மனிதனின் பங்கு என்ன? கிறிஸ்து, திருச்சபை ஆகியவர்கள் மூலமாகவே கடவுளை அடைய வேண்டும் என்பது மனிதனின் குறிக்கோள். இக்குறிக்கோளை நிறைவேற்ற மனிதனுக்கு வழிகாட்டியாக இருப்பவர் குருவானவர். இவ்வாறு ஞான வாழ்வில், கடவுள் மனிதன் என்ற இரு துருவங்களிடையே, கடவுளின் பிரதிநிதியாகவும், மனிதனின் வழிகாட்டியாகவும், புனித பணியாற்றும் மைய ஸ்தானத்தை வகிப்பவர் குருவானவர். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில், கிறிஸ்துவின் பெயராலும், அவரது திருச்சபையின் பெயராலும் புனித பணியாற்றுபவர் குருவானவர். மனிதன் தனது மாதா பிதா, இணைப்பில் உருவாகி, வளர்ந்து தனது படைப்பின் நோக்கமாகிய இறைவனை அறிதல் அவரை சிநேகித்தல், அவருக்குச் சேவை செய்து, இறுதியில் மோட்ச பாக்கியத்தை அடைதல் ஆகியவற்றை நிறைவேற்றுவதில் அவனையும் தெய்வ சந்நிதானத்தை அடைய உதவும் ஒரு ஏணியாகவும் செயலாற்றுபவர் தான் குருவானவர். ஆகவே தான் மாதா, பிதா, குரு தெய்வம் என்ற வரிசையில் மைய ஸ்தானத்தை பெற்றுள்ளார் குரு.

இரண்டாம் வத்திக்கான் சங்கத் திருவழிபாடு குறிப்பில் கூறப்பட்டுள்ளது : தாயாம் திருச்சபை விசுவாசிகளுக்கு விசுவாசத்தையும், மனந்திரும்புதலைப் பற்றியும் போதித்து, அவர்கள் திருவருட்சாதனங்களைத் தகுந்த முறையில் பெற தயாரிக்க வேண்டும். கிறிஸ்து கட்டளையிட்டுள்ள அனைத்தையும் அனுசரித்து, பிறரன்பு, அப்போஸ்தலத்துவம், பக்தி முயற்சிகளில் அவர்கள் வளர படிப்பிக்க வேண்டும் இக்கட்டளைகளை திருச்சபையின் பெயரால் நிறைவேற்றபவர்கள் குருவானவர்கள். உலகமெங்கும்போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள் (மாற் 16:15( என்ற இறைமகன் இயேசுவின் கட்டளைக்குப் பணிந்து, எல்லா மக்களுக்கும் எல்லாக் காலங்களிலும் நற்செய்தியை அறிவிக்க பாடுபட்ட அப்போஸதலர்களின் வாரிசுகளான ஆண்டவரின் கட்டளையை இன்னும் செயல்படுத்தும் கடமை வீரர்களாக பணியாற்றுபவர்கள் குருக்கள்.

ஆகவே சுதேச குருக்கள் தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், பெற்றோர்களே, குடும்பங்களில் இருந்து பிள்ளைகளை இந்த மேன்மையான தேவ அழைப்பை பெற மனமுவந்து உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள். உங்கள் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக மாறும்.

## சிந்தனைக்கு

- ✳ குருத்துவத்தின் மேன்மையைப் பற்றி சொல்லப்போனால் புனிதர்கள் அனைவரும் அதை வானளாவ வாழ்த்துக்கின்றார்கள்
- ✳ நான் ஒரு குருவையும், தேவ தூதனையும் ஒரே சமயத்தில் சந்தித்தால், குருவுக்கு முதலில் வணக்கம் செலுத்துவேன். ஏனென்றால் தேவதூதன் தன் கடவுளின் அன்பன் மட்டுமாகும். குருவோ கடவுளுக்குப் பதிலாக உள்ள ஆள்" என்று புனித அசிசிரியார் கூறுகிறார்.
- ✳ குருக்களின் பெருமை அற்புதமானது. குருக்களுடைய கரங்களில் இறைமகன் இயேசு, மனித அவதாரம் செய்கின்றார் (புனித அகுஸ்தினார்
- ✳ தேவதாயே நீவீர் எனக்கு மன்னிப்புத் தாரும், நான் உமக்கு எதிராகச் சொல்லவில்லை. கடவுள் குருத்துவத்தை உமக்கும் மேலாக உயர்த்தி இருக்கிறார் (புனித பெர்னார்டு)
- ✳ சபையினுடைய மகத்துவமும், அசைக்க முடியாத தொடக்கமும் குருக்கள் தான் (புனித புரோஸ்பர்)

## 01 எமது கத்தோலிக்க....

நமது கத்தோலிக்க விசுவாசிகளை தமது பிரிவின சமய குழுக்கனுள் உள்வாங்குவதில் இப்பிரிவினை வாதிகள் மிக மும்முரமாக செயற்படுகிறார்கள். இச்செயற்பாடு சில பங்குகளில் மிகவும் பிறதளவில் தீவிர நிலையை அடைந்துள்ளது குறிப்பாக இந்நிலைப்பாடானது ஆங்கில, தமிழ் மொழி பேசும் மக்களிடையே மிகத்தீவிர நிலை அடைந்திருப்பதை, எனது பங்குத்தள தரிசிப்பின்போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது. மேலும், வினையாளுமை ஏற்பாடோடிணைந்த ஒரு தீவிர செயற்பாட்டு முறையை, மத மாற்றக் கொள் -கையை அடிப்படையாக கொண்டு AGO Calvary (கல்வாரி) king Revival Curch போன்றோர். கந்தானை, ஜா-எல பட்டகம பகுதிகளிலும், நீர்கொழும்பு ஆகிய பகுதிகளிலும் தீவிரமாக செயற்படுவருவதை என்னால் கவனிக்கக் கூடியதாக இருந்தது. உள்ளத்தின் ஆழத்தில் அறிவு இன்மையாலும், தம் நம்பிக்கையில் முழு மன உறுதிப்பாடும் இல்லாமையினாலேயே நமது கத்தோலிக்க மக்கள், இவர்கள் காட்டும் மாய வலைகளுக் சிக்கி விடுகின்றார்கள். எனவே நம்மிடம் நமது கரிசனை நிறை பங்களிப்பை மிக உன்னிப்பான முறையில் மும்முரமாக செயற்பட வேண்டியவர்களாகின்றோம். அனைத்துக்கும் மேலாக அவர்களோடு மிக நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். நமக்கென சட்ட ஒழுங்கு முறைகள் இருப்பதை நாம் அறிவோம். ஆனால் அவ் உள்ளார்ந்த விதிமுறைகள் பற்றிய அறிவை, அவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் மனித மாண்பு நிறை இரக்கத்தோடு அறிவூட்டுவது நமது தலையான கடமையாகும். நாம் ஒருபொழுதும் நம் பங்கு மக்கள் மட்டில் புரிந்துணர்வு அந்த முறையில் அவர்களை எதிர்த்தோ, கடுமையான சொற்களால் அவர்களுக்கு சினமூட்டியோ அவர்களோடு ஈடுபாடு அற்றவர்களாக, நமது பங்கு மனைகளில் சிறைவாசம் செய்யாது, மாறாக தொலைந்துபோன ஆட்டைத்தேடி அலையும் நல்லாயர்கள் நாம் என்பதை, பங்குசார் வீதிகளில் வலம் வந்து, குடும்பங்களை தரிசிப்பதன் மூலம் நிஜப்படுத்த முயல வேண்டும். பங்குத்தள செயற்பாடுகளை முறையே திட்டமிடுங்கள், திருப்பலிகளை, குறிப்பாக ஞாயிறு திருப்பலிகளை திறம்பட ஆயத்தப்படுத்துங்கள், மிக அக்கறையோடு ஆயத்தப்படுத்திய செபத்தியானத்தில் மக்களை ஈடுபடுத்தப்படக்கூடிய ஞாயிறு திரு உரைகளை மக்கள் முன் வையுங்கள். ஞாயிறு திருப்பலிகளை ஓர் மகிழ்ச்சிகரமான அனைவரும் ஈடுபாட்டோடு பங்கு பற்றக்கூடிய நல்ல பொருத்தமான பாடல்களோடு மெருகூட்டப்பட்டதொன்றாக அமைவு பெற ஒழுங்கு செய்யுங்கள். விவிலிய வகுப்புக்களையும், மறையறிவு புகட்டல், ஏழைகளுக்கு உதவி செய்தல் என்பவற்றையும் ஒழுங்கு செய்யுங்கள். ஒப்புரவு அருட்சாதனத்தை பெற்றுப் பயன்பெற அவர்களுக்கு உற்சாகம் கொடுங்கள், நாம் மட்டுமல்ல, பொது மக்களும் திருமுழுக்கு அருட்சாதனம், வழியாக திருச்சபையின் பொது குருத்துவத்தில் பங்காளிகள் என்பதை மனதில் கொண்டு அவர்களது கருத்து வெளிப்பாடுகளுக்கும் மதிப்பளியுங்கள். திருநிலைப்பாட்டில் ஏகபோக தனியுரிமைய பெற்றவர்கள் நாம் மட்டுமே என அருட்பணியாளர்களாகிய நாம் எண்ணக்கூடாது பொது நிலையினரும் திருநிலைப்படுத்தப்பட்டு இயேசுவுக்கும் திருச்சபைக்கும் உரித்தானவர்களாக இருக்கிறார்கள்



# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா

18

அடுத்து கர்தினால் அகாகியானியானும் பேராயர் சிஜிஸ்மோண்டி என்பவரும் சேர்ந்து சபையின் சட்ட திட்டங்களை அலசிப் பார்க்கத் தொடங்கினர். அன்னை கொடுத்த செபநூலையும் ஆராய்ந்து பார்த்தனர். "இந்நூலுக்கு அச்சிடலாம் என்னும் அனுமதி வழங்கப்படவில்லையே!" என்றார் பேராயர் சிஜிஸ்-மோண்டி. "அவர்கள்தான் பரம ஏழைகளாயிற்றே!" என்றார் கர்தினால் அகாகியானியான் கிண்டலாக. அதற்குள் செபநூலின் மற்றொரு பிரதியை நீட்டினார் அன்னை. அதன் அட்டையின் உட்புறத்தில் "அச்சேற்றத் தடையில்லை" என எழுதப் பெற்றிருந்தது. அதன் அடியில் வான் எக்செம் என்னும், அச்சேற்றலாம் என்னும் சொற்களுக்கடியில் சிலுவை அடையாளத்துடன் பெர்டினான்ட் பெரியெர், கல்கத்தா பேராயர் என்றும் எழுதப்பெற்றிருந்தது. இதைப் பார்த்த கர்தினால் அகாகியானியானும், பேராயர் சிஜிஸ்மோண்டியும் அன்னையின் சபைக்குப் பாப்பரசர் சபை என்னும் பதவியை விரைவில் வழங்க இசைந்தனர்.

உரோம் நகரில் தமது முக்கியமான அலுவலை முடித்த மனநிறைவுடன் அன்னை கல்கத்தா திரும்பினார். அன்னையின் முதல் வெளிநாட்டுப் பயணம் பலவிதத்தில் பயணளித்தது. அ∴து அன்னை தெரசாவுக்கும் அமெரிக்க நாட்டு மக்களுக்கும் இடையே நிரந்தரமான ஓர் உறவை ஏற்படுத்தியது. லாஸ் வேகாஸ் தேசிய மகளிர் மாநாட்டில் அன்னைக்கு கிடைத்த அனுபவம் 1976ம் ஆண்டு பிலடல்பியாவில் நடந்த சர்வதேச நற்கருணை மாநாட்டின் போது எட்டாயிரம் பேர்கொண்ட கூட்டத்திலும், பின்னர் 1980ஆம் ஆண்டில் மெல்போன் நகரில் நடந்த அனைத்துலக நற்கருணை மாநாட்டின் போது ஐம்பதாயிரம் மக்கள் கொண்ட கூட்டத்திலும் பேசத் தைரியம் அளித்தது.

அத்துடன் தனக்குதவி செய்துகொண்டிருந்த பல நிறுவனங்களின் தலைவர்களையும் அவரால் நேரிலேயே பார்க்க முடிந்தது. எடுத்துக் காட்டாக, உலகின் பல இடங்களில் பணிபுரிந்து வருகிறது கத்தோலிக்க நிவாரணச் சேவைச் சங்கம் என்னும் மாபெரும் இயக்கம். இது இந்தியாவிலும் செயல்பட்டு வருகிறது. இதன் தலைவர் எட்வர்டு ஸ்வான்ஸ்ட்ரோம் என்பவரை அன்னை சந்தித்துத் தம் பணிகளுக்கு உதவிட வேண்டுகோள் விடுத்தார். இல்லிநாயிஸில் பெயோரியா நகரிலுள்ள மகளிர் சங்கம் கல்கத்தாவில் இயங்கிவரும் தாய் சேய் நலத்திட்டங்களுக்குப் புரிந்துவரும் பலவித உதவிகளை நினைவுபடுத்தி மேலும் உதவிடுமாறு வேண்டினார்.

ஜெர்மன் நாட்டிலுள்ள "கரித்தாஸ்" மற்றும் "மிசரெயோர்" நிறுவனங்களுடன் அன்று அன்னை தெரசா கொண்ட தொடர்பு அவர் இந்தியாவிலும் ஆப்ரிக்காவிலும் புரிந்துவரும் பணிகளுக்கு பலவிதத்-திலும் உதவியாக இருந்தது. சகோதரி அந்திரேயாவின் சொந்த ஊராகிய ∴பிரிபர்க்கில் அன்னைக்கு வரவேற்பு ஒன்று அளிக்கப்பட்டது. அவ்வேளையில் அந்நகர மக்கள் அன்னைக்கு அளித்த 1,50,000 ஜெர்மன் மார்க்குகளைக் கொண்டு டில்லியில் இறக்கும் தருவாயிலுள்ளோர் விடுதி ஒன்று நிறுவ முடிந்தது. நியூயார்க் நகரில் லியோ விடுதியில் தங்கியிருந்த போது அன்னை டெங்காலைச் சந்திக்க நேர்ந்தது தெரசாவுக்குக் கிடைத்த பெரும் பேறுகளில் ஒன்று. இறுதியாக உரோம் நகருக்குச் சென்று கர்தினால் அகாகியானியானையும் பேராயர் சிஜிஸ்மோண்டியையும் சந்தித்ததுதான் தெரசாவின் சபை சர்வதேச சபையாக உயர்த்தப்படுவதற்கு முதற்படியாக இருந்தது. இங்ஙனம் அன்னை தெரசாவின் முதல் வெளிநாட்டுப் பயணம் எல்லாவிதத்திலும் வெற்றிகரமாக முடிந்தது.

1962ம் ஆண்டில் திருத்தந்தை 23ஆம் அருளப்பர் இரண்டாம் சத்திக்கான் திருச்சங்கத்தைக் கூட்டினார். இத்திருச்சங்கத்தினால் திருச்சபை அடைந்த நலன்கள் எண்ணிலடங்கா. இத்திருச்சங்கத்தினால் விளைந்த மற்றொரு நலனை அதைக்கூட்டிய திருத்தந்தையோ அதில் பங்கேற்க வந்த சங்கத் தந்தையர்களோ கனவிற்கூட நினைத்திருக்க முடியாது. அதுதான் திருச்ச-ங்கத்தினால் அன்னை தெரசா அடைந்த நலன்.

வத்திக்கான் பொதுச்சங்கத்தில் கலந்திட உலகின் கண் உள்ள எல்லா ஆயர்களும், பேராயர்களும் கர்தினால்களும் உரோமையில் ஒன்று கூடினார்கள். இடைவேளைகளில் அவர்களுக்குக் காப்பி அருந்த புனித பேதுருப் பேராலயத்துப் பக்கத்தில் ஒரு "காப்பி பார்" அதாவது சிற்றுண்டி உணவகம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சிற்றுண்டி உணவகத்துக்குச் சங்கத் தந்தையர்கள் சூட்டியிருந்த பெயர் "பார் ஜோனா". இது விவிலியத்தில் வரும் சொற்றொடர். அந்தப் பார் இச்சபை பரவியிருந்ததை நம்மால் காணமுடிகிறது. சர்வதேசச் சபையாக உயர்வு அடைந்த பின் இச்சபை கண்ட வளர்ச்சியை தொடர்ந்துவரும் அதிகாரங்களில் பார்ப்போம்.

அன்னை தெரசாவின் சபை 1965ஆம் ஆண்டு மாசி திங்கள் முதல் நாள் சர்வதேசச் சபையாக உயர்வு பெற்றது. அன்று முதல் அச்சபை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரத் தொடங்கியது. இதுவரை பாரத நாட்டுக்குள்ளே கிளைகளைக் கொண்டிருந்த இச்சபை ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி வெளிநாடுகளிலும் கிளைவிடத் தொடங்கியது. அதன் முதல் வெளிநாட்டுக் கிளை முளைத்தது வெனசுவேலா நாட்டில்தான்.

## உழைப்பினால் வந்த உறவு

ஜோனாவில் காப்பி அருந்திக்கொண்டிருந்தனர் இரு ஆயர்கள். அவர்களுள் ஒருவர் வெனசுவேலா நாட்டின் ஆயர் பெனீட்டஸ். மற்றவர் புதுடில்லியில் பாப்பானவரின் இந்திய நாட்டுத் தூதுவராகப் பணியாற்றி வந்த பேராயர் ஜேம்ஸ் நாக்ஸ்.

வெனசுவேலாவில் செம்புச் சுரங்கங்கள் ஏராளம். இச்சுரங்கங்களில் வேலை செய்துவரும் ஆப்பிரிக்கர்களைக் கவனிக்க அருட்சகோதரிகள் தேவை என பெனீட்டஸ் ஆண்டகை பேராயர் நாக்சிடம் கூறியிருக்கிறார். நாக்ஸ் பேராயருக்கு உடனே நினைவில் வந்தவர் அன்னை தெரசாதான். அன்னையின் சகோதரிகள் இந்நியாவில் செய்துவரும் பணிகளைப் பற்றி பேராயர் நாக்ஸ் வெனசுவேலா ஆயருக்கு எடுத்துரைத்தார். எளிய வாழ்க்கை நடத்துபவர்கள். மிகவும் ஏழைகளாக இருப்போர் மத்தியில் பணி செய்பவர்கள் என அடுக்கிக்கொண்டே போனார் பேராயர் நாக்ஸ். அதன் வினைவு என்னவாயிற்று? வெனசுவேலா ஆயர் பேராயர் மூலமாக அன்னை தெரசாவுக்கு ஓர் அழைப்பை விடுத்தார் வெனசுவேலாவுக்குச் சென்று பணிபுரிவதற்கு.


ஆனால் தெரசாவின் சபை இன்னமும் மறை மாநிலச் சபையாகவே இருந்து வந்தது. அதனால் அது இந்திய நாட்டிற்கு வெளியே சென்று பணிபுரிய முடியாத நிலைமையில் இருந்தது. ஆகவே, அதைப் பாப்பானவரின் சபையாக உயர்த்த வேண்டியது அவசியமாகிவிட்டது. பேராயர் நாக்ஸ் அதற்கு ஏற்பாடு செய்ய முன்வந்தார்.

அவர் உரோம் நகரிலிருந்த கர்தினால் அகாகியானிடம் தொடர்பு கொண்டார். அன்னை கர்தினாலிடம் கொடுத்து வைத்திருந்த சபையின் சட்டதிட்டங்களை அவர் விரிவுபடுத்திப் பாப்பானவரின் அங்கீகாரத்துக்காக அனுப்பிவைத்தார். அதன் விளைவாக "டெக்ரேத்தும் லவுடிஸ்" (Decretum Laudis) என்னும் பாப்பானவரின் அதிகாரப்பூர்வமான அறிக்கையின் வாயிலாக தெரசாவின் சபைக்கு 1965ஆம் ஆண்டு மாசி திங்கள் முதலாம் நாள் சர்வதேசச் சபையாக அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இங்ஙனம் நெடுநாள் எதிர்பார்ப்புக்களுக்குப் பின் அன்பின் பணியாளர் சபை சர்வதேசச் சபையாக உயர்வு அடைந்தது. 1965ஆம் ஆண்டு மாசி முதலாம் நாள் இச்சபையின் வளர்ச்சியில் ஒரு மைல்கல். அப்போது சபையில் 300 உறுப்பினர் இருந்தனர். 22 கிளைகளைக் கொண்டிருந்த இச்சபை இந்தியா முழுவதுமே பரவியிருந்தது.

இதன் முதற்கிளை 1959இல் இராஞ்சியிலும், இரண்டாவது கிளை டில்லியிலும் ஏற்கனவே நிறுவப்பட்டிருந்தன. அடுத்து 1960இல் உத்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள ஜான்சியிலும், ஆக்ராவிலும் கிளைச் சபைகள் உருவாயின. 1961இல் அசன்சோளில் ஒரு மடம் நிறுவப்பெற்றது. அதன்பிறகு டிட்டாகூரில் சாந்திநகர் தொழுநோயாளர் குடியிருப்பு தொடங்கப் பெற்றது. அதையடுத்து பஞ்சாப் மாநிலத்தில் அம்பாலாவிலும், பீகார் மாநிலத்தில் பகல்பூரிலும் இருமடங்கள் நிறுவப்பெற்றன. 1962இல் மகாராஷ்டிரா மாநிலத்தில் அமராவதியிலும், 1963இல் பீகாரிலுள்ள பாட்னாவிலும், மத்தியப் பிரதேசத்திலுள்ள ரயிகாரிலம் மடங்கள் தொடங்கப்பெற்றன. 1964இல் மட்டும் நான்குப் புதுக்கிளைகளைத் திறந்தார்கள். அதையடுத்து வடக்கு டார்ஜீலிங்கிலும், பின்னர் எ∴கு நகராகிய ஜம்ஷெட்பூரிலும், இந்தியாவின் வெனிஸ் என அறியப்படும் கோவாவிலும், தென்கோடியிலுள்ள கேரள மாநிலத்தின் தலைநகராகிய திருவனந்தபுரத்திலும் ஒவ்வொரு கிளைகளைத் தொடங்கினார்கள். மேற்கு வங்காளத்தில் நிர்மல் ஹிருதய் விடுதி, சிசுபவன், தாய் மடமாகிய மூன்று நிறுவனங்கள் ஏற்கனவே இயங்கி வந்தன.

இதைக் கவனிக்கும் போது இந்திய நாட்டின் தென்கோடி முதல் வடகோடி வரையிலும், கிழக்கு வங்காளத்திலிருந்து மேற்கு மகாராஷ்டிரம் வரையிலும்



வெனசுவேலா தென் அமெரிக்காவின் வடபகுதியில் கரீபியன் கடற்கரையில் அமைந்துள்ள வளமான நாடு. மேற்குப் பகுதியில் கொலம்பியாவையும் தெற்குப் பகுதியில் பிரேசிலையும் கிழக்குப் பகுதியில் பிரிட்டீஷ் கயானாவையும் எல்லைகளாகக் கொண்ட இந்நாட்டைக் கண்டுபிடித்த பெருமை கொலம்பசையே சாரும். அவர் பெயரைத்தான் கொலம்பியாவுக்குச் சூட்டியிருக்கின்றனர். ஸ்பெயின் நாட்டிலிருந்து மேற்கு நோக்கிப் புறப்பட்ட இவர் 1492ஆம் ஆண்டு ஆவணி திங்கள் முதல்நாள் இந்நாட்டின் கடற்கரையை வந்தடைந்தார். அவர் ஸ்பெயின் நாட்டினின்று புறப்பட்டு வந்ததால் இஸ்பானியர் பலர் இங்கே குடியேறினர். குடியேறினவர்கள் இந்நாடு நீர்வளம் நிறைந்த வெனிஸ் நகர் போல் இருக்கக்கண்டு இதற்கு "சிறுவெனிஸ்" எனப் பொருள்படும் வெனசுவேலா எனப் பெயரிட்டனர்.

இந்நாடு இயற்கை எழில் நிறைந்தது. உலகிலேயே மிக உயரமான நீர்வீழ்ச்சி இங்கேதான் உள்ளது. நயாகரா நீர் வீழ்ச்சியைப் போல் இருபது மடங்கு உயரம்கொண்ட "ஏஞ்செல்" நீர்வீழ்ச்சியைக் கண்டுகளிக்கக் கண்கள் கோடி வேண்டும். உலகிலேயே மிக உயரமான கட்டங்கள் கோலாலம்பூரிலுள்ள பெட்ரோனாஸ் கோபுரங்கள். அவற்றின் உயரம் 1536அடி. ஆனால், "ஏஞ்செல்" நீர்வீழ்ச்சியின் உயரமோ 3212 அடி. ஆரிநோக்கோ என்னும் நதி இந்நாட்டின் மேற்கு மலைத் தொடரில் உதயமாகி நாட்டை நன்கு வளப்படுத்திக் கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலில் சங்கமமாகிறது.

இந்நாட்டின் தலைநகர் காரக்காஸ். இங்கே பேசப்படும் மொழி இஸ்பானிய மொழி. பெரும்பான்மை மக்கள் கிறிஸ்தவர்கள். ஸ்பெயின் நாட்டிலிருந்து இங்கே குடியேறினவர்கள் காரக்காஸ் போன்ற நகர்ப் பகுதிகளில் வளமுடன் வாழ்கின்றனர்....

15ம் பக்கம்

தொகுப்பு
அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்



# ஒவ்வொருவருக்கும் உளவியல்



## வைத்தியக்கார்களுக்கு மட்டும்தான் மன நல மருத்துவமா! மற்றவர்களுக்குத் தேவையே இல்லையா?

மன நோயாளியைப் பற்றிய நமது சமூகப் பார்வை மிக மிகத் தவறானதாகவே இருக்கிறது. நம் சொந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மன நோயாளியைக்கூட நாம் ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறோம். அவர்களை மதிப்பதில்லை. மன நல மருத்துவரிடம் கூட்டிச் செல்வதில்லை. அவர்களைக் கட்டிப்போட்டுத் துன்புறுத்துகிறோம்! அடித்து உதைக்கின்றோம். கடவுள் முன் அவர்களைக் கட்டிப்போட்டு வதைக்கின்றோம்.

இந்த மனப்பாங்கு மாற வேண்டும். உண்மையில் மனநோயும் ஒரு வகை உடல் நோய்தான். நரம்பு மண்டலக் குறைபாடு காரணமாக ஏற்படும் நோய்! மருந்து, மருத்துவம், அன்பு, பாதுகாப்பு மூலம் பெரும்பாலான நோய்களைக் குணப்படுத்த முடியும். மனநோயாளிகளில் மிகமிகச் சிறிய சதவிகிதத்தினர் மட்டும்தான் முரட்டுத்தனமாகச் செயல்படுவார்கள். இவர்களை மருத்துவமனைகளில் வைத்துக் குணப்படுத்தலாம்.

மூளை, நரம்பியல் குறைபாடுகள் இன்று எல்லாத் தரப்பு மக்களிடையிலும், எல்லா வயதிலும் கண்டறியப்படுகின்றன. மருத்துவம் மூலம் சரி செய்யப்படுகின்றன. மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகள்! தற்கொலை செய்து கொள்ள நினைக்கும் இளைஞர்கள்! நினைவாற்றலை இழக்கும் முதியவர்கள்! இவர்களுக்கெல்லாம் இன்று உளவியல் துணை நிற்கிறது!

இப்படிப்பட்ட நரம்பியல், குறைபாடுகள் உள்ளவர்களுக்கு மட்டும்தான் உளவியலா? இல்லை எல்லோருக்குமா! நம் ஒவ்வொருவருக்கும் உடல் நலம் எவ்வளவு முக்கியமோ அதேபோல் மன நலமும் முக்கியம்! உடல் நலத்தைப் பாதுகாக்க பல வழிகள் இருப்பதுபோல் மன நலத்தைப் பாதுகாக்கவும் பல வழிகளை நமது முன்னோர்கள் கற்றுத் தந்திருக்கிறார்கள். இறை வழிபாடு நமது மன நலத்திற்குப் பெரிதும் பயன்படுகிறது! தோல்வியையும் துன்பத்தையும் கண்டு துவண்டு போகாமலிருக்க வழிபாடு துணை நிற்கிறது!

வெற்றிக் களிப்பில் வரும் ஆணவத்தால் நாம் அழிந்து போகாமல் இருக்கவும் தன்னடக்கத்தை வளர்க்கவும் வழிபாடு பயன்படுகின்றது. மன அழுத்தம், மன இறுக்கத்தைக் குறைக்கத் தியான முறைகள் பயன்படுகின்றன! எத்தனை எத்தனை வகையான தியான முறைகள்! அவற்றுக்கு உலகெங்கும் இன்று எவ்வளவு பெரிய வரவேற்பு!

இப்படிக் காலம் காலமாக நமது மனநல வளர்ச்சிக்குப் பயன்பட்டு வந்த வழிபாடு, தியானம், தத்துவம் சார்ந்த பல்வேறு முயற்சிகளின் இன்றைய அறிவியல் வடிவம்தான் உளவியல். இன்றைய உளவியல் வல்லுநர்கள் நோயாளிகளுக்கு மருத்துவம் பார்ப்பதோடு நிற்பதில்லை.

இன்றைய அவசர உலகில், உணர்வுகள் பாதிக்கப்பட்டு, உறவுகள் சிதைவடைந்து வாழும் பலருக்கும் உளவியல் மருத்துவம் செய்கிறது. அத்தோடு ஆலோசனையும் கூறி வழிகாட்டுகிறது. பாடசாலை, கல்லூரிகளில் மனநல வழிகாட்டிகள்!

குடும்பச் சிக்கல்கள், கணவன், மனைவி, குழந்தைகளின் உறவு மேம்பட உதவி! அலுவலக மன உளைச்சலிலிருந்து விடுபட வழிமுறைகள்! முதியவர் மனநலப் பயிற்சிகள்! மாணவர், தொழிலாளர்களுக்கான ஊக்குவிப்புப் பயிற்சிகள் இப்படி நம் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் உளவியல் வழிகாட்டுகிறது!

ஆன்மீகவாதிகள் பலரும் இன்று இந்த உளவியல் நெறிகளுடன் கலந்து நமக்கு வழிகாட்ட முன் வருகிறார்கள். நம் ஒவ்வொருவருக்கும் மனநலம் முக்கியம். ஆன்மீக வழியிலோ, உளவியல் வழியிலோ அல்லது இரண்டும் கலந்த வழியிலோ, நமது மன நலத்தைப் பேணி வளர்த்துக் கொள்வோம்.

நம் மனநலத்தைப் பேணி வளர்ப்பது எப்படி? நல்ல கேள்விதான்! இதற்கு விடை தேடும் முன்னால் வேறொரு கேள்வி!

### நமக்கு வாழ்க்கை இனிக்கிறதா? கசக்கிறதா?

**மனநோயும் உடல் நோயைப் போன்று அன்போடும் கனிவோடும் கவனிக்க வேண்டிய நோய்தான். வழிபாடு, தியானம், உளவியல் நெறிகள் பலவும் நம் மனநலத்தைக் காத்துக்கொள்ள வழி காட்டுகின்றன. நாம் ஒவ்வொருவரும் உடல் நலத்தைப் போல மனநலத்தையும் காப்போம். மாணவர் முதல் முதியவர் வரை மன அழுத்தம் ஏற்பட்டால் தயங்காமல் மருத்துவ ஆலோசனை பெறுவோம்.**






# கார்மேல் அன்னை திருவிழா

16.07.2017

கார்மேல் சபையின்
காவலியே!
கார்மேல் மலையின்
மிகவும் அழகிய மலரே
காத்திடுவாய் உம்
அன்புப் பிள்ளைகளை
கரம் குவித்து சிரம்
தாழ்த்தி தாயே உம்மை
வேண்டுகின்றோம்.

தேவநற்கருணையின்
தெய்வீக பேழையே!
தேவனின் தாயாய்
திருமகனை ஈந்தவளே!
தேவமகனின்
அன்னையே, மாசற்ற
கன்னி மரியே
தேடி வந்தோம் தாயே!,
உம் திருப்பாதம்
வணங்குகின்றோம்
தாயே!

ஓ! மாதாவே ஒளிர்
மிக்க விருந்துச்
சின்னமே,
ஓ! அன்னையே
மீட்பரின் தாயே
ஓ! பரலோக பூலோக
இராக்கினியே
ஓ! சென்ப
பாவமில்லாமல்
உற்பவித்த தாயே!

புனித அன்னையே,
புதுமை படைத்து
புவியைக் காப்பவளே,
புவியில் வாழும் உம்
கார்மேல் சபையின்
மலர்களை
புத்தம் புதிய மலர்களாய்
மலரச் செய்வாய் மரியே,
புகழ்ந்து பாடுவோம்
என்றும் உம் புகழ்தனை
தாயே!

பேரின்ப வீட்டின்
ஒளிர்கின்ற சிறப்பான
திராட்சை இரசமே
பேறுபெற்றவள் என
எலிசபெத்தினால்
புகழப்பட்டவளே
பேரருள் ஜோதியே
பிரகாசமாய் ஒளிரும்
பெட்டகமே!

பேரின்பம் பெற்றாய்
தாயே, பிள்ளைகள்
நாம் வணங்கி உம்மைப்
போற்றுகின்றோம்.

அம்மா சௌந்தரியே
தேடுவோர்க்கு
அடைக்கலமே
அன்னையே, எம்
அன்புத் தாயே
அணைப்பாய் உம்
அன்புப் பிள்ளைகளை
அளவுகடந்த அன்பிற்கு
இலக்கணமான தாயே!,
அடைக்கலம் தருவாய்
அடியோர்கள் எமக்கு
எந்நாளும் தாயே!

இறைமகனை
பெற்றெடுத்தாயே,
இறைவனின்
கன்னித்தாயே,
இருள் சூழ்ந்த
உலகிற்கு ஒளியாய்
உதித்திடுவாய் தாயே,
இகமதில் இனிதே
வாழும் உம்
மாந்தர்களை இனிதே
காப்பாய் அன்புத் தாயே
இதயங்களை உம்
இதயமாக மாற்றி
உம் திருமகன் பால்
திருப்பிடுவாய் தாயே!

உத்தரியம்
அணிந்தவர்களாய்
உம் அன்பைப்
பெற்றவர்களாய்,
உலகம் போற்றும் எம்
தாய்மரியே - இவ்
உலகின் மீட்பரை
எம்மவர்க்கு ஈந்தவளே,
உத்தமர்களாய் நாம்
வாழ உம் மகனிடம்
எமக்காய் வேண்டிடுவாய்

மரியே கார்மேல் மரியே,
காத்திடுவாய் கார்மேல்
சபையை
மாமரியே மாந்தர்கள்
எமக்காய் உம் மகனிடம்
நீ பேசு
மனுக்குலம் வாழ்ந்திட
உம் திருமகனிடம்
எமக்காய் நீ மன்றாடு
மாசற்ற தாயே உம்
துணையை நாடி
நிற்கும் எமக்காய்
இரந்து மன்றாடும் புனித
அன்னையே

**கார்மேல் கன்னியே**
**அருள்நிறை தாயே**
**வாழ்க**
**கார்மேல் மலையின்**
**இராக்கினியே நீ**
**வாழ்க வாழ்க**

**அருட்சகோதரி**
**டெலாறோஸ்**
**அ.கா**



# இறைவார்த்தை வழிபாடு

WLX

- பேதுரு -

## பொதுக்காலத்தின் 15வது ஞாயிறு (16.07.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 15வது ஞாயிறு தின திருவழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் இறை உள்ளங்களே! இன்றைய நற்செய்தியில் இயேசு நான்கு விதமான விளை நிலங்களை மனித உள்ளங்களோடு ஒப்பிட்டு உரையாற்றுகின்றார். வாழ்வு தரும் இறைவார்த்தையை விதையாக அறிமுகம் செய்கின்றார். வார்த்தையானது வயல் என்னும் மனித மனங்களில் விதைக்கப்படுகின்றன. ஆனால் அதைக் கேட்டு அதன்படி நடக்க நாம் தவறிவிடுகின்றோம். ஆண்டவருடைய வார்த்தை வல்லமையுள்ளது என்பதை முதல் வாசகம் எமக்கு சுட்டிக்காட்டுகின்றது. “கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது. இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது” என்கிறார் தூய பவுல் அடியார், ஆற்றல் மிக்க இறை வார்த்தையை நாம் அலட்சியம் செய்கின்றோம். அதற்கு காரணம் எம் மனங்களில் ஆசை, புகழ், செல்வம், பதவி, அந்தஸ்து, பணம், தற்பெருமை, ஆணவம் செருக்கு என்பன குடிகொண்டுள்ளன. எனவே இறைவார்த்தையை நம் இதயத்தில் ஏற்று நிதானமுடன் தியானித்து நற்கனி தருபவர்களாக நாம் வாழ இறையருள் வேண்டி இறைவனிடம் மன்றாட தொடரும் பலியில் பங்கேற்போமாக..

**முதல் வாசகம் : எசா 55:10-11**
மழை நிலத்தை நனைத்து விளையச் செய்கிறது

**பதிலுரைப் பாடல் :**
நல்ல நிலத்தில் விளைந்த விதைகளோ விளைச்சலைக் கொடுத்தன.

**இரண்டாம் வாசகம் : உரோ 8:18-23**
கடவுளின் மக்கள் வெளிப்படுத்துவதை காண்பதற்காக படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா இறைவனின் வார்த்தையே விதை அதை விதைப்பர் கிறிஸ்துவே, அதைக் கண்டடைபவர் எல்லாரும் என்றென்றும் நிலைத்திருப்பார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 13:1-23**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவார்த்தையை ஆதாரமாகக் கொண்டு தனது அனைத்துப் பணிகளையும் ஆற்றிவருகின்ற திருச்சபையானது, ஆன்மீக மனித நேய சமூகப் பணிகளை காலத்தின் தேவையறிந்து பணியாற்ற எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவருக்கும் வேண்டிய அருள் வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

உயிருள்ளதும், ஆற்றல் வாய்ந்ததுமான இறைவார்த்தையை எம் உள்ளத்தில் ஏற்று அதை வாழ்வாக்கி நல்ல நிலத்தில் விழுந்த விதைபோன்று பயன் உள்ள வாழ்வு வாழவும், நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் இறை வார்த்தையை அறிவிக்கவும், அதன்படி வாழத் தூண்டவும் தேவையான அருட்கொடைகளை எமக்குத் தந்தருள வேண்டுமென்று...

இறைவார்த்தை மனிதனின் மனங்களில் வேர் ஊன்றவில்லையெனில் மனிதன் தூயவனாகவோ இறையரசில் நுழையவோ முடியாது என்பதை உணர்ந்தவர்களாக எமது துன்ப துயரங்களின் மத்தியிலும் இறைவார்த்தை மீது நம்பிக்கை கொண்டவர்களாக வாழ்ந்து இறையரசை எம் மண்ணில் மலரச் செய்ய வரமருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 16வது ஞாயிறு (23.07.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 16வது வாரத்தின் முதல் நாளில் இறைவனுக்கு நன்றிப் பலி செலுத்த ஒன்று கூடிவந்துள்ள அன்பு நெஞ்சங்களே! இம் மண்ணுலகில் தனது தந்தையின் அரசாட்சியை நிறுவ வந்த இறைமகன் இயேசு தனது சீடர்களுக்கு விண்ணரசை நிறுவுவதற்கு எந்த முறைகளில் எல்லாம் தடைகள் வரும் என்பதை அழகான உவமையின் வழியாக எடுத்துக் கூறுகின்றார். நாம் எப்போது சோர்வடைகின்றோம் என்பதை தீயவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். சோதனைகள் மத்தியிலும் நாம் இறையரசை அமைக்கப் பாடுபட வேண்டும். அதற்கு நாம் எப்போதும் இறைவன் முன் விழிப்புடன் இருந்து செயல்பட வேண்டும் ஊதாரி மைந்தன் திரும்பி வருவான் என்ற ஏக்கத்தோடு வழிமேல் விழி வைத்து காத்திருந்த தந்தையைப் போல இறைவன் நமக்காக காத்திருக்கின்றார். களை பயிராக முடியாது ஆதலால் ஒரு பாவி இறைவனின் அருட்துணையோடு ஒரு புனிதராக முடியும். கொடியவர் தம் வழிமுறைகளையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டு அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும் நாமும் இவ்வுலக வாழ்வில் கடுகுவிதை புளிப்பு மா போன்று பயனுள்ள வாழ்வு வாழ வரம் வேண்டி பலியில் இணைவோம் பயன்பெறுவோம்.

**முதல் வாசகம் : சா.ஞா 12:13,16-19**
எம் பாவங்களிலிருந்து மனமாற்றம் அருள்கிறீர்

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே நீர் நல்லவர் மன்னிப்பவர்

**இரண்டாம் வாசகம் : உரோ 8:26-27**
தூய ஆவியார் தாமே நமக்காகப் பரிந்து பேசுகிறார்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா தந்தையே! விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே உம்மைப் போற்றுகின்றேன் ஏனெனில் விண்ணரசின் மறைபொருளை குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 13:24-43**
**அல்லது மத்தேயு 13:23-30**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இவ்வுலகில் தன் தந்தையின் அரசாட்சியை நிறுவவந்த இறைமகன் இயேசு திருச்சபையை உருவாக்கினார். அதை வழிநடத்திச் செல்லும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் இறைமகன் மீது நம்பிக்கை கொண்டவர்களாக விழிப்புடன் திருச்சபையை வழிநடத்திச் செல்ல வரமருள வேண்டுமென்று...

இறைவனின் திட்டங்கள் மனித ஞானத்திற்கு அப்பாற்பட்டவை என்பதை நாம் உணரவும் நாம் எமது தீய வழிகளில் இருந்த திருந்தி வாழவும், ஊதாரி மைந்தனைப் போல் மனமாற்றம் பெற்று புதுவாழ்வு பெற்றிடவும் இறைவனின் அருட்துணையோடு எம் வாழ்வை நடத்தவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று...

செபத்தால் கூடாதது ஒன்றுமில்லை. செபம் இறைவனோடு உறவாட துணைபுரிகின்றது என்பதை மறவாமல், செப வாழ்வில் நிலைத்திருக்கவும் நாம் நமக்காக மட்டுமன்றி நாட்டிற்காகவும் நாட்டு மக்களுக்காகவும் எம் அயலவர்களுக்காகவும் செபித்து வாழ வேண்டிய நல் மனதை தந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 17வது ஞாயிறு (30.07.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 1வது ஞாயிறு தினமான இன்று நாம் சுதேச குருக்கள் தினத்தை, நினைவு கூர்கின்றோம். சுதேச குருக்களின் இறையாட்சிப் பணி வாழ்வு சிறக்கவும் நம் நாட்டில் தேவ அழைத்தல் பெருகவும் மன்றாடுவோம். இயேசுவை தேடுவோம் அவரைக் கண்டடைய எல்லாவற்றையும் இழப்போம் கிறிஸ்து என்ற விலையுயர்ந்த புதையலை பெறுவோம். இறையரசு அழிந்துபோகும் ஒரு புதையலல்ல இறையரசு அழியாதது, என்றும் நிலைத்திருக்கக் கூடிய அன்பு அமைதி நீதி நேர்மை உண்மை உள்ள அரசு எல்லாவற்றிற்கும் மேலாக நம் ஆண்டராகிய இயேசு கிறிஸ்துவே நமது உள்ளத்தையும் இல்லத்தையும் ஆளும் அரசு. இறையாட்சி என்னும் புதையலை பெற இறையாட்சிக்குத் தடையாக இருக்கின்ற சிலவற்றை அழித்தாக வேண்டும். அன்பைப் பெற பகைமையை அழிக்க வேண்டும், அமைதியைப் பெற ஆரவாரத்தை அழிக்க வேண்டும், அருளைப் பெற ஆணவத்தை அழிக்க வேண்டும். இதையே இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கின்றது. எனவே இறையாட்சி எம் உள்ளங்களில் மலர நம் இதயங்கள் ஒன்றிணைந்து நற்செயல்களால் உழைக்க வரம் வேண்டி இறைவனிடம் மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : 1 அர 3:5, 7-12**
நீதி வழங்கத் தேவையான ஞானத்தை மட்டுமே கேட்டிருக்கின்றோம்

**பதிலுரைப் பாடல் :**
உமது திருச்சட்டத்தின் மீது எத்துணைப் பற்றுக் கொண்டுள்ளேன்.

**இரண்டாம் வாசகம் : உரோ 8:28-30**
தம் மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்க வேண்டுமெனக் கடவுள் முன் குறித்து வைத்தார்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே உம்மைப் போற்றுகின்றேன் ஏனெனில் விண்ணரசின் மறை பொருளை குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 13:44-52**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்து எனும் பெரும் புதையலை கண்டடைய நம் அனைவரையும் நடத்திச் செல்லும் தூய திருச்சபையையும் அதனை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் யாவரையும் நிறைவாக ஆசீர்வதிக்கவும், இவர்கள் நம் வாழ்வில் பெற்றுக்கொண்ட இறை அனுபவத்தை மக்களுக்கு வழங்கவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

எமது சுதேச குருக்களை நாம் மதிக்கவும், அவர்களுக்கு பக்கபலமாக உறுதுணையாக நாம் நடக்கவும், எமது நாட்டின் தேவ அழைத்தலுக்காக செபிக்கவும் கிறிஸ்து என்னும் புதையலை அடைவதை நோக்கமாகக் கொண்டு வாழவும் தீமைகளை விலக்கி மனச் சாட்சியின் குரலுக்கு செவி மடுத்து நன்மைகளை செய்யவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று..

உலகம் மீட்புப் பெற தன் உயிரை இழந்து இறையரசு என்னும் புதையலைப் பெற்றுத் தந்த இயேசுவைப் பின் செல்லும் நாமனைவரும் பகைமையை, அநீதியைப் ஆணவத்தை அகற்றி அன்பு, நீதி, அமைதி. உள்ளமக்களாக வாழவும் மற்றவர் வாழ்விற்காக எம்மை இழக்கவும் எம் மத்தியில் ஏழை எளிவர் நோயாளர் போன்வறவர்களுக்கு எம்மால் இயன்ற உதவிகள் புரியவும் வேண்டிய வரங்களை தந்தருள வேண்டுமென்று


---




கத்தோலிக்க இறை விசுவாசிகளாகிய நாங்கள் கிறிஸ்தவ செபங்கள் இந்த “ஆமென்” என்ற வார்த்தையை பலமுறை அறிக்கையிடுகின்றோம். கிறிஸ்தவ செபங்கள் அனைத்தும் இந்த ஆமென் என்ற வார்த்தை வழியாகவே நிறைவு பெறுகின்றன. அப்படி “ஆமென்” என்ற இந்த வார்த்தைக்கு இத்தனை வலிமை உள்ளதா? ஏன் இதை அடிக்கடி உச்சரிக்கின்றோம். கிறிஸ்துவின் திருவுடலை உட்கொள்ள வரும் போதும் “ஆமென்” என்று கூறி அவரை எங்கள் உள்ளங்களில் பெறுகின்றோம். இத்தனை சக்தி மிக்க இந்த வார்த்தையின் பொருள் தான் என்ன...? விவிலிய அடிப்படையில் காண்போம். கிறிஸ்தவ செபங்களில், குறிப்பாக புதிய ஏற்பாட்டு கால செபங்களில் இந்த “ஆமென்” என்ற வார்த்தை அடிக்கடி இடம்பெற்றுள்ளது. எனவே திருச்சபையும் “ஆமென்” என்ற வார்த்தையின் மூலம் தனது செபத்தினை நிறைவு செய்கின்றது. இது எபிரேய மொழியாகும். இந்த “ஆமென்” என்ற எபிரேய மொழியானது அந்த வார்த்தையின் பொருளாகிய “நம்பிக்கை“ என்பதை எடுத்துக்காட்டுகிறது. இந்த வார்த்தை நம்பிக்கைத் தன்மை, விசுவாசத்தன்மை, உறுதித்தன்மை இதனை குறித்து நிற்கின்றது. எனவே இதன் பொருளிலிருந்து “ஆமென்” என்ற வார்த்தையை கடவுளின் விசுவாசிகள் தங்களிடையே கடவுளுக்கும் ஏன் அறிக்கையிடுகின்றார்கள் என்பதை அறிய முடிகிறது எசாயா புத்தகத்தில் “உண்மையின் கடவுள்” (ஒத்ததாக “ஆமென் கடவுள்”) வெளிப்படுவதை காண்கின்றோம்.

15

## அருட்பணி. கலாநிதி கெமிலஸ் பர்னாந்து அடிகள்



அருட்தந்தை கலாநிதி கெமிலஸ் பர்னாந்து அடிகளார், கே. பி. ரொமியேல் பர்னாந்து (அமரர்) மற்றும் A. மேரி மாக்கிரட் சுவாரிஸ் தம்பதியரின் மகனாக 1963ஆம் ஆண்டு ஆனி மாதம் 05ஆம் திகதி பிறந்தார். இவர் தனது ஆரம்பக்கல்வியை பயாகலை றோ.க வித்தியாலயத்திலும், பண்டாரநாயக்க மத்திய கல்லூரியிலும் பயின்று, உயர்கல்வியை களுத்துறை மத்திய கல்லூரியில் பயின்றார். பின்னர் பொரள்ளை புனித அலோசியஸ் சிறிய குருமடத்தில் இணைந்தார். அதன்பின்னர் 1985ஆம் ஆண்டு களுத்துறை தஹாம் செவன கனிஷ்ட குருமடத்தில் இணைந்து குரு பயிற்சியின் பின்னர், 1986ஆம் ஆண்டு அம்பிட்டிய தேசிய குருமடத்தில் இணைந்து இறையியல், மெய்யியல் கற்றார்.

தியாக்கோனாக பமுனுகமை, கந்தானை மற்றும் கனுவனை பங்குகளில் பணியாற்றி 1992ஆம் ஆண்டு ஆடி மாதம் 25ஆம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பின்னர் குரு அழைத்தலுக்கான பணியை ராகமை ஆலயத்தில் உதவி பங்குத்தந்தையாகவும், பம்பலப்பிட்டி புனித பேதுரு கல்லூரியில் ஆசிரியராகவும், 2000ஆம் ஆண்டில் தேசிய குருமடத்தில் விரிவுரையாளராகவும் இணைந்து பணியாற்றினார். 2008ஆம் ஆண்டு தலுகம பங்குத்தந்தையாகவும், பின்னர் 2010ஆம் ஆண்டு களுத்துறை திருச்சிலுவை கல்லூரியின் அதிபராகவும், 2015ஆம் ஆண்டு பொரளை புனித அலோசியஸ், சிறிய குருமட இயக்குனராகவும், பொறுப்பேற்று தனது சிறப்பான பணியினை வழங்கியுள்ளார். 2016ஆம் ஆண்டு எமது சகோதர ஞானார்த்த ப்ரதீப்பய பத்திரிகையின் ஆசிரியராகவும் நியமனம் பெற்று, இன்று வரை பணியாற்றுவதோடு, மாளிகாவத்தை சமாதான இராக்கினி அன்னை ஆலயத்தின் பங்குத்தந்தையாகவும் பணிபுரிந்துள்ளார். மற்றும் அருட்தந்தையவர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் கல்வியின் முக்கியத்துவம் பற்றி நிறைய விடயங்களை எடுத்துக்கூறுவார். புத்தகங்களை வாசிக்கும் படியாக அறிவுரை கூறுவார். அவர் இனிமையாகவும், மெதுவாகவும் ஆழமான அழகான கருத்துள்ள மறையுரைகளை ஆற்றுவார். அருட்தந்தை அவர்கள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். இவர் அழகாக இனிமையாகப் பாடக்கூடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உங்கள் குருத்துவ அர்ப்பண வாழ்வை மீண்டும் தொடருங்கள்!!! வாழ்த்துகின்றோம்

மத்துமகலை பங்கின் மகனான இவர், திரு அல்பிரட் குணதிலக்க, திருமதி பியற்றிஸ் குணதிலக்க தம்பதியரின் மகனாவார். 1966ஆம் ஆண்டு பிறந்த இவர், வத்தளை புனித அந்தோனியார் மற்றும் மருதானை புனித சூசையப்பர் கல்லூாயீல் கல்வி கற்றார். 1977ஆம் ஆண்டு பொரள்ளை புனித அலோசியஸ் சிறிய குருமடத்தில் இணைந்தார். 1985ஆம் ஆண்டு தஹாம் செவன கனிஷ்ட குருமடத்திலும், பின்னர் 1986ஆம் ஆண்டு அம்பிட்டிய தேசிய குருமடத்திலும் இணைந்து மெய்யியல் இறையியல் கற்றார்.

தியாக்கோனாக பல்லன்சேனை மற்றும் வத்தளை பங்குகளில் பணியாற்றியுள்ளார். 1992ஆம் ஆண்டு ஆடி 25ஆம் திகதி குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். உதவிப்பங்குத்தந்தையாக கோட்டையிலும், பங்குத்தந்தையாக இரத்மலானை, கந்தானை, நாயக்ககந்த பங்குகளிலும் பணியாற்றியுள்ளார். 2014ஆம் ஆண்டு கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனராக பொறுப்பேற்றார். அருட்தந்தையவர்கள் எப்பொழுதும் எல்லோருடளும் சுலபமாக கதைக்கக் கூடியவர். சக ஊழியர்களோடு அன்பான கண்டிப்புடன் வழிநடத்துபவர். உதவி செய்யும் குணமுடையவர், தேவையில் இருப்போருக்கு தம்மாலான உதவிகளை செய்வார்.



## அருட்பணி. மகேந்திர குணதிலக்க அடிகள்

# “என்னுடையவன

# எனது அடையாளம


## “என்னுடையவனாகி, எனது அடையாளமாயிரு”



இலங்கையில் உருபெற்ற முதலாவது புனிதரான புனித யோசேவ்வாஸ் அடிகளாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ்வாண்டில் சுதேச குருக்கள் / துறவியர் தினத்தை முன்னிட்டு இச் செய்தியை எழுதுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். குருக்கள் / துறவியரின் தேவ அழைத்தல் வேறு எவரிடமும் இருந்தும் அல்ல இறைவனிடமிருந்தும் இறைவனுக்கே சொந்தமான துமான வரப்பிரசாதமாகும்.

குருக்கள் / துறவிகள் என்ற அழைத்தலைப் பெற்றவர்கள் இறைவனின் அன்பின் அடையாளமாக திகழ்கின்றார்கள். இறைவன் அவர் படைத்த உயரிய படைப்பாகிய மக்களுக்கும், உலகிற்கும் காட்டும் அளப்பெரிய அன்பின் சாட்சிகளாக திகழ்பவர்கள் குருக்கள் / துறவிகளாகும். 30 வருடங்களாக இலங்கையில் குருக்களின்றி அல்லலுறும் காலகட்டங்களில் அயல் நாட்டிலிருந்து சவால்களுக்கு முகங்கொடுத்து, இலங்கையை வந்தடைந்த புனித யோசேவ்வாஸ் அடிகளாரின் மறைபற்றும் ஆர்வமும் இக்காலத்தில் சுதேச குருக்கள் துறவிகளை உருவாக்கி எமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் பணியாற்ற வழிவகுத்தது குறிப்பிடத்தக்கது. அன்று புனித யோசேவ்வாஸ் அடிகளார் தளர்ந்து போய்கொண்டிருந்த கிறிஸ்தவ விசுவாசத்திற்கு உயிரூட்டம் அளிக்காதிருந்திருந்தால் இன்றைய கிறிஸ்தவர்களின் விசுவாசத்திற்கு உயிரூட்டம் கொடுக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்குமோ என்பது கேள்விக்குறியாகும்.

இறை பராமரிப்பால் எம் நாட்டிற்கு வந்தடைந்த அடிகளாரின் மறைபரப்பிற்கான தூரநோக்கு செயற்பாடுகள் எதிர்கால சுதேச குருக்கள் துறவிகளால் போஷிக்கப்படும் திருச்சபைக்குரித்தான




கனவு இருந்தது என்பது
குருக்கள் இல்லாக்
பொதுநிலையினர்கள் மூல
அண்ணாவிகளை நியமித்து
வளர்ச்சிக்காகப்பாடுபட்டார்.
யாக்கோமே கொண்சல்வா
சேர்ந்து சாதாரண மக்க
க்கூடிய விதத்தில் இலத்
இருந்த செபவழிபாடுகளை
மொழிக்கு மாற்றியமைத்து
மக்களுக்கு உயிரூட்டம் கொ
பாடுபட்டார். எதிர்காலத்தில்
துறவிகள் எம் நாட்டில்
என்ற எதிர்நோக்கோடு இறை
அதனால் சுதேச
இறைமக்களோடு நெருங
கொள்வோம். சுதேச குரு
ருக்கான அழைத்தல் மென்
மன்றாடுவோம். புனித
அடிகளாரின் வழியைப் பின்
துறவிகள் அன்புப்பணிபுரிய
பரிந்துரைமூலம் மன்றாடுவோ

அருட்பணி. பெசில் றொ
பாப்பிறை

## புனித பேதுருவின் குரு மாணவர்களுக்கான தேசிய பொக்கிச நிதி

கீழே கையொப்பமிட்டுள்ள நான், பாப்பிறையின் அப்போஸ்தலரான புனித. பேதுரு சபையில் வருடாந்த/சதாகால அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்னும் இறையழைத்தல்கள் வேண்டி மன்றாடவும், என்னால் முடிந்தவகையில் சமுதாயத்திற்கு உதவி செய்வதற்கு ஒத்துழைப்பேன். இறையரசின் மறைதூதர்களாவதற்கு அருள் வேண்டுவோம். நீங்கள் எவ்வகையில் பண உதவி செய்ய விரும்புகின்றீர்? காசோலை, காசுக்கட்டளை, பணம், சொத்துக்கள் வழியாய் காசோலையாய் இருப்பின் Pontifical Mission Societies என்னும் பெயருக்கும், காசுக்கட்டளையாயின் பொரல்லை தபால் நிலையத்திற்கும் அனுப்புங்கள். சொத்துக்கள் மூலமாக செலுத்துவதாயின் நாம் உங்களை அதற்காக சந்திக்க வேண்டியிருப்பதால் இது பற்றிய மேலதிக தகவல்களை கடிதத்தின் வழியாய் அறியத்தருவோம். இந்நிதிக்காக என்னுடைய உதவி தொகை ரூபா ...... இச்சங்கத்தினால் அச்சிடப்படும் சஞ்சிகையை பெற்றுக்கொள்ள விரும்புகின்றீர்களா?

பெயர்: .......................................

முகவரி: .......................................

தொலைபேசி/தொலைநகல்/மின்னஞ்சல்:

.......................................

கையொப்பம்: ................. திகதி: ...................

**அருட்தந்தை. பெசில் ரொகான் பெர்னாந்து**
**தேசிய இயக்குனர்,**
**பாப்பிறை மறைபரப்பு சபைகள்,**
**இல 19, பல்கம் இடம், கொழும்பு – 08.**
**தொலைபேசி: 011-2685673**
**மின்னஞ்சல்:** ndpms@sltnet.lk

## 2016 ஆம் ஆண
## தின

| மறைமாவட்டம் |
| --- |
| அநுராதபுரம் |
| மட்டக்களப்பு |
| சிலாபம் |
| யாழ்ப்பாணம் |
| குருநாகல் |
| இரத்தினப்புரி |
| |

## சுதேச குரு
### மன்னார் மறைமாவ

இறைவனின் கரங்களில்
இருந்து பெற்றுக் கொண்ட
எமது வாழ்க்கை ஒரு
அழைப்பு. அழைப்புக்கள்
பலவாறாயினும்
குருத்துவ அழைப்பு
என்பது உன்னதமானதும்
மேன்மையானதுமாகும்.
குருக்கள் எமது
ஞானமேய்ப்பர்கள் ஆவார்.
பிரான்ஸ் நாட்டிலே 1889 ஆ
ஆண்டில் ஜான் பிகார் என்ற
பெண்மணி புனித பேதுரு
சபை என்று ஒரு சபையை
நிறுவி குருக்களுக்காகவும்

# ...ாகி, ...ாயிரு"




தெளிவாகிறது.
காலகட்டத்திலும்,
ம் மூப்பர்கள் /
மறைபணியில்
அருளாளர்
ல் அடிகளாரோடு
ளுக்கு விளங்க
தின் மொழியில்
சிங்கள, தமிழ்
சுதேச கிறிஸ்தவ
ாடுப்பதில் பெரும்
் குருக்கள் /
உருவாகுவார்கள்
தச் செய்தார்.
மேய்ப்பர்களாக
ங்கிய உறவு
க்கள் / துறவிய
மேலும் கிடைக்க
யோசேவ்வாஸ்
ன்பற்றி குருக்கள்
தவ அன்னையின்
ாம்.

***...கான் பெர்னாந்து
...மறைபரப்பு சபை
...தேசிய இயக்குனர்***

**சுதேச குருக்கள், துறவியர் தினம் 30.07.2017**

## அப்போஸ்தலரான புனித. பேதுரு சபை



1889ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் சென் நகரில் ஜான்பிகார் என்ற பெண்மணியால் இச்சபை ஆரம்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் இறையரசைக் கட்டியெழுப்ப ஒளியாகத் திகழவேண்டிய குருக்களையும், துறவற சபையினரையும் பயிற்றுவித்து உருவாக்கவும், இவர்களின் வாழ்வை வளப்படுத்த தேவையான சகல உதவிகளையும், குருமடங்களுக்கும் துறவற சபை இல்லங்களுக்கும் வழங்கவும், தேவ அழைத்தலைப் பெருக்கவும், அதிவிசேடமாக சுதேச குருக்களை உருவாக்கவும், செபத்தாலும், பரித்தியாகத்தாலும் ஒத்துழைப்பை வழங்கி, திருச்சபைக்கு உதவிக்கரத்தை நீட்டுவதே அதன் நோக்கமாகும்.

## ...ண்டுக்கான சுதேச குருக்கள்/துறவியர் ...ன நிதிச் சேகரிப்பு

| தொகை | மறைமாவட்டம் | தொகை |
|---|---|---|
| 239,085.00 | பதுளை | 96,730.00 |
| 104,441.00 | கொழும்பு | 3,187,759.00 |
| 635,815.00 | காலி | 124,990.00 |
| 322,442.00 | கண்டி | 349,222.00 |
| 431,880.00 | மன்னார் | 329,627.00 |
| 117,998.00 | திருகோணமலை | 151,169.00 |
| | ***மொத்தம்*** | ***6,091,158.00*** |

## ...ருக்கள் தினம்

### ...ட்ட இயக்குனரின் செய்தி



உதவுவதற்கு முன்வந்தார். அந்த சபை செபத்தாலும் பரித்தியாகத்தினாலும் பல குரு மாணவர்களையும் துறவிகளையும் உருவாக்கியது. திருமுழுக்கு பெற்ற நாம் அனைவரும் பொதுக்குருத்துவத்தில் பங்கெடுக்கின்றோம். குருத்துவம் எனும் திருவருட்சாதனத்தின் மூலம் குருக்கள் பணிக்குருத்துவத்தில்

இணைந்துள்ளார்கள். சுதேசகுருக்கள் என்போர் ,எமது சொந்த நாட்டிலிருந்து, பிரதேசங்களிலிருந்து உருவாக்கப்பட்டு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# மாபெரும் திருவிழிப்பு

கொழும்பு மறைமாவட்டத்தில் வாழும் தமிழ் கத்தோலிக்க மக்களுக்காக பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் வேண்டுகோளுக்கிணங்க இம்மாபெரும் திருவிழிப்பானது கொழும்பு யோசேவ்வாஸ் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இம்மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை கொழும்பு கொட்டாஞ்சேனை புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இத்திருவிழிப்பில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

பல அருட்தந்தையர்களும், அருட்சகோதரர்களும் இதில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. பேராயரின் நிகழ்வு கிட்டத்தட்ட இரண்டு மணித்தியாலம் எடுத்தத்தோடு அவர் புனித யோசேவ்வாஸ் வாழ்க்கை வரலாற்றுடன் வேறு புனிதர்களையும், அதாவது புனித அந்தோனியார், புனித சின்ன திரேசம்மாள், மற்றும் வேறு சில புனிதர்களின் வாழ்க்கை முறைப் பற்றியும் ஆங்கில மொழியில் மறையுரை நடந்தினார். இதனை அருட்தந்தை கிளேரியன் பர்னாந்து அடிகளார் வார்த்தைக்கு வார்த்தை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்தார். கர்தினால் ஆண்டகையின் உரையின் பின் தேவ நற்கருணை எழுந்தேற்றம் பண்ணப்பட்டு தேவநற்கருணை ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது. அருட்தந்தை மனோகுமாரன் அடிகளார், அருட்தந்தை இக்னேசியஸ் அடிகளார், அருட்தந்தை ஜோய் மரியரட்ணம் அடிகள் ஆகியோரும் உரைகளை நிகழ்த்தி மக்களை ஆரம்பத்தில் ஆயத்தப்படுத்தினார்கள். பிரதான செப வழிபாடானது மூன்றரை மணித்தியாலங்களுக்கு திருகோணமலை மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை போல் ரொபின்சன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது. அதிகாலை 4. 00 மணியளவில் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலியோடு இவ்வழிபாட்டு நிகழ்வு நிறைவுபெற்றது.

அருட்தந்தை கிளேரியன் அடிகளார் எல்லா நிகழ்வுகளையும் தொகுத்து வழங்கியதோடு அருட்தந்தை ஆனந்தன் பர்னாந்து புள்ளே அடிகளார் இவை அனைத்தையும் ஒழுங்குபடுத்தி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கினார். ஜோசவ்வாஸ் மன்றத்தின் நூற்றுக்கணக்கான அங்கத்தினர்கள் மிக நேர்த்தியாக இதை ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

படங்கள் மற்றும் தகவல் : திரு. வினோலி
புனித யோசேவ்வாஸ் மன்றம்.

















ஒரு பெரிய முதலாளியிடம் பல அடிமைகள் வேலை செய்து வந்தனர். அவர்கள் பல வகையிலும் கொடுமைப்படுத்தப்பட்டனர். துன்பத்திற்குள்ளான அவர்களில் ஒருவன் முதலாளியிடமிருந்து எப்படியோ தப்பி காட்டிற்குள் ஓடிவிட்டான்.

காட்டில் அவன் தன்னந்தனியாக ஒளிந்து திரிந்தபோது ஒரு சிங்கம் நொண்டிக்கொண்டே அவன் அருகில் வந்தது. அது மிகுந்த வலியால் துடிப்பதை அடிமை பார்த்தான். அவன் சிறிதும் பயமில்லாமல் அதன் காலைத் தூக்கிப் பார்த்தான். அதன் பாதத்தில் ஒரு பெரிய முள் தைத்திருப்பதைக் கண்டான்.

சிங்கத்தின் காலில் தைத்திருந்த முள்ளை மிகவும் சிரமப்பட்டுப் பிடுங்கி எறிந்தான். அதன் காலைத் தடவிக் கொடுத்தான். ஆபத்தில் தனக்கு உதவிய அந்த மனிதனை நன்றியுணர்வுடன் பார்த்த சிங்கம் வலி நீங்கி மகிழ்ச்சியுடன் சென்றது.

சில நாட்களில் அந்த அடிமை மனிதன் முதலாளியின் ஆட்களால் பிடித்துச் செல்லப்பட்டான். அக்காலத்தில் தப்பியோடும் அடிமைகளுக்கு மரண தண்டனை அளிப்பது வழக்கம். அதன்படி ஒரு சிங்கத்தைப் பல நாட்கள் பட்டினி போட்டு ஒரு கூண்டிற்குள் தள்ளிவிட்டு சிங்கத்தை ஏவி விட்டனர்.

பசியோடிருந்த சிங்கம் அடிமையை நோக்கிப் பாய்ந்து வந்தது. அவன் அருகில் வந்ததும் சிங்கம் உற்றுப் பார்த்தது. அந்த மனிதன் தனக்குக் காலில் முள் தைத்து அவதிப்பட்ட போது உதவியவன் என்பதை அடையாளம் கண்டு கொண்டது. மிகவும் பணிவுடன் அவன் அருகில் வந்து வாலை ஆட்டிக் கொண்டு இருந்தது. அடிமை, சிங்கத்தை தடவிக் கொடுத்தான்.

இந்தக் காட்சியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அரசனும் பொதுமக்களும் மிகுந்த ஆச்சரியம் அடைந்தனர். அரசன், அடிமை மனிதனிடம் விபரங்களைக் கேட்டறிந்தான். செய்தியைக் கேட்டறிந்த அரசன் அடிமையை விடுதலை செய்தான். நன்றியுணர்வு மிக்க சிங்கத்தைக் காட்டில் கொண்டுபோய் விடச் செய்தான்.

## மாணவச் செல்வங்களே! லூக்கா 10:30-37 பகுதியை வாசித்து பின்வரும் கதையை கண்டுபிடியுங்கள்




## நல்லதே செய்




**“பிற உயிர்களின் துன்பத்தையும் தன் துன்பமாகக் கருதி, நன்மை செய்ய வேண்டும்”**

## வர்ணம் தீட்டுக





## உயிரினங்களின் செயல்பாடுகள்



1. யோஷியம் பார்க்க **கிளி**யைப் பயன்படுத்துவர்
2. **மைனா**வை பேசப் பழக்குவர்
3. மாடத்தில் வாழும் **மாடப்புறா**வை சமாதானத்திற்கு ஒப்பிடுவர்
4. குறைந்த வேகத்திற்கு **நத்தை** இன பிராணியை ஒப்பிடுவர்
5. அடங்கிக்கிடப்பவனை **ஆமை** உயிரினத்திற்கு ஒப்பிடுவர்.
6. மானத்துக்கு உதாரணமாக கூறப்படும் விலங்கு **மான்**
7. இரத்தம் உறிஞ்சும் உயிரினம் **அட்டை**
8. ஓட்டை சுமக்கும் உயிரினம் **ஆமை**
9. இரட்டை நாக்குள்ள விலங்கு **உடும்பு**
10. **ஆந்தை**யால் விழிகளை அசைக்க முடியாது
11. கொட்டும் இயல்புள்ள ஓர் உயிரினம் **குளவி**
12. தீயில் விழுந்து தாமாகவே உயிரை மாய்த்துக் கொள்ளும் உயிரினம் **விட்டில் பூச்சி**யாகும்.
13. ரீங்காரம் இடும் ஓர் உயிரினம் **வண்டு**
14. சுறுசுறுப்புக்கு உதாரணமாக கூறப்படும் உயிரினம் **எறும்பு**
15. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினம் **தவளை**
16. கண் திறந்தபடி உறங்கும் உயிரினம் **மீன்**
17. உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் மீன் இனம் **திமிங்கலம்**
18. ஒற்றுமையான பறவை **காகம்**
19. பறக்கும் பாலூட்டி **வௌவால்**
20. சோடியாகத் திரியும் பறவை **மைனா**
21. பறவைகளின் அரசன் **கழுகு**
22. நீரை விட்டுவிட்டுபாலை மட்டும் அருந்தும் பறவை **அன்னம்**
23. **கரப்பான் பூச்சி**யின் இரத்தம் வெள்ளைநிறம்
24. இந்த பறவையின் மீது பயணிப்பார்களாம் **தீக்கோழி**
25. வெளிச்சத்துடன் பறக்கும் உயிரினம் **மின்மினிப்பூச்சி**
26. அடைகாக்க தெரியாத உயிரினம் **குயில்**
27. சின்னஞ் சிறு பறவை **குருவி**







ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12




இளைஞனே!

**விழித்திரு** - "உறக்கம் என்பது புதைமணல்!"

**எழுச்சிகொள்** - "சோம்பல் என்பது உனக்குத் தடைக்கல்"

**போராடு** - "போராட்டம் இல்லா வாழ்க்கை நீரோட்டம் இல்லா ஆறு போன்றது"

**"பயம் என்பது உன்னுள் இருக்கும் இனத்துரோகி, "என்னால்தான் முடியும்" என்று நம்பி, உன் இலக்கினை அடைய முயற்சி செய்"**



# தன்னம்பிக்கையே கடவுள்

முன்னேறு! உன் இலட்சியம், இலக்கு விருப்பம் என்று எது தேவையோ, எதை அடைய வேண்டும் என்று விரும்புகின்றாயோ அதை நோக்கி முன்னேறு!

உன் வெற்றிக்கு, அல்லது உன் இலக்கினை அடைவதற்கு நீயே எனக்கு உற்ற துணை! உன்னைத் தவிர வேறு மேலான துணை யாருமில்லை! உன்னையே நீ எண்ணிப்பார்! உன்னிடத்தில் உள்ளது ஏராள சக்தி. அதை முழுமையாக ஒருநிலைப்படுத்தி, தீட்டிய வாளாக, உன் திண்தோள் வலிமையுடன் இலக்கினை நோக்கிபடியே முன்னேறு ஆகாயமே உனக்குத் தொடுந்தூரமாகிவிடும்.

உன் இலக்கினை அடையும் முன் சோர்வடைகிறாயா? சற்று நில்! கவனி! உன்னைச் சுற்றி இயற்கை உனக்களித்துள்ள கொடைகள் ஏராளம். அதில் உள்ளன. உன் வெற்றிப் பயணத்திற்கு வேண்டிய பாடங்கள் ஒரு சிறு கொடியைப் பார். அதன் இளந்தளிர்க் கொடியானது காற்றில் அசைந்துகொண்டே தான் பற்றிக்கொள்ள வேண்டிய இலக்கில் தானாகப் பற்றிப் படர்கிறது.

ஒரு சின்னஞ்சிறு புழுவைப் பார்! அது தன் உறக்க நிலையை அடையத் தன் கூட்டைத் தானாகக் கட்டுகிறது துள்ளிவிழும் சிற்றருவி முதல் சின்ன சின்ன தும்பி வரை தம் பயணத்தைத் தாமே அமைத்து இயங்குகின்றன. யார் அவற்றுக்குத் துணை? எங்கு அவை பயின்றன?

பசு ஈன்ற கன்றினைப் பார்! எழும், விழும், எழும், விழும், இப்படியே அது தன் முதல் போராட்டத்தைத் தொடங்கிச் சற்று நேரத்தில் துள்ளும், பாயும், பின் ஓடும் அனைத்தையும் சுயத்திலேயே செய்கிறது. பின் உனக்கு ஏன் கைத்தடி?

எனவே தடுமாற்றமா? சறுக்கலா? கலங்காதே! துணிவுகொள்! பயம் என்பது உன்னுள் இருக்கும் இனத்துரோகி, எனவே மிக்க துணிவுடன் 'நான்' என்று நினைத்து, 'என்னால்தான் முடியும்' என்று நம்பி உன் இலக்கினை அடைய முயற்சி செய். முயற்சி செய்துகொண்டே இரு! ஏனென்றால் முயற்சி செய்துகொண்டு இருப்பவன்தான் மனிதன். மூச்சு விட்டுக்கொண்டு இருப்பவனெல்லாம் மனிதனல்லன். எனவே நீ மனிதனாக இருந்தாலே போதும், உன் இலக்கினை அடைய முடியும். முதலில் திட்டமிடு. திட்டமிடாஉழைப்பு பாலைவனத்தில் ஆழ்குழாய்த் திட்டம் போன்றது முடியுமா என்று யோசிப்பது முதல் பலவீனம். எனவே எதையும் முடியும் என்று எண்ணி, முனைப்புடன் செயற்படு. யாரிடமும் சென்று நிழல் தேடாதே. உன் நிழலிலேயே ஓர் ஊரையே நிற்க வைக்க முடியும். நீ ஓர் அக்கினிக் குஞ்சு. என்ன செய்துவிட முடியும் இந்த இடர்கள் எனும் இலவம் பஞ்சு?

அவநம்பிக்கைவாதிகளை ஒருபோதும் அண்டாதே. எதைக் கண்டும் பிரமிக்காதே! பிரமிப்பைப் போல் ஒரு பின்னடைவே கிடையாது.

தோல்வி என்பது சிந்திக்கத் தெரியாதவனின் சித்தாந்தம் நிலவைத் தொட்டது மூன்று தோல்விகளுக்குப் பிறகுதான்!

அருகிலே ஓடுபவனைப் பற்றி அக்கறை காட்டாதே! நீ ஓடுகிறாயா என்பதே முக்கியம்! இது சுய நலமன்று, நலம்.

திறமைசாலிகளை எந்தப் போர்வைக்குள்ளும் திணிக்க முடியாது! ஆயிரம் கத்திகளால் கீறினாலும் கிழக்க முடியாது காற்றை. நீ மிகப் பெரியவன்! நீ மாபெரும் பலசாலி.

இளைஞனே! இரைப்பையையும் நம்பிக்கையையும் காலியாக விடாதே! உலகை உலுக்கி உலுக்கி எடுத்தவனெல்லாம் தொடக்கத்தில் ஒரு தூசுபடலமாக இருந்தவன்தான்! ஏ போராட்டக்காரனே! பேராசைப்படு, நல்லதுதான். ஆசைப்படாதிருக்க நாம் ஆண்டிகளா, பெரிது பெரிதாக ஆசைப்படு. வானம், கடல், காற்றுபோல அளவில்லாமல் ஆசைப்படு.

போதும் என்று நினைக்காதே போதாது, போதாது எந்த வெற்றியுமே போதாது. போதும் என்ற நிலை உன் இயக்கத்தை முடக்கிவிடும்.

நதி நகர்ந்துகொண்டே இருக்கிறது. பூ முளைத்துக்கொண்டே இருக்கிறது. நீ தேடிக்கொண்டே இரு

அடங்கிவிடாதே! அச்சமும் தாகமும் உன்னை அடைக்கும் இரு அடைப்புக் குறிகள் முதல் இடம் என்பதே உன் முயற்சியாக இருக்கட்டும்! ஆனால் இரண்டாமிடத்திலேயே இரு

முதலிடம் என்பது முற்றுப்புள்ளி அதற்குமேல் பயணமில்லை இரண்டாமிடம் என்பது தான் சரியான இடம்! உன் நெருப்பு எப்போதும் உக்கிரமாகவே இருக்கும்!

வெற்றி பெறு, அதை நீயாகவே வெளியில் சொல்லாதே; மற்றவர்களைச் சொல்லச் செய் யாரும் சொல்லவில்லை என்றால் அதற்கான ஆட்களை அமர்த்து இப்போதெல்லாம் விடியும் சூரியனுக்குக்கூட அறிமுக அரட்டை தேவைப்படுகிறது. உன்னை உதாசீனம் செய்பவரை எதிரே கண்டால் அடக்கமாய் புன்னகை அவன் உன்னைக் கண்டு ஆணவமாய் புன்னகைப்பான் உன் அடக்கம் அவன் ஆணவத்தை அடக்கிவிடும்

அடக்கமாக இரு; அடிமையாக இருக்காதே பணிவாக இரு; பதுங்கி நடக்காதே எனவே, என் இனிய நண்பனே! துணிந்து நில் நம்பிக்கை என்பது நூறாவது படி என்றால் துணிச்சல் என்பதுதான் தொண்ணூற்று முதலாவது படி வெற்றி என்பது நூறு ஒன்றாவது படி என்றால் முயற்சி என்பதுதான் முதற் படி!

---

ஆங்கிலத்தில் மரியாதை என்பதை **RESPECT** என்பார்கள் அதற்கு பின்வரும் புதிய அர்த்தம் வழங்கப்படுவது உண்டு.

**R - Responsible** - பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல்

**E - Encouraging** - உற்சாகத்துடன் செயல்படுதல்

**S - Supportive** - ஆதரவாக இருத்தல்

**P - Positive** - நேர்மறை எண்ணங்கள்

**E - Enabling** - செயல்படுதல்

**C - Considerate** - இரக்கங்காட்டுதல்

**T - Tolerant** - சகிப்புத் தன்மையோடு இருத்தல்




---

## அறிவுரைகள்

- ஆண்டவர் கூறுவது இதுவே, மனிதரில் நம்பிக்கை வைப்போரும், வலுவற்ற மனிதரில் தம் வலிமையைக் காண்போரும் சபிக்கப்படுவர்.
- அவர்கள் பாலைநிலத்துப் புதர்செடிக்கு ஒப்பாவர். பருவ காலத்திலும் அவர்கள் பயனடையார். பாலைநிலத்தின் வறண்ட பகுதிகளிலும் யாரும் வாழா உவர் நிலத்திலுமே அவர்கள் குடியிருப்பர்.
- ஆண்டவரில் நம்பிக்கை வைப்போர் பேறுபெற்றோர். ஆண்டவரே அவர்களது நம்பிக்கை.
- நேர்மையற்ற வழிகளில் செல்வம் சேர்ப்போர் தம் இடாத முட்டைகளை அடைகாக்கும் கௌதாரி போன்றோர். தம் வாழ்நாளிகளில் நடுவிலேயே அவர்கள் அச்செல்வத்தை இழந்துவிடுவர். இறுதியில் அவமதிப்புக்கு உள்ளாவர்.
- உம்மைப் புறக்கணித்தோர் யாவரும் வெட்கமுறுவர். உம்மைவிட்டு அகன்றோர் தரையில் எழுதப்பட்டோர் ஆவர். ஏனெனில் அவர்கள் வாழ்வளிக்கும் நீரூற்றாகிய ஆண்டவரைப் புறக்கணித்தார்கள்.
- ஆண்டவராகிய நானே இதயச் சிந்தனைகளை ஆய்பவர். உள்ளுணர்வுகளைச் சோதித்து அறிபவர். ஒவ்வொருவரின் வழிகளுக்கும் செயல்களின் விளைவுகளுக்கும் ஏற்றவாறு நடத்துபவர்.

**ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12**

---

## சிந்தனைக்கு...

- முதலில் நீ முயற்சி செய் பின்னர் கடவுளின் உதவியைத் தேடு. உழைப்பவனுக்குக் கடவுள் தாமே வந்து உதவுவார்
- மனிதன் தேவதூதனாக உயராவிடில் சாத்தானாக் தாழ்ந்து போவான். கீழ் நோக்கி சறுக்க ஆரம்பித்தால் இடையில் நிற்க முடியாது
- ஒருவனை அவனுடைய மன்னிக்கும் குணத்துக்காகப் புகழும் முன் அவனுக்கு பழிவாங்கும் குணம் உள்ளதா என்பதையும் சிந்திக்க வேண்டும்

# ஐந்து புதிய கர்தினால்கள்



கடந்த மாதம் 28ம் திகதி புதன்கிழமை உரோம் புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் புதிய கர்தினால்களுக்கு மோதிரம், தொப்பி மற்றும் பட்டம் ஆகியவற்றை வழங்கும் நிகழ்வை தலைமையேற்று நடத்தினார் திருத்தந்தை. அன்றை நிகழ்வின் மறையுரையில் எருசலேமுக்கு தான் செல்லவேண்டும் என்பதையும், அங்கு துன்பங்களைத் தாங்கவேண்டும் என்பதையும், இயேசு, தன் சீடர்களுக்குப் பலமுறை கூறியும், சீடர்கள் அதைப் புரிந்துகொள்ளாமல், இயேசுவுக்கு இடப்புறமும் வலப்புறமும் இருக்கைகளில் அமர்வதிலேயே அவர்கள் கருத்தாய் இருந்தனர் என்பதை, திருத்தந்தை தன் மறையுரையில் சுட்டிக்காட்டினார்.

எருசலேமில், இயேசு சுமந்த சிலுவையில், உலகில் துன்புறும் அனைத்து மனிதர்களின் துயரங்களையும் சுமந்தார் என்று குறிப்பிட்டத் திருத்தந்தை, போர், தீவிரவாதம், அடிமைத்தனம் என்ற பல கொடுமைகளால் இன்றும் ஆயிரமாயிரம் அப்பாவி மக்கள் துன்புறுகின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டினார். இன்று பொறுப்பேற்கும் புதிய கர்தினால்கள், திருஅவையின் "இளவரசர்கள்" என்று அழைக்கப்பட்டாலும், தன் வலப்புறமும், இடப்புறமும் அமர்வதற்கு இவர்கள் அழைக்கப்படவில்லை என்றும், மாறாக, சிலுவைகளைச் சுமக்க எருசலேமுக்கு இயேசு இவர்களை அழைக்கிறார் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் மறையுரையில் வலியுறுத்திக் கூறினார்.

# மறைசாட்சிகளின் மனவலிமையெனும் எதிர்நோக்கு



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைக்கல்வியுரை, "ஓநாய்களிடையே ஆடுகளைப்போல் உங்களை அனுப்புகிறேன்...... என் பெயரின் பொருட்டு அனைவரும் உங்களை வெறுப்பர்" என இயேசு, தன் பன்னிரு சீடர்களிடம் கூறியதை மையமாக வைத்து வழங்கப்பட்டது.

அன்பு சகோதர சகோதரிகளே! கிறிஸ்தவ எதிர்நோக்குக் குறித்த நம் மறைக்கல்வித் தொடரில் இன்று, மறைசாட்சிகளின் எடுத்துக்காட்டுக்கள் குறித்து நோக்குவோம். இயேசுவின் மீது அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்திற்காக உயிரையே விடுமளவிற்கு அவர்களுக்கு வலிமையை வழங்கியது, அவர்கள் கொண்டிருந்த எதிர்நோக்கேயாகும். இறையரசை அறிவிக்கையில், பாவமும் அநீதியும் நிறைந்த இவ்வுலகிலிருந்து பகைமையையும் எதிர்ப்பையும் சந்திக்க வேண்டியிருக்கும் என இயேசு தன் சீடர்களை எச்சரித்தார். மரணம் மற்றும் பாவத்தின்மீது இயேசு கொண்ட வெற்றியின்மீது நம்பிக்கைக் கொள்வதன் வழியாகவும், பழிவாங்கும் எண்ணம், பகைமை மற்றும் வன்முறைகளை ஒதுக்கித் தள்ளுவதன் வழியாகவும், செல்வம், அதிகாரம் ஆகியவற்றின் மீதான ஆசையிலிருந்து விலகி நிற்கும் தங்கள் வாழ்வு வழியாகவும், நற்செய்தியை அறிவிக்க வேண்டும் என அழைப்பு விடுக்கிறார் இயேசு. இயேசுவைப் பின்பற்றும் நமக்குத் தெரியும், ஆண்டவர் நம்மை எந்நாளும் கைவிடுவதில்லை என்று. இயேசு தன்னையே பலியாக்கியதையும், அவர் அன்பையும் பின்பற்றி, அவரில் நம் விசுவாசத்தையும் எதிர்நோக்கையும் நாம் வெளிப்படுத்துகிறோம். அதன் வழியாக, இவ்வுலகின் முன்னால் நாம் சாட்சிகளாக விளங்குகிறோம். இவ்வகையில் நோக்கும்போது, ஒவ்வொரு கிறிஸ்தவரும் மறைசாட்சியாகிறார், விசுவாசத்தால் தூண்டப்படும் உறுதியான எதிர்நோக்கின் சாட்சியாகிறார். இன்றும் விசுவாசத்திற்காக தங்கள் வாழ்வை கையளிக்கும் மறைசாட்சிகள், அதனை அன்பினால் ஆற்றுகின்றனர். அவர்களின் எடுத்துக்காட்டு மற்றும் பரிந்துரை வழியாக நாமும், நம்பத்தகும் சாட்சிகளாக மாறுவோமாக. இயேசுவின் வாக்குறுதிகளில் நாம் கொண்டுள்ள இறவா நம்பிக்கைக்கும், நம் தினசரி வாழ்வு நடவடிக்கைகள் வழியாக சாட்சிகளாக செயல்படுவோமாக.

இவ்வாறு, தன் புதன் மறைக்கல்வியுரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனைவரையும் வாழ்த்தி, அவர்களுக்கு தன் அப்போஸ்தலிக்க ஆசீரையும் அளித்தார்.




# திருத்தந்தையின் பாசமுள்ள ஆதரவுக்கு தென் சூடான் நன்றி



ஆயுத மோதல்களால் கடுமையாய்ப் பாதிக்கப்பட்டுள்ள, தென் சூடான் மக்கள் மீது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொண்டிருக்கும் பாசத்திற்கும், ஆதரவுக்கும், அந்நாட்டு ஆயர்கள் சார்பில், நன்றி தெரிவித்துள்ளார், தென் சூடான் ஆயர் பேரவைத் தலைவர் ஆயர், Edward Hiiboro Kussala.

தென் சூடானின் தற்போதைய சூழலால், அந்நாட்டுக்குத் திருத்தூதுப் பயணம் மேற்கொள்ள இயலா நிலையில், "தென் சூடானுக்குத் திருத்தந்தை" என்ற பெயரில், கடந்த ஆனி மாதத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அந்நாட்டுக்கு உதவிகள் வழங்கியுள்ளார்.

தென் சூடான் மக்கள் மீது, திருத்தந்தை காட்டிவரும் அன்புக்கும், ஆதரவுக்கும் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ள ஆயர், Kussala அவர்கள், திருத்தந்தை வழங்கியுள்ள, ஐந்து இலட்சம் டாலர் நிதியுதவியைப் பெறுவதில் தாங்கள் மிகவும் மகிழ்வதாகவும், இந்த ஆப்பிரிக்க நாட்டிற்கு, திருத்தந்தை திருத்தூதுப் பயணம் மேற்கொள்வது பற்றி மீண்டும் பரிசீலிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

திருப்பீட ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற அவைத் தலைவர், கர்தினால் பீட்டர் டர்க்சன் வழியாக, தென் சூடானுக்குத் திருத்தந்தையின் இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது.

தென் சூடானில், ஏறக்குறைய இருபது இலட்சம் பேர், பசியினால் வாடுகின்றனர் என, ஊடகச் செய்தி ஒன்று கூறுகிறது.




யார் மீட்படையக்கூடும் என்பதைக் கூறும் ஏற்புடைமை கொள்கையில், கத்தோலிக்கர், லூத்தரன் மற்றும் மெத்தடிஸ்ட் அவைகளிடையே இதுவரை நிலவிவந்த கருத்து ஒருங்கிணைப்பில், உலக சீர்திருத்த சபைகளின் அவையும் இப்புதனன்று இணையவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணைப்பு, கிறிஸ்தவ முழு ஒன்றிப்பை நோக்கிய பாதையில் ஒரு முக்கிய மைல்கல்லாக, கருதப்படும் என்று கூறப்படுகிறது. 1517ம் ஆண்டு மார்ட்டின் லூத்தர், பாவ மன்னிப்பு முறைகளுக்கு எதிராக தன் குரலை எழுப்பிய ஜெர்மனியின் விட்டன்பர்க்கில், ஜூலை 5, இப்புதனன்று இடம்பெற உள்ள கூட்டத்தில், உலக கிறிஸ்தவ சீர்திருத்த சபைகளின் அவை, ஒன்றிப்பை நோக்கிய தன் இசைவைத் தர முன்வந்துள்ளது.

சீர்திருத்த சபைகளுக்கும் கத்தோலிக்க திருஅவைக்கும் இடையே நிலவும் சில முரண்பாடுகள் இதன் வழியாக நீக்கப்பட்டு, பிற கிறிஸ்தவ சபைகளுக்கும் கத்தோலிக்க திருஅவைக்கும் இடையே துவக்கப்பட்டுள்ள ஒன்றிப்பு முயற்சிகள் வேகம் பெறும் என்ற நம்பிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

இணைப்பு என்பது வெறும் வெளி அடையாளமாக இல்லாமல், ஒருமைப்பாட்டில் இணைந்து உழைத்து, நற்செய்திக்கு ஒன்றிணைந்த சாட்சியை வழங்குவதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இயேசுவின் உறவுக்கு முதலிடம் கொடுங்கள்

## திருத்தந்தை



பொதுநிலையினரோ, அர்ப்பண வாழ்வு வாழ்பவரோ, ஆயரோ, அருள்பணியாளரோ, யாராக இருந்தாலும், அனைவரும், எல்லாவற்றுக்கும் மேலாக, இயேசுவோடு உள்ள உறவுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென, இஞ்ஞாயிறன்று கேட்டுக்கொண்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

02.07.2017 ஞாயிறு நற்செய்தி வாசகத்தை (மத்.10,37-42) மையப்படுத்தி, நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தங்கள் வாழ்வில் இயேசுவுக்கு முதலிடம் கொடுத்தால், அது முழுமையானதாக இல்லாமல் இருந்தாலும்கூட, உலகில் கிறிஸ்து போன்று வாழ்வதற்கு உதவும் என்றும் கூறினார்.

கிறிஸ்தவ மறைபோதகச் சீடத்துவத்தின் இன்றியமையாதப் பண்புகள் பற்றிய சிந்தனைகளை எடுத்துரைத்த திருத்தந்தை, இயேசுவைச் சந்திக்கிறாயா? இயேசுவிடம் செபிக்கின்றாயா? போன்ற கேள்விகளை, ஒவ்வொரு கிறிஸ்தவரிடமும் முதலில் கேட்க வேண்டும் எனக் கூறினார்.

இயேசுவுக்காக ஒருவர் எல்லாவற்றையும் துறந்தார் என்றால், அவரில் மக்கள், ஆண்டவரைக் கண்டுகொள்வார்கள் என்றும், ஒவ்வொரு நாளும் அவர் தன்னைப் புதுப்பித்து, சோதனைகளை வெற்றி காண இது உதவும் என்றும், திருத்தந்தை கூறினார். வாழ்வு முழுவதும் இயேசுவை மையமாகக் கொண்டிருக்கவும், இரண்டு காலணிகளில் ஒரே காலை வைக்கும், ஏமாற்று இதயத்தைக் கொண்டிருக்க வேண்டாமெனவும், தாங்கள் புனித அருள்பணியாளர்களாக வாழ்வதற்கு, இறைமக்கள் சமுதாயம் உதவ வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார் திருத்தந்தை.

எல்லாவற்றுக்கும் மேலாக இயேசுவை அன்புகூர்வதற்கு அன்னைமரியிடமிருந்து கற்றுக்கொள்வோம் எனவும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.



# தூய யாக்கோபு வழியில்
# நற்செய்திப் பணி

**தூய சந்தியாகப்பர் தனது உடல், பொருள் ஆவி அனைத்தையும் இயேசு என்ற நற்செய்திக்காக அர்ப்பணித்தார். தனக்கென எதையும் தனியாக ஒதுக்கி வைக்கவில்லை. தனது எல்லாவற்றையும் இயேசு என்ற நற்செய்திக்காக இழக்கத் தயாரானார்.**

### யார் இந்த யாக்கோபு?

இயேசுவின் பன்னிரு சீடர்களில் இருவர் யாக்கோபு என்று அழைக்கப்படுகின்றனர். அவர்களின் ஒருவர் செபதேயுவின் மகன் (மாற் 3:17), மற்றவர் அல்பேயுவின் மகன் (மாற் 3:18). எனவே செபதேயுவின் மகன் யாக்கோபுவை அல்பேயுவின் மகன் யாக்கோபுவிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக அவரைப் பெரிய யாக்கோபு என்று அழைக்கும் மரபு திருச்சபையின் தொடக்கக் காலத்திலிருந்தே காணப்படுகின்றது. இயேசுவைச் சுற்றி அவரது காலத்தில் நான்கு வட்டங்கள் காணப்பட்டன. நான்காவது வெளிவட்டம் இயேசு சென்ற இடங்களிலெல்லாம் கூடிய மக்கள் கூட்டம். மூன்றாவது வட்டம் பெரும்பாலான ஊர்களுக்கு இயேசுவோடு சென்று நற்செய்தியை அறிவித்த எழுபது சீடர்களைக் கொண்ட குழு. அதற்கு அடுத்து இரண்டாவது வட்டம் நற்செய்தி நூல்களில் மிகுதியாக இடம்பெறும் பன்னிருவர் குழு. இவர்கள் இயேசுவின் இதயத்திற்கு நெருக்கமான குழுவாக இருந்தார்கள். இவர்களைத்தான் நற்செய்தி நூல்கள் திருத்தூதர்கள் (அப்போஸ்தலர்கள்) என்று அழைக்கப்பட்டனர். இவர்களிலும் மூவர் முதல் வட்டத்தில இடம் பெற்றிருந்தனர். அவர்கள் தொடக்கத் திருச்சபையின் தலைவரான புனித பேதுரு, செபதேயுவின் மகன் யாக்கோபு, அவரது சகோதரர் நற்செய்தியாளரான புனித யோவான்.

இயேசுவின் பணி வாழ்வில் பன்னிரு திருத்தூதர்களும் இயேசுவுடனேயே இருந்தாலும் இயேசுவின் மிக முக்கிய நிகழ்வுகளில் இயேசுவுடன் உடனிருக்கத் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் இந்த மூவர் மட்டுமே. அந்த வகையில் இயேசுவுடன் அவர்கள் இருந்த நிகழ்வுகள் நான்கைக் குறிப்பிடலாம்.

1. சீமோனின் மாமியாரைக் காய்ச்சலிலிருந்து குணமாக்கிய வேளை (மாற் 1:29-34)
2. யாயீரின் மகள் பன்னிரண்டு வயது சிறுமியைக் குணமாக்கியபொழுது (லூக் 8:40, 42, 49- 56)
3. ஆண்டவரின் உருமாற்றம் (மத் 17:1-13)
4. கெத்சமனித் தோட்டம் (மத் 26:36-46)

இவ்வாறு நாம் கொண்டாடும் பெரிய யாக்கோபு இயேசுவின் காலத்திலேயே இயேசுவின் வாழ்விலும் பணியிலும் தனி இடம் பெற்றிருந்ததாக நற்செய்தி நூல்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. பன்னிருவரிலும் நம்பிக்கைக்குரியவர்களாகக் கருதப்படும் மூவரில் ஒருவர் பெரிய யாக்கோபு.

### இயேசுவின் சகோதரரா பெரிய யாக்கோபு?

புதிய ஏற்பாட்டில் பெரிய யாக்கோபு "ஆண்டவரின் சகோதரர்: என்று அழைக்கப்படுகின்றார். நற்செய்தி நூல்களில் குறிப்பிடப்படுகின்ற இயேசுவின் பெண் சீடர்களில் ஒருவரான சலோமி யாக்கோபு, யோவானின் தாய். என்றும் இவர் ஆண்டவரின் தாய் மரியாவின் சகோதரி என்றும் மரபு கூறுகிறது. அந்த மரபுப் படி யாக்கோபும் யோவானும் இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரர்களே, எனவே தான் புனித பெரிய யாக்கோபுவை இயேசுவின் சகோதரர் என்று அழைக்கும் வழக்கம் தொடக்க திருச்சபையில் ஏற்பட்டது என்று கருத இடமுண்டு.

### சந்தியாகப்பர் யார்?

எமது நாட்டில் உள்ள திருத்தூதர் பெரிய யாக்கோபுவுக்கு நேர்ந்தளிக்கப்பட் அனைத்துக் திருத்தலங்களும், கோவில்களும் சந்தியாகப்பர் கோயில் என்று அழைக்க-ப்படுகின்றன. கொழும்பில் பிரசித்திப் பெற்று விளங்கும் சென் ஜேம்ஸ் ஆலயம் என்று சொல்லப்படுகின்றது. அதுபோல் யாழ்ப்பாணத்திலும் புனித சந்தியாகப்பர் என்று அழைக்கப்படுகின்றது. சான் (San - புனித) + யாகு + அப்பர் (யாகப்பர்) என்பதே சந்தியாகப்பர் என்று வழக்கில் வந்துள்ளது. எனவே நாம் சந்தியாகப்பருக்கு விழாக் கொண்டாடும் பொழுது திருத்தூதர் பெரிய யாக்கோபுவுக்குத்தான் விழா எடுக்கின்றோம். சந்தியாகப்பர் விழா என்பது திருத்தூதர் பெரிய யாக்கோபு விழாவே.

### தொடக்க திருச்சபையின் புனித பெரிய யாக்கோபு

ஆண்டவர் இயேசுவின் இறப்பு - உயிர்ப்பிற்கு பிறகு திருச்சபை எருசலேமில் வெகு விரைவாகப் பரவ ஆரம்பித்தது. தொடக்கத்தில் இப்புதிய நெறி யூத மதத்தின் ஒரு புதிய குழுவாகவே (Sect) கருதப்பட்டது. அப்படி எருசலேமில் திருச்சபை வெகுவாகப் பரவிய காலத்தில் எருசலேம் திருச்சபையின் தலைவராகக் கருதப்பட்டவர் ஆண்டவரின் சகோதரரான புனித யாக்கோபு.

தொடக்க திருச்சபையில் கி.பி 4ஆம் நூற்றாண்டு வரை நான்கு திருப்பீடங்கள் இருந்தன என்பது வரலாற்று உண்மை. அவை. 1. எருசலேம் 2. அந்தியோக்கியா 3. அலெக்சாந்திரியா 4. உரோமை இந்த நான்கு திருச்சபை தலைநகர்களில் எருசலேம் தாய்த் திருச்சபை என்று அழைக்கப்பட்டது. இந்த தாய்த் திருச்சபை தலைவராக வெகு சிறப்பாக செயல்பட்டவர் புனித பெரிய யாக்கோபு என்கிறது திருச்சபை.

செபதேயுவின் மக்களான யாக்கோபுவும் யோவானும் இயேசுவின் காலத்தில் துணிச்சல் மிக்கவர்களாகவும் காணப்பட்டதை நற்செய்தி நூல்கள் பதிவு செய்துள்ளன. இயேசு ஆட்சியுரிமையில் வரும்போது இவர்களில் ஒருவர் வலப்புறமும் மற்றவர் இடப்புறமும் அமரும் தகுதி வேண்டும் என்ற முன்னுரிமையை நிலைநாட்ட முயற்சி செய்தவர்கள். (மாற் 10:35) இதற்குத் தங்கள் தாயையும் சிபாரிசு செய்ய துணையாக அழைத்து வந்தவர்கள். சமாரியா வழியாக இயேசு எருசலேம் நோக்கி பயணம் செய்தபொழுது சமாரியர்கள் அவரைத் தடுத்தார்கள். அப்போது "ஆண்டவரே வானத்திலிருந்து தீ வந்து இவர்களை அழிக்குமாறு செய்யவா" (லூக் 9:54) என்ற ஒருவகை தீவிரவாதத் தன்மையோடு இயேசுவின் பின் நின்றவர்கள்.

இத்தகைய, இயேசுவுக்காக தீவிர செயல்பாடு. தங்களுக்குப் பதிலாக இயேசுவை முன்னிறுத்தும் பாங்கு தொடக்கத் திருச்சபையில் புனித பெரிய யாக்கோபுவின் வாழ்வில் காணப்பட்டதாக தெரிகிறது. எனவேதான் நற்செய்தி அறிவிப்புப் பணியில் தீவிர செயல்பாட்டுக் காரணமாக பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் முதல் நபராக ஏரோது அக்ரிபா மன்னனின் ஆட்சிக் காலத்தில் புனித பெரிய யாக்கோபு வேதசாட்சி மரணம் அடைகிறார்.

### வெண்குதிரையில் பயணிக்கும் புனித யாகப்பர்

வரலாற்றின் அடிப்படையில் பாலஸ்தீன எல்லைகளைக் கடந்து, இன்னும் குறிப்பாக, எருசலேம் பெருநகரைக் கடந்து புனித யாக்கோபு சென்றிருக்க இடமில்லை என்ற கருத்து தோன்றுகினது. ஆனால் எருசேலம் திருச்சபை எண்ணிக்கையிலும் தன்மையிலும் பெரும் சக்தி வாய்ந்த ஒன்றாகத் திகழ்ந்தது வெள்ளிடைமலை. எருசலேம் திருச்சபையைக் கடந்து முதல் நூற்றாண்டிலேயே திருச்சபை வெகு வேகமாகப் பரவியது. யூதர்களின் சமயமாக இருந்த கிறிஸ்தவம் உலக சமயமாக மாறியது. நான்கு திருச்சபை மையங்களில், மூன்று திருச்சபை மையங்கள் புறவினத்து திருச்சபை மையங்கள். கிறிஸ்தவம் உலகு தழுவிய சமயமாக உருவாகியது. அதில் எருசலேம் திருச்சபை நான்கில் ஒரு பகுதியே. இருப்பினும் உலகத் திருச்சபையின் மையமாக, உயர் நாதமாக, ஒருங்கிணைப்பு மையமாக முதல் மூன்று நூற்றாண்டுகளில் செயல்பட்டது எருசலேம் தலத்திருச்சபையே. எனவேதான் நான்கில் மூன்று பகுதி கிறிஸ்தவத்திற்கு முன்னோடிகளான புனித பவுலும், பர்னபாவும் எருசலேம் நோக்கி முக்கிய முடிவுகளை எடுப்பதற்காக வருகிறார்கள். எருசலேம் சங்கத்தின் (கி.பி 50) முடிவுதான் திருச்சபை உலகத் திருச்சபை என்ற மாற்றத்திற்குக் கொண்டு வந்தது. இத்தகைய, முதல் நூற்றாண்டுகளில் சக்தி வாய்ந்த தலத் திருச்சபையின் தலைவராக புனித பெரிய யாக்கோபு செயல்பட்டுள்ளார் என்பதே இவருடைய ஆளுமையின் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது. வரலாற்றின் அடிப்படையில் இரண்டாவது, மூன்றாவது நான்காவது திருச்சபை மையங்களாக உருவெடுத்த அந்தியோக்கியா, அலெக்சாந்திரியா, உரோமை திருச்சபைகளுக்கு நற்செய்திப் பணியாளர்களை அனுப்பி வைத்ததும் எருசலேம் திருச்சபையே. இத்தகைய எருசலேம் திருச்சபையின் முதல் தலைவராக செயல்பட்டு, முதல் மறைசாட்சி என்ற பெயர் பெற்று எருசலேமில் அடக்கம் செய்யப்பட்ட புனித பெரிய யாக்கோபு மத்திய நூற்றாண்டுகளில் (Middle Ages) ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் மிகுந்த முக்கியத்துவமடைந்ததற்குக் காரணம் ஐரோப்பாவில் உள்ள ஸ்பெயின் நாட்டின் சாந்தியாகோ, தே காம்போஸ்தெல்லா என்ற இடத்தில் உருவாகிய புனித பெரிய யாக்கோபுவின் பக்தி முயற்சியே. இவரின் திருப்பண்டங்கள் சாந்தியாகோ நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அமைக்கப்பட்டுள்ள பேராலயத்தில் பாதுகாக்கப்பட்டு ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலிருந்தும் திருப்பயணிகள் வந்து குவிய ஆரம்பித்தனர். பல்வகையான நோய்கள், பிணிகள், பேய்த் தொல்லைகள், ஆன்மீகத் தடைகள் ஆகிய அனைத்துப் பிரச்சினைகளிலிருந்தும், தீமைகளிலிருந்தும் சந்தியாகப்பர் (சான் + யாக்கோபு + அப்பர்) காப்பதாக மக்கள் கருதினர்.

கி.பி 3ஆம் நூற்றாண்டில் இஸ்லாம் தோன்றி அரபு நாடுகளைக் கடந்தும் ஐரோப்பிய கண்டத்தில் ஸ்பெயின் வழியாக வேகமாகப் பரவத் தொடங்கிய காலக்கட்டத்தில், சந்தியாகப்பர் வெண்குதிரையின் மீது வந்து இஸ்லாமியப் படைகளோடு போரிட்டு, அதற்குமேல் இஸ்லாமியப் படைகள் முன்னேறாதவாறு தடுத்து நிறுத்தியவர் என்று ஒரு மரபு கூறுகிறது. இதுபோன்ற பல்வேறு நம்பிக்கைகள் சாந்தியாகோ நகரை அப்போஸ்தலர்களின் திருத்தலங்களிலேயே மத்திய காலத்தில் மிகப் பிரசித்தி பெற்றதாக மாற்றின. ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் யாக்கோபு வழி (Jacob;s way) காணப்படுவது இதனுடைய கடந்த கால சிறப்பைக் சுட்டிக்காட்டுகிறது. இன்றும், எண்ணற்ற திருப்பயணிகள் கால் நடையாகவும், வாகனங்கள், வானூர்த்திகள் வழியாகவும் சாந்தியாகோ திருத்தலத்தில் வந்து குவிகின்றனர்.

### புதிய நற்செய்தி அறிவிப்பும் சந்தியாகப்பரும்

புதிய நற்செய்தி அறிவிப்பு என்ற சொல்லாட்சி முன்னாள் திருத்தந்தை புனித ஜான்போல் அவர்களால் முதன் முதலாக பயன்படுத்தப்பட்டது. ஒரு காலத்தில் கிறிஸ்தவ நாடுகளாக இருந்து தற்போது சமய நம்பிக்கை எதுவுமின்றி கடவுள் நம்பிக்கையற்று இருக்கின்ற ஐரோப்பிய மக்களுக்கு மீண்டும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும் என்பதையே புனித இரண்டாம் ஜோன்போல் புதிய நற்செய்தி அறிவிப்பு (New Evangelization of Re avangelization) என்று அழைத்தார். ஐரோப்பிய மக்களுக்கு மீண்டும் நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டிய தேவையை அறிந்திருந்த திருத்தந்தை பதினாறாம் பெனடிக்கும் இதனை வலியுறுத்தி வந்தார்.

நமது நாட்டிலும் கிறிஸ்தவர்கள் மிகக் குறைவாக வாழும் சூழலில் முதல் நற்செய்தி அறிவிப்புக்கான தேவை தொடர்கிறது. இயேசு என்ற நற்செய்தி அவரை அறியாத மக்களிடையே அறிவிக்கப்பட வேண்டும். இயேசு என்ற நற்செய்தி அறிவிப்பின் வடிவங்கள் பல. வழிகள் பல, வகைகள் பல, அத்தனை வகையின் ஊடாகவும் இயேசு அறிவிக்கப்பட வேண்டும். இயேசுவின் மதிப்பீடுகளைப் பின்பற்றும் மக்கள் தொகை பெருக வேண்டும். "இயேசுவை அறிவிக்காவிடில் எனக்கு ஐயோ கேடு" என்ற புனித பவுல் அடியாரின் வார்த்தைகளை ஒவ்வொரு கிறிஸ்தவரும் நெஞ்சில் பதித்துக் கொள்ள வேண்டும். அடிப்படைவாத சபைகளின் தாக்கம் பெருகி வரும் இன்றைய சூழலில் நற்செய்தி அறிவிப்பு என்பது எழுதப்பட்ட இயேசுவின் வார்த்தையைச் சரியாகவும், முழுமையாகவும் அறிவித்து அந்த நற்செய்தி வழியாக மக்களை ஈர்ப்பது என்பதும் உள்ளடங்கும்.

இந்நேரத்தில் இத்தகைய நற்செய்தி அறிவிப்புக்கு எப்படி புனித சந்தியாகப்பர் (புனித பெரிய யாக்கோபு) நமக்கு ஒரு முன் உதாரணமாகிறார் என்பதைக் காண்போம்.

15

# இலங்கைக் கத்தோலிக்க சமயத்திற்கு பெருந்தொண்டாற்றிய வண. கொன்சால்வேஸ் அடிகள்



சாங்கோபங்க சுவாமிகள் என்றும் இலங்கையின் நூதன நட்சத்திரம் என்றும் அக்காலத்தார் புகழ்ந்து ஏந்திய வண. யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகள் பாரத நாட்டின் மேற்குப் பகுதியின் உள்ள திவாரி என்னும் ஊரிலே தோமஸ கொன்சால்வேஸ் மரியானா அமிரு தம்பதியினருக்கு மைந்தனாக 1676ஆம் ஆண்டு 6ஆம் மாதம் 08ஆம் திகதி அவதரித்தார். இவர் திவாரியிலுள்ள வரப்பிரசாத மாதா தேவாலயத்தில் திருமுழுக்குப் பெற்றபோது அவருக்கு யாக்கோமே என்னும் அர்ச். யாகப்பரின் பெயருடன் கொன்சால்வேஸ் என்னும் தந்தையாரின் உப நாமமும் சூட்டப்பட்டது. இளமைப் பராயம் தொட்டு இறை பக்தியில் மூழ்கிப் போயிருந்த பெற்றோரிடம் சத்திய வேத குணசீலராகவும், திருச்சடங்குகளில் நிறைந்த பற்று உள்ளவராகவும் வளர்க்கப்பட்டார். இறை பற்றுடன் சங்கீதப் பிரியமும் அவருக்குப் பெற்றோரிடமிருந்து பரம்பரையாக கிடைக்கப் பெற்றது. அடிகளாரது தாய் மொழி கொங்கணி மொழியாகும். திவாரியிலுள்ள ஆரம்ப வித்தியாலயத்திலே தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். சிறுபிராயம் தொட்டு கல்வியில் மிகுந்த திறமை உள்ளவராகத் திகழ்ந்தார். பிடில், ஹார்மோனியம் போன்ற இசைக் கருவிகளை வாசிப்பதில் நிபுணத்துவம் பெற்று விளங்கினார். பெற்றோர் இவரின் திறமைகளைக் கண்டு ஆரம்ப பாடசாலையில் நின்று விடுவித்து ஐரோப்பிய இலங்கியங்களைப் படிக்க வைத்தார்கள். அடிகள் பெறாம் என்னும் குருவானவரிடம் இலத்தீன் செய்யுட்களும், அணி இலக்கணமும் கற்றுத் தேர்ந்தார்.

தேவ ஊழியம் புரிய வேண்டுமென்று அவர் கொண்டிருந்த பேரவலைத் திருப்திப் படுத்தலுக்காக பெற்றோர் அவரை கோவை மாநகரின் பல்கலைக் கழகத்தில் சேர்த்தார்கள். அங்கு அவர் தனது 17ஆம் வயதில் கலைமானிப் பட்டம் பெற்றதன் பின்னர் தோமையார் அக்வைனஸ் கல்விக் கழகத்தில் நான்கு ஆண்டுகள் இறையியல் கல்வியைக் கற்றுத் தேர்ந்தார். இலங்கைக் கிறிஸ்தவர்கள் ஒல்லாந்தரினால் நெருக்கிடைப்படுவதை அறிந்து மனமுருகி, அவர்களை மீட்டுக் கொள்வதற்காக இலங்கைக்கு சென்றிருந்த புனித யோசேவ்வாஸ் முனிவருக்கு தாமும் உதவ வேண்டுமென்ற பேராவல் கொண்டவராக விளங்கினார். பெற்றோரின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் 1700ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 2ஆம் திகதி அற்புதக் குரு மடத்தில் சேர்ந்து தியாக்கோன் பட்டம் பெற்று விரைவில் குருப்பட்டமும் பெற்றார். இறை அரசைப்பரப்பத் தன்னை முழுதாக அர்ப்பணித்தார். இறைவன்பால் ஆன்மாக்களைச் சேர்க்கும் பெரும் பசி கொண்டவராகச் செயற்பட்டார். தனது முழு நாளையும் செபத்திலும், திருப்பலி ஒப்புக்கொடுப்பதிலும் செலவிட்டார். வெள்ளியும் சனியும் ஒரு சந்தி காத்தார். திங்கள், புதன் நாட்களில் விரதம் அனுஷ்டித்தார். ஞாயிறு நாள் முழுதாக ஞான முயற்சிகளிலும் செபத்திலும், போக்கினார். அங்கு நான்கு வருடங்கள் கழித்த பின் கோவைப் பல்கலைக் கழக விரியுரையாளராக கடமைப் புரிந்தார். இக்கால கட்டத்திலேயே புனித யோசேவ்வாஸ் அடிகள் நான்கு குருமார்களை இலங்கைக்கு அனுப்புமாறு வேண்டி கொச்சின் மறை ஆயருக்கு கடிதம் எழுதியிருந்தார். இவ் வேண்டுகோளை சிரமேற் கொண்டு கொன்சால்வேஸ் அடிகளாரும் வேறு மூன்று குருமாரும் 1705 ஆவணி 31ஆம் திகதி மன்னாரில் வந்திறங்கினர். குருமாரின் வருகையை அறிந்த கத்தோலிக்க மக்கள் இரகசியமான முறையில் அவர்களை வரவேற்று பெறாம் குருவானவரிடம் சேர்ந்தனர். அப்போது யோசேவ்வாஸ் முனிவர் வன்னி மாவட்டத்தில் பறப்பான் கண்டல் என்னும் ஊரில் தங்கியிருந்தார். இந்த இடத்திலே குருமார்களின் சேவைக்காகப் பங்குகள் நியமிக்கப்பட்டன. கொன்சால்வேஸ் அடிகளாருக்கு மன்னார் தீவும், அரிப்பு, முசலி என்ற ஊர்களும் பொறுப்பாக விடப்பட்டன. இவை யாவும் தமிழ் பேசும் கிராமங்கள் என்பதால் அடிகளது தமிழறிவைப் பெருக்கிக் கொள்ள இது பெரும்வாய்ப்பாக அமைந்தது. 1707இல் போளவத்தைப் பிரதேசத்தில் தங்கியிருந்து பன்னிரண்டு எழுத்தாளர்களை வேலைக்கமர்த்தி நூல்கள் பலவற்றை எழுதினார். அவ் கிறிஸ்தவ இலக்கியங்கள் காட்டிய பெரு விருப்புக் காரணமாக சிங்கள மொழியில் 22 நூல்களும் தமிழ் மொழியில் 14 நூல்களும் போர்த்துக்கேய மொழியில் 5 நூல்களும் ஒல்லாந்த மொழியில் ஒரு நூலுமாக 42 நூல்களை கத்தோலிக்க சபைக்கு எழுதினார்.

தற்காலத்தில் நாம் படிக்கும் செபங்கள், கீர்த்தனைகள், சமய நூல்கள் ஒப்பாரிப் பாடல்கள் யாவும் இவரால் எழுதப்பட்டவையே. இவர் வட பகுதியில் தமிழைக் கற்றுக்கொண்டதுபோல் கண்டியில் விமலதர்ம சூரிய மன்னனின் தலைமை அதிகாரியான தஸ்கோன் என்பவரிடம் சிங்கள மொழியைக் கற்றுத் தேர்ந்தார். ஆங்கிலம், இலத்தீன், கொங்கணி போர்த்துக்கேயம் ஒல்லாந்தம் போன்ற மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினார்.

1727இல் கெக்கிறாவை தேவாலயம் அழிக்கப்பட்டதன் பின்னர் போளவத்தையை கத்தோலிக்க குடியேற்றத்திற்கு ஏற்ற அமைவிடமாக தெரிந்தெடுத்தார். கண்டி அரசர் நரேநந்திர சிங்க மன்னனின் விருப்பத்துடன் தேவாலயமொன்றை அமைத்தார். இதனை மையமாகக் கொண்டு நாட்டின் சகல பகுதிகளுக்கும் சென்று தேவ ஊழியம் புரிந்தார். பல்லாயிரக் கணக்கான பதிதர்களை கத்தோலிக்க சபையில் சேர்க்க இரவு பகலாக உடலாலும், உள்ளத்தாலும் உழைத்தார். போளவத்தை பங்கைத் தலைமைத் தளமாகக் மாற்றியமைத்தது இலங்கைத் திருச்சபை அடைந்த வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. ஆசீ நீரே எல்லா நோய்களுக்கும் கைகண்ட மருந்தாகக் கொண்டு பல நோய்களைத் தீர்த்தார். கொன்சால்வேஸ் அடிகள் குருமாரைக் கண்டவுடன் "இயேசு கிறிஸ்துவைத் துதிக்க" எனக்கூறி வாழ்த்தும் வழக்கத்தை கிறிஸ்தவர்கள் மத்தியில் ஏற்படுத்தினார். அவர் இலங்கைத் தீவில் ஏற்படுத்திய மறைத்திருப்பலிகள், கத்தோலிக்க வேதத்தில் சேர்ந்த பதிதர்கள், அவர் ஓட்டிய பேய் பிசாசுகள், அவர் தீர்த்த நோய்கள், காட்டு மிருகங்களால் தப்பிய சந்தர்ப்பங்கள் , கட்டி எழுப்பிய தேவாலயங்கள் தாபித்த பக்திச் சபைகள் பல பாஷைகளில் அவர் இயற்றிய நூல்கள், இவை பற்றிய விபரங்களை இச்சிறு கட்டுரையின் எடுத்தியம்ப முடியாது. இவ்வாறன மகத்தான தொண்டாற்றிய வண. கொன்சால்வேஸ் அடிகள் 1742ஆம் ஆண்டு ஆடி மாதம் 17ஆம் நாள் இறைபதம் எய்தினார். அவரது திரு உடல் போளவத்தை தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**ஆக்கம் : மேரி அலெக்சியா திசேரா**
**ஆசிரியை, போளவத்தை**

## 01 நாம் வணக்கம் ...

பங்கின் புனிதராம் புனித அந்தோனியாரின் திருவிழா நிறைவுக்குப் பின்னர், எமது கொழும்பு உயர்மறைமாவட்ட பிரதான மேய்ப்பராகிய அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, கொள்ளுப்பிட்டி பங்கிற்கு விஜயம் செய்து. மும்மொழி திருப்பலியை இம்மாதம் 2ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒப்புக்கொடுத்தார். பேராயர் அவர்கள் ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியில் தமது உரையை ஆற்ற, அதிவண. அருட்பணி மனோகுமாரன் அடிகளார் தமிழில் நேரடி மொழிபெயர்ப்பு செய்தார். அவ்வுரையில் தெளிவாக வலியுறுத்தப்பட்டதாவது, கத்தோலிக்கராகிய நாம் புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துவது இல்லை, மாறாக மரியாதையும், கௌரவமுமே செலுத்துகின்றோம். அவர்களும் எம்மைப் போல் சாதாரண மனிதர்களாக வாழ்ந்தவர்கள். ஆனால் கிறிஸ்துவுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள். நாம் அவர்கள் முன்மாதிரியை பின்பற்றுகிறோம். ஆனால் நாம் வணக்கம் செலுத்துவது ஆண்டவருக்கு மட்டுமே என கர்தினால் தமது மறையுரையில் கூறினார். திருப்பலி நிறைவில் ஒவ்வொரு தனி நபர் தலையிலும் தமது கரங்களை வைத்து கர்தினால் ஆசீர் வழங்கினார். விசுவாச ஊக்குவிப்புக்குழு அருட்தந்தையர்கள், பங்குத்தந்தை அகஸ்ரீன் பர்னாந்து அடிகளாருடன் இணைந்து இத்திருப்பலியினை சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர்.

## 08 சுதேச குருக்கள் தினம்

எமது கலாசார பண்பாட்டு பழக்கவழக்கங்கள், மக்களின் வாழ்க்கை முறைகள், என்பவற்றைப் புரிந்துக் கொண்டு பணி செய்பவர்களே சுதேச குருக்கள். சுதேச குருக்கள் பற்றி 15ம் ஆசீர்வாதப்பர் பாப்பரசர் கூறும் போது தங்களுடைய சொந்த நாட்டிலிருந்து குருக்களை உருவாக்க வேண்டியது தான் பணிகளைச் செய்பவர்களின் பிரதானகடமையாக இருக்க வேண்டும். அதிலேதான் அந்தந்த திருச்சபையின் நம்பிக்கை எதிர்பார்ப்பு என்பன அடங்கி இருக்கின்றன என்கின்றார். 9ம் பத்திநாதர் பாப்பரசர் கூறும் போது உங்களுடைய சொந்த (சுதேச) குருக்கள் துறவிகளை உருவாக்க வேண்டும். இந்த கடமையை முழு ஆற்றலோடு செய்ய மறுத்தால் அப்போஸ்தலிக்க பணியாளர்கள் முடங்கியேபோய்விடும். இவ்வாறாக சொந்த குருக்களை உருவாக்காத நிலையானது அந்த திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒருதடையாகவும் குறைபாடாகவுமே இருக்கும் என்பதில் "ஐயமில்லை" என்கின்றார். சுதேச குருக்களை உருவாக்குவோம். அவர்கள் பணிக்காக செபிக்க முன்வருவோம்.

பரிசுத்த வேதாகமத்தில் சுதேசகுருக்களின் தேவை ஏன் என்பதை நோக்கும் போது எசே 3:17 ல் "மானிடா! நான் உன்னை இஸ்ராயேல் வீட்டாருக்கு காவலாக நியமித்துள்ளேன். என் வாயின் சொற்களைக் கேட்டு அவர்களை என் பெயரால் எச்சரிக்கை செய்" என்று ஒரு நாட்டிற்கு காவலாளியாக ஏற்படுத்துவதை நாம் காண்கின்றோம். அத்தோடு எசே.22:30ன் படி "எனக்கும் இந்த நாட்டு மக்களுக்கமிடையே ஒரு சுவரை எழுப்பி அதன் மூலம் இந்நாட்டு மக்களை அழியாதபடி தடுப்பவன் ஒருவனை அவர்களிடையே தேடினேன்" என்று குருக்களின் தேவைப்பற்றிய இறைவனின் ஆதங்கத்தைக் காண்கின்றோம். "உங்கள் தீயவழியினின்று திரும்பி வாருங்கள் உங்கள் செயல்களைசீர்படுத்திக் கொள்ளுங்கள் வேற்றுத் தெய்வங்களை நாடிச்சென்று அவற்றை வழிப்படாதீர்கள் என்று இஸ்ரயேல் மக்களை எச்சரிக்கும் கடவுள் இறைவாக்கினரான என் ஊழியர் அனைவரையும் நான் மீண்டும் மீண்டும் உங்களிடம் அனுப்பிவைத்தேன் (எரே. 35:15) என்று காலத்திற்கு காலம் மக்களைச்சீர்படுத்தவும் வழிநடத்தவும் தம் பணியாளர்களான குருக்களை அனுப்பவதை அறிகின் றோம்.

யோவேல் இறைவாக்கினர் 2:17ல் குறிப்பிடுவது போல "ஆண்டவரின் ஊழியர்களாகிய குருக்கள் கோவில் மண்டபத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையே நின்று அழுத வண்ணம், ஆண்டவரே உமக்கள் மீது இரக்கம் கொள்ளும். உமது உரிமைச் சொத்தை வேற்றினத்தார் நடுவில் நிந்தைக்கும் பழிசொல்லுக்கும் ஆளாகாதீர்கள்" எனச் சொல்வார்களாக! இதன் வழியாக மக்களுக்காக எந்நேரமும் பரிந்துரைக்கின்ற, இறைவனின் இரக்கத்தை, அருளை, ஆசீர்வாதங்களை பெற்றுக் கொடுக்கின்ற நடுநிலையாளர்களாக குருக்கள் திகழ்வதை நாம் அறியக்கூடியதாக உள்ளது. சுதேச குருக்கள் ஏன் எதற்கு இறைவனால் எமக்கு அனுப்பப்படுகின்றார்கள் எனும் போது இறைவாக்கினர் எசேக்கியலுக்கு புரியாத பேச்சும் கடினமொழியும் உடையமக்களிடம் அல்ல. இஸ்ரயேல் வீட்டாரிடமே நீ அனுப்பப்படுகின்றாய் (எசே 3:5) என்றுவேறுமொழி, இனம் கடந்த மக்களுக்கல்ல மாறாக தெரிந்த அறிந்த மக்களிடையே அனுப்பப்பட்டு இறைவனுடைய சொற்களை அவர்களுக்கு அறிவிக்க பணிக்கப்படுவதை நாம் காண்கின்றோம். அத்தோடு ஒவ்வொரு குருவும் "மனிதரிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு பாவங்களுக்கு கழுவாயாக காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்துவதற்காக மக்கள் சார்பாகக் கடவுள் முன் பணிபுரிய ஏற்படுத்துகின்றார்கள். இக் குரு அறியாமையில் இருப்போருக்கும் ,நெறிதவறி நடப்போருக்கும் பரிவுகாட்டக்கூடியவராயும் இருக் -கின்றார்.(எபி 5:1-4)ல் காணக்கூடியதாகவும் உள்ளது.

கத்தோலிக்க திருச்சபை 2017 ஆடி 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுதேசகுருக்கள் தினத்தை கொண்டாடுகின்றோம். தூய யோசப்வாஸினுடைய ஆண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தூ யயோசப்வாஸ் அடிகளார் சுதேச குருக்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்கின்றார். நாம் மிகுந்த ஆர்வத்தோடும் அக்கறையோடும் சுதேச குருக்களை உருவாக்கவும் வளர்க்கவும் முன்வரவேண்டும். எமது நாட்டின் ஆயர்கள், குருக்கள் அவர்கள் பணிகள் அனைத்தையும் இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்கவும் ஏராளமான சுதேச குருக்கள் எம்மிடையே இருந்து உருவாக்கப்படவும் ஆசிப்பதோடு எம் குருக்களை நினைவு கூர்ந்து அவர்களுக்கு எம்மாலான உதவிகள் புரிந்து இறையரசு இவ்வுலகில் மலர குருக்களோடு சேர்ந்து இறையரசை கட்டியெழுப்ப ஆசிக்கின்றேன்.

**அருட் பணி அ. யூட் குரூஸ்**
**மன்னார் மறைமாவட்ட இயக்குனர்**
**பாப்பிறை மறைபரப்புசபைகள்**

## 05 உழைப்பினால் வந்த...

ஆனால், மண்ணின் மைந்தர்களோ ஏழைகளாகவே இருக்கிறார்கள். இவர்களைத் தவிர ஆப்பிரிக்காவிலிருந்து வந்த நீக்ரோக்களையும் இங்கே பார்க்கலாம். மெஸ்டித்சோ என்னும் கலப்பு இன மக்களையும் இங்கே பார்க்க முடிகின்றது. வெனசுவேலாவின் எண்ணெய் கிணறுகளிலும் செம்புச் சுரங்கங்களிலும் வேலை செய்பவர்கள் இவர்கள்தான். இவர்களின் உழைப்பால் பணம் சம்பாதித்தவர் பலர். ஆனால், இவர்களுடைய ஆன்மீக நலனைக் கவனிக்க ஒருவருமே அக்கறை எடுத்ததில்லை. இக்குறையைத் தீர்க்கத்தான் பெனிட்டஸ் ஆண்டகை அன்னை தெரசாவின் கன்னியர்களை இங்கே அழைத்து வந்தார். தொடரும்

## 01 முத்துராஜவலையில்...

இதிலுள்ள மிகப் பயங்கரமான நிலை என்னவென்றால், வைத்தியசாலைகளிலும், மலர்ச்சாலைகளிலும் இறந்த உடல்களுக்கு செய்யப்படும் பிரேத பரிசோதனை மற்றும் உடல்களை பதப்படும்போது (Embalm) வெளியெடுக்கப்படும் மனித உடலின் கழிவுகளைக் கூட தண்ணீர் நிறைந்துள்ள அப்பகுதியில் முறையற்ற விதத்தில் போடப்படுகின்றது. எனவே இத்தகைய கழிவுகளால் முத்துராஜவலையில் தண்ணீர் மாசடைந்து, அது நீர்கொழும்பு முகத்துவாரப் பகுதியில் சேர்ந்து அதன் வழியாக பெறப்படும் தண்ணீர் மனித பாவனைக்கு பொருத்தமற்றதாக மாறுவதுடன், மனித உயிர்களுக்கு தீங்கிழைப்பதாவும் மாறிவருகிறது.

இதனால் அப்பகுதியில் இருக்கும் மீனினங்களும் பாதிக்கப்படுகிறது. எனினும் இதுகுறித்து அதிகாரிகள் எவ்வித அவதானமும், இன்றி இருப்பதுடன் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது இருப்பது அனைவரும் அறிந்த விடயமே. இந்த செயற்பாட்டினால் காடுகள் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு துறையினால் வர்த்தமானியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு பிரதேசம் கூட சீரழிவுக்கு உள்ளாகி வருகிறது.

எனவே இத்தகைய செயலினை முன்னிட்டு நாம் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். அத்தோடு கொழும்பு நகரில் சேரும் குப்பைகளை, சூழல் மாசுறா வண்ணம் அகற்றுவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்காது இவ்வாறான முறையற்ற விதத்தில் அவற்றை அப்புறப்படுத்துவதற்கு ஒருசில அதிகாரிகள் எடுத்துவரும் முயற்சிகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. எனவே இத்தகைய முறையற்ற செயலை கைவிட்டு, இதற்கான நிலையான தீர்வை, சூழல் மாசுறாவண்ணம் மேற்கொண்டு நிரந்தர தீர்வினைக் காணுமாறு அரசாங்கத்திடமும், கொழும்பு மாநகரசபை மற்றும் அதனுடன் தொடர்புபட்டுள்ள பொறுப்புள்ள அதிகாரிகளிடம் நாம் கேட்டுகோள்கின்றோம்

**அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை,**

**கொழும்பு உயர் மறைமாவட்டம்**

## XX சின்ன வத்திக்கான்

20ஆம் திகதி புனித செபஸ்தியாரின் திருவிழாவைக் கொண்டாடி வருகின்றார்கள். இருந்தும் யாழ் மறைமாவட்டத்தின் கரம்பென் ஊரில் வேளாண்மை, விவசாயம் தை மாசி மாதங்களில் நடைபெறுவதனால் பங்கு மக்கள் இவ்விழாவை ஆடி மாதம் 14ஆம் திகதி வெகுசிறப்பாக கொண்டாடி வருகின்றனர். அதற்கினங்க இவ்வாண்டு கரம்பொன் புனித செபஸ்தியார் திருவிழா கடந்த 30.06.2017 அன்று பங்குத்தந்தை அருட்திரு பீ. பத்திநாதர் அடிகளாரின் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அன்று முதல் தினமும் மாலையில் ஆயத்த ஆராதனை நிகழ்வுகள் நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை 09.07.2017 காலை 7.00 மணிக்கு கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருவிழா திருச்சுரூப பவனியுடன் நிறைவுபெற்றது.

**தகவல் : டேவிட்.**

## XX தெய்யத்தக்கண்டிய

லத்பந்துற மக்களுக்கு ஒரு பொருளாதார பயன்பாடு -எளாகவும் விளங்குகிறது. எல்லாக்காலங்களிலும், குறிப்பாக மகாவலி மாதாவுக்கு சிறப்பாக விழா எடுக்கும் ஆவணி 19ம், 20ம் திகதிகளில் ஏனைய கத்தோலிக்க மக்கள் தொடர்ச்சியாக அங்கு வந்து செல்ல வேண்டுமென லந்பந்துற மக்கள் அவாவுடன் எதிர்பார்க்கிறார்கள். இவ்வாறு வருவோருக்கு தேவையான ஏனைய ஒழுங்குகளும் செய்துள்ளார்கள்.

கந்தளம் வீதிவழி, தம்புள்ளவிலிருந்து, பக்கமுள வழியாக, தெகியற்ற கண்டியை இரண்டு மணித்தியாலத்தில் வாகனத்தில் வந்து சேரலாம். கண்டியிலிருந்து 18 வளைவு (Bends) வழியாக மகியங்கனவை அடைந்து பொலநறுவை வீதி வழியாக கிறாந்துறுக்கொட்ட (35th kellometers) கடந்து சந்துண புறத்தைச் சேரவும். அங்கிருந்து லத்பந்துற குறியீட்டை அவதானிக்க முடியும். மடுவிலிருந்து பொலநறுவ வழியாக சந்துணபுற வை அடையலாம். லந்பந்துற திருத்தல மகாவலி மாதாவின் ஆசீரை அனைவரும் பெறுவீர்களாக.


## பணிப்பெண் தேவை

வத்தளையில் அமைந்துள்ள வீட்டிற்கு, வீட்டுப் பணிப்பெண் ஒருவர் உடனடியாகத் தேவை. (காலை 7.30 மணி தொடக்கம் - மாலை 5.00 மணி வரை) வயது எல்லை 40-60 வரை.

**தொடர்பு 011 – 2930020**

(N 1856)


## 13 தூய யாக்கோபு

1. புனித சந்தியாகப்பர் தனது சகோதரர் கிறிஸ்துவோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தார். அந்த உறவில் நாளும் வளர்ந்தார். அந்த உறவுக்குத் தனி உரிமை கொண்டாடினார். இயேசுவினுடைய பெயரை நிலைநாட்டிட எதிரிகளையும் எரிக்கத் தயாரானார். இயேசுவிடம் வாக்களித்தது போன்று இயேசு பருகிய துன்பக் கலத்தைப் பருக வேண்டிய நேரம் வந்ததும் பிற அப்போஸ்தலர்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக முதல் நபராக தமது உயிரை வழங்கினார். இதற்குக் காரணம் அவர் தமது சகோதரர் கிறிஸ்துவோடு கொண்டிருந்த அன்புறவு, பாசப் பிணைப்பு.

2. இன்றைய நற்செய்திப் பணியாளர் ஒவ்வொருவருக்கும் தேவையான முதல் தகுதி இயேசுவோடுள்ள உறவு. இயேசுவை நேரடியாக அனுபவித்திருக்கும் அனுபவம். இதனை விவிலிய வார்த்தைகள் வழியாகவும், திருவருட்சாதனக் கொண்டாட்டங்கள் வழியாகவும் பெற்றிருக்க வேண்டும். "இயேசு அனுபவம்" பெறாத எவரும் நற்செய்திப் பணியாளர் ஆவதற்கு தகுதி அற்றவர்.

3. தூய சந்தியாகப்பர் தனது உடல்,பொருள் ஆவி அனைத்தையும் இயேசு என்ற நற்செய்திக்காக அர்ப்பணித்தார். தனக்கென எதையும் தனியாக ஒதுக்கி வைக்கவில்லை. தனது எல்லாவற்றையும் இயேசு என்ற நற்செய்திக்காக இழக்கத் தயாரானார். இன்றைய நற்செய்தியாளர்கள் யாக்கோபின் வழியில் தங்கள் நேரத்தை மட்டுமல்ல தங்கள் பொருள், சேமிப்பு ஆகியவற்றையும் அந்தப் பணிக்கா வழங்கக் அழைக்கப்படுகிறார்கள்.

4. சந்தியாகப்பர் தான் நம்பியதில் தீவிரமான நம்பிக்கை கொண்டவராக இருந்தார். எதை விசுவசித்தாரோ அதை உறுதியாக விசுவசித்தார். அதேபோன்று நற்செய்திப் பணியாளர் ஒவ்வொருவரும் தமது நம்பிக்கையில் அறைகுறையாக இல்லாமல் முழுமையாக, தீவிரமாக இருக்கவும் அந்த நம்பிக்கையை ஒருவகை தீவிரத்தோடு அறிவிக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார்.

5. புனித யாக்கோபு எருசலேம் திருச்சபைக்குத் தலைமை ஏற்றார். அதேசமயம் தலைமை என்பதனைத் தொண்டு என்ற இயேசுவின் வார்த்தைகளில் உணர்ந்து கொண்டவர். எங்கு தலைமை தொண்டாகிறதோ அங்குதான் வளர்ச்சி இருக்கும். எருசலேம் திருச்சபையின் வளர்ச்சிக்கு புனித யாக்கோபின் அர்ப்பணத் தொண்டே காரணம். அவர் போன்ற நற்செய்திப் பணியாளர்களும் தொண்டர்களாக, நற்செய்தியின் தொண்டர்களாக, திருச்சபையின் தொண்டர்களாக பணியாற்ற அழைக்கப்படுகிறார்கள்.

6.இயேசுவுக்காக எதையும் இழக்கத் தயாராவதே உண்மையான சீடத்துவம், சீடன் குருவுக்கு மேற்பட்டவன் அல்லன். இயேசு ஆண்டவரே தனது தந்தையின் விருப்பத்தை ஏற்று இறையாட்சிப் பணிக்காக தன்னையே வழங்கினார். அவரது வழியை யாக்கோபுவும் பிற திருத்தூதர்களும் பின்பற்றினர். அதிலேதான் அவர்களது சீடத்துவம் நிறைவு பெற்றது. நற்செய்திப் பணியாளர்களுக்கும் அதுவே இயேசுவின் அழைப்பாக அமையும் என்றால் அதற்கும் அவர்கள் யாக்கோபின் வழியில் தயாராக வேண்டும். அப்பொழுதான் அவர்கள் அறிவிக்கும் நற்செய்தியாகவே அவர்கள் மாற இயலும்

## XX கொழும்பு நகரில்...

அத்தினங்களில் சிங்களமொழி, ஆங்கிலமொழிகளில் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 1ம் திகதி கொடியேற்றமும் 12ம் திகதி திருவிழாவும் நடைபெறவுள்ளது.

எமது பங்கு ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நிலையில் இவ்வாண்டு ஜுபிலி ஆண்டு திருவிழாவாக சிறப்பிக்கப்படவுள்ளது.

திருவிழா தினத்தின் இறுதி நிகழ்வில் இடம்பெறும் திருச்சுரூப பவனியானது ஆயிரக்கணக்கான மக்கள் வெள்ளத்தை ஈர்க்கும் ஒரு அற்புத நிகழ்வாக அமைந்துள்ளது. சாதி,இன,மத,மொழி பேதம் இன்றி ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் இன்றி மக்கள் வேளாங்கண்ணி அன்னையின் திருச்சுரூபத்தை அன்போடும் பக்தியோடும் ஊர்வலமாக எடுத்துச்சென்று இறுதி ஆசீர் வழங்கி திருவிழா முடிவடையும்.


**எமது பத்திரிகையின் முகவரி**

**ஆசிரியர், ஞான ஒளி, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு – 08.**


## 07 "ஆமென்" என்பதன்

இந்த கடவுள் தன் வாக்குறுதிகளுக்கு உண்மையுள்ளவராக நடந்து கொண்டார். மண்ணுலகில் ஆசி பெற விழைபவன் (உண்மைக் கடவுளின் பெயரால் ஆசி பெறுவான் (எசா 65:16) கிறிஸ்துவுக் இந்த சொல் "ஆமென்" என்பதை பலமுறை பயன்படுத்தியுள்ளார். காரணம் தனது கற்பித்தலின் உண்மைத்தன்மையும், கடவுளின் உண்மையில் தனது அரசு நிறுவப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டுவதற்காக (மத் 6:2, 5,15).

திருச்சபையின் விசுவாசப்பிரமாணத்தில் இறுதியாக ஆமென் என்று நிறைவு பெறுகிறது. எனவே இது "நான் விசுவசிக்கின்றேன்" என் உண்மைத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது. எனவே நாம் "ஆமென்" என்று உச்சரிக்கும் போது கடவுளின் கடவுளின் வாக்குறுதிகளையும், கட்டளைகளையும் விசுவசிக்கின்றோம். என்றும், இதன் வழியாக கடவுளின் முடிவில்லா அன்பிற்கும், அவருடைய நிலையான உண்மைதன்மைக்கும் "ஆமென்" என்று பதில் மொழி கூறுவதாகவும் அமைகிறது. எனவே கிறிஸ்தவர்களின் அன்றாட வாழ்க்கை "ஆமென்" அல்லது "நான் விசுவசிக்கின்றேன்" என்ற எமது ஞானஸ்நான வாக்குறுதிகளை வாழச் செய்கிறது.

கிறிஸ்துவே உண்மையான "ஆமென்" அவர் முடிவில்லா ஆமென் இறைவனின் முடிவில்லா அன்பின் ஆமென் அவர். கிறிஸ்து எமது "ஆமென்" என்பதை கடவுளிடம் கொண்டு சேர்க்கின்றார். "ஆமென் எனப்படுபவரும் நம்பிக்கைக்குரிய உண்மையான சாட்சியும் கடவுளது படைப்பின் தொடக்கமானவர் (தி. வெ 3:14). இந்த கிறிஸ்துவே ஆமென் என்பதை புனித பவுல் பின்வருமாறு கட்டுகிறார். அதனால் தான் நாம் கடவுளைப் போற்றிப் புகழும்போது அவர் வழியாக "ஆமென" என்று சொல்கிறோம் 92 கொரி1:20)

எனவே இத்தகைய சக்தி மிக்க "ஆமென்" என்ற வார்த்தையை நாளாந்தம் கூறுகின்றோம். இதன் பொருளுணர்ந்து கூறிய காலங்கள் சில. எனவே இன்று முதல் அறிந்து கொண்ட ஆமென் என்ற "உண்மையின் கடவுள்" எம்மிடையே தொடர்ந்து செயலாற்ற ஆசிப்போம். "ஆமென்" என்று புகழ்ோவம். உண்மையின் மக்களாவோம்.

**ஆக்கம் - சகோதர் டிலோய்ட்சன் பெர்னான்டோ**

## XVIII திருத்தந்தையிடம்...

கத்தோலிக்கர் மட்டுமல்லாமல், அனைத்து மதத்தவரும், திருத்தந்தையிடம் கேட்க விழையும் கேள்விகள், மற்றும் அவருக்குக் கூறவிழையும் பரிந்துரைகள் ஆகியவற்றை, இவ்வாண்டு நவம்பர் 30ம் தேதிக்குள் பதிவு செய்யுமாறு, சுவிட்சர்லாந்து ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். மேலும், 20 கேள்விகள் அடங்கிய கருத்துக்கணிப்பு ஒன்றும் இவ்வலைத்தளத்தில் உள்ளது என்றும், இங்கு பதியப்படும் கருத்துக்கள் திரட்டப்பட்டு வத்திக்கானுக்கு அனுப்பப்படும் என்றும் ஆயர்கள் அறிவித்துள்ளனர்.

மேலும், 2018ம் ஆண்டின் தொடக்கத்தில், பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து ஆகிய மூன்று நாடுகளின் இளையோருக்கென, Fribourg எனும் நகரில், மாநாடு ஒன்று நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2018ம் ஆண்டு, அக்டோபர் மாதம், வத்திக்கானில், 15வது உலக ஆயர்கள் மாமன்றம், "இளையோர், நம்பிக்கை, அழைப்பைத் தேர்ந்து தெளிதல்" என்ற மையக்கருத்துடன் நடைபெறவுள்ளது.

## XIX இறைப்புண்ணியங்கள்..

அன்பு செய்யுங்கள் என்று. புனித பவுல் மடலில் கூறுவதுபோல், "என்னிடம் அன்பு இல்லையேல்... நான் ஒன்றும் இல்லை" எனவே அன்பு எல்லா புண்ணியங்களிலும் மேலானது. அனைத்து புண்ணியங்களும் அன்பை அடிப்படையாக கொண்டு செயற்படுகின்றது. அன்பின் பலன்கள் மகிழ்ச்சி, அமைதி, இரக்கம், என்பன, அன்பு இருப்பவரிடம் நன்மை பயக்கும் சகோதரத்துவமும், பிழைகளை அன்புடன் சுட்டிக்காட்டும் குணமும் இருக்கும். எனவே மேலான இறைப்புண்ணியமான அன்பில் நிலைத்திருப்போம். புனித அகுஸ்தினார் கூறுவதுபோல், அன்பு தன்னிலே எம் சேவைகளில் முழு நிறைவு காண்கிறது. அதற்கான ஒரு இலக்கு உண்டு. அதனை சென்று அடைந்து அமைதி காணும் வரை அது தேடிக்கொண்டே இருக்கும்.

எனவே இறைப்புண்ணியங்களை எம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்திட கிறிஸ்து எம்மை அழைக்கின்றார். புனித பவுலும் தனது மடலில் இதுபற்றி விபரமாக எமக்கு கொடுத்திருப்பது. ஒரு கிறிஸ்தவன் இறைசார் புண்ணியங்களை தன் வாழ்நாளில் கடைப்பிடித்து வாழ வேண்டும். என்பதற்காகவே. எனவே இவற்றை எம் வாழ்வாக்குவோம். நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்புடன் வாழ்ந்து எமது விண்ணக வீட்டை நோக்கிப் பயணம் செய்வோம். உறுதியான விசுவாசத்துடன்....

**ஆக்கம் சகோ. டிலோய்ட்சன் பெர்னான்டோ**




# எடை குறையுமா?



உடற்பயிற்சி செய்பவர்கள் பலர் தங்கள் எடையைக் குறைக்கத்தான் அதில் இடுபடுவதாகச் சொல்வார்கள். உடற்பயிற்சியினால் பல நல்ல விளைவுகள் ஏற்படுகின்றன. உடல் உறுப்புக்களின் செயல்பாடு தூண்டப்படுகின்றது. தேவையற்ற கொழுப்புப் பகுதிகள் சக்தியாக மாறிக் கரைக்கின்றன.

சதைப் பகுதிகள் பயிற்சியின் மூலம் வலுப்பெறுகின்றன. உடல் இயக்கம் சீரடைகிறது. தேவையற்ற உப்புக்கள் வியர்வையாக வெளியேறுகின்றன. உடல் வளப்புக் கூடுகிறது. ஆனால் உடற்பயிற்சியினால் எடை குறைகிறதா என்பதே கேள்வி.

உடற்பயிற்சியின் போது வியர்வை மூலம் நிறைய நீர் வெளியேறி ஆவியாகிறது. அதனால் எடைக்குறைவு ஏற்படுகிறது. ஆனால் இது முழுக்க முழுக்கத் தற்காலிகமான ஒரு விளைவுதான் உடற்பயிற்சி முடிந்ததும், நிறைய தண்ணீர் குடித்தால் மீண்டும் எடை கூடிவிடும்.

உடற்பயிற்சிக்குப் பின், நன்றாக பசி எடுக்கும். சிலர் இதனால் அதிகமாகச் சாப்பிடத் தொடங்கலாம். இதனால் இவர்களுக்கு உடற்பயிற்சியினால் எடைகூடும் வாய்ப்பும் இருக்கிறது. எனவே உங்கள் உடம்பைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க உடற்பயிற்சி நல்லது அவசியமானது. ஆனால் உங்கள் எடையைக் குறைக்க வேண்டுமா? உணவைக் கட்டுப்படுத்துங்கள். உடற்பயிற்சியை மட்டுமே நம்பிக்கொண்டு இருக்காதீர்கள்.

இப்போதெல்லாம் தேவைக்கு அதிகமாக உடல் எடை கூடிவிடக்கூடாது என்ற உணர்வு நம்மிடம் நன்றாகப் பரவிவிட்டது. கொஞ்சம் குண்டாக இருப்பவர்கள் கூட உடல் இளைக்க வேண்டும் என்று மிகவும் ஆசைப்படுகிறார்கள்.

நாமாக திட்டமிட்டு உணவைக் கட்டுப்படுத்துகின்றதன் மூலமும் உடற்பயிற்சியின் மூலமும் படிப்படையாக எடையைத் தேவையான அளவு குறைத்துக் கொள்வது நல்லதுதான். மாதத்திற்கு ஒரு கிலோ வரை இந்த வகையில் எடையைக் குறைக்கலாம் என்று மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மிக மிக வேகமாக எடையைக் குறைப்பது நல்லதன்று. பட்டினி கிடந்து உடம்பை வதைத்து அவசர அவசரமாக எடையைக் குறைப்பது மிகவும் ஆபத்தானது. இதனால் பல பக்க விளைவுகள் ஏற்படலாம்.

சிலருக்கு நன்றாகச் சாப்பிட்டாலும், தொடர்ந்து உடல் எடை குறைத்துக் கொண்டே போகலாம். இதற்குப் பல காரணங்கள் இருக்கிறது. வயிற்றில் பூச்சிகள் இருக்கலாம், நுரையீரல் தொடர்பான நோய்கள் இருக்கலாம். சாக நோய்க்கு இது ஒரு முக்கிய அறிகுறி. சர்க்கரை நோய்கூட இருக்கலாம்.

சிலவகைப் புற்றுநோய்கள் கூட எடை குறைவுக்குக் காரணமாகலாம். எனவே திடீரென்று எடை குறை ஏற்பட்டால் மகிழ்ச்சி அடையாதீர்கள், மருத்துவரைப் பாருங்கள்.

# பொடுகுத்தொலை, வயிறு உபாதைகளா? தீர்வு தரும் வெங்காயம்



இயற்கை நமக்கு அளித்துள்ள வெங்காயத்தில் புரதச்சத்துக்கள், தாது உப்புக்கள், விற்றமின்கள் அடங்கியுள்ளன. வெங்காயத்தின் காரத்தன்மைக்கு முக்கிய காரணம், அதில் உள்ள அலைல் புரோப்பைல்டைசலட்பைட் (Alail Propyldisulphide) என்ற எண்ணெய்தான்.

இந்த எண்ணெய், வெங்காயத்தை உரிக்கும்போது, திரவத்தை சுரந்து, காற்றின் மூலம் கண்களில் பட்டு கண்ணீரை வரவைக்கிறது.

## மருத்துவ பயன்கள்

வெங்காயத்தில் கல்சியம், மக்னீசியம், சோடியம், பொட்டாசியம், செலினியம், பொஸ்பரஸ் போன்ற சத்துக்கள் உள்ளன. பசியுணர்வு இல்லாதவர்கள் வெங்காயத்தை உண்பதால் பசி உணர்வு தூண்டப்படுகிறது. வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காயச் சாற்றைப் பஞ்சில் நனைத்து பல் ஈறுகளில் தடவி பர பல்வலி, ஈறுவலி குறையும். அதிலும் 2-3 நிமிடங்கள் வெங்காயத்தை வாயில் போட்டு மெல்லுவதால், வாய்க் கிருமிகளை அழிக்க முடியும்.

இரத்த சிவப்பணுக்களை சுத்திகரித்து (Red Bliid Cells) இரத்த அழுத்தத்தை (Blood Pressure) போக்குகிறது. குறிப்பாக இதயநோய் உள்ளவர்கள் இதனை கண்டிப்பாக சாப்பிட வேண்டும். புற்றுநோய் செல்களை வளரவிடாமல் தடுக்கும் சக்தி வெங்காயத்திற்கு உண்டு. எனவே வெங்காயத்தை அதிகமாக சாப்பிடுங்கள். வெங்காயத்தில் பாக்டீரியாக்களை எதிர்த்துப் போராடும், ஆன்டி பக்டீரியம் இருப்பதால், வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு தீர்வளிக்கும்.

## வெங்காய சாம்பார்

- துவரம் பருப்பை நன்றாகக் கழுவி, அத்துடன் 2கப் தண்ணீர், சிறிது மஞ்சள் தூள் சேர்த்து குக்கரில் வேக வைக்கவும்.
- புளியை ஊறவைத்து, கரைத்து, வடிகட்டிக் கொள்ளவும். 2 கப் அளவிற்கு புளித்தண்ணிர் இருக்க வேண்டும்.
- வாணலியில் எண்ணெய் ஊற்றி கடுகு, உளுத்தம்பருப்பு பொட்டு வெடித்ததும் வெங்காயம், மிளகு,சோம்பு பொடி, மஞ்சள் தூள், பச்சை மிளகாய், உப்பு, கருவேப்பிலை சேர்த்து நன்றாக வதங்கவும்.
- வெங்காயம் சற்று வதங்கியவுடன், தக்காளித்துண்டுகளைச் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும் பின்னர் அதில், புளித்தண்ணீர், சாம்பார் பொடி, மஞ்சள் தூள், உப்புச் சேர்த்து, மூடி வைத்து, மிதமான சூட்டில் கொதிக்க விடவும். சுவையான வெங்காய சாம்பார் ரெடி

## பயன்கள்

- நரம்புத் தளர்ச்சி குணமாகும்.
- குறைவான கொழுப்புச்சத்து உள்ளதால் உடல் எடையை குறைக்க உதவும்.
- செரிமானத்திற்கு உதவுகிறது.
- சிறு வெங்காயத்தில் இன்சுலின் உள்ளதால், சர்க்கரை நோயாளிகள் சாம்பார் வைத்து சாப்பிடலாம்.

## அழகு தரும் வெங்காயம்

- வெங்காயச் சாற்றுடன் தேன் அல்லது ஒலிவ் எண்ணெய் கலந்து, முகப்பரு இருக்கும் இடத்தில் தடவினால், முகத்தில் உள்ள பருக்கள், நீங்கி, முகம் பொலிவாக காணப்படும்.
- வெங்காயத்தில் சல்பர் அதிகம் உள்ளது. இது ஆரோக்கியமாக கூந்தலுக்கு மிகவும் இன்றியமையாதது.
- அதிலும் பொடுகுத் தொல்லை இருப்பவர்கள். வெங்காயச் சாற்றினை தலைக்கு தடவி ஊற வைத்து குளித்தால் பொடுகுத் தொல்லை குறையும்.

## தர்பூசணி ஜூஸில் மிளகுத்தூள் கலந்து குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்

★ உடலில் உள்ள கெட்டக் கொழுப்புகளைக் கரைத்து, உடல் எடையை குறைக்க உதவுகிறது.
★ கோடையில் அதிக வியர்வையின் காரணமாக ஏற்படும் அரிப்புகள் மற்றும் சருமப் பிரச்சனைகளை வராமல் தடுக்கிறது.
★ தர்பூசணியில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்டுகள் மற்றும் லைகோபைன், புற்றுநோய் செல்களின் வளர்ச்சியை அழித்து, ஆண்களைத் தாக்கும் புரோஸ்டேட் புற்றுநோயின் அபாயத்தைத் தடுக்கிறது.
★ தர்பூசணியில் வளமான அளவில் ∴போலேட் உள்ளது. எனவே இது உடலின் ரத்தோட்டத்தை சீராக்கி, மாரடைப்பு மற்றும் இதய நோய்கள் வராமல் பாதுகாக்கிறது.
★ செரிமானம் மற்றும் மலச்சிக்கல் போன்ற வயிற்று பிரச்சனைகள் வராமல் தடுக்கிறது.

# காய்கறிகளில மறைந்திருக்கும் சத்துக்கள்



துரித உணவுகளின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ள இன்றைய தலைமுறையினர், சத்தான காய்கறிகளை ஒதுக்கிவிடுகின்றனர். நாம் வேண்டாம் என்று ஒதுக்கும் காய்கறிகள் சத்துக்கள் மட்டுமல்ல, பல்வேறு நோய்களை தீர்க்கும் அருமருந்தாகவும் உள்ளன.

## கத்தரிக்காய்

அரிய மருத்துவ குணங்கள் கொண்ட கத்தரிக்காயை பலருக்கும் பிடிப்பதில்லை. பல வண்ணங்கள் இருந்தாலும் அனைத்திலும் உள்ள சத்துக்கள் ஒன்று தான். இதில் தசைக்கும், இரத்தத்திற்கும் உரம் தரும் விற்றமின்கள் சிறிதளவு உள்ளன. இதனால் வாயு, பித்தம், கபம் போகும். அம்மை நோயால் பாதிக்கப்படுபவர்கள் இதை உண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

## அவரைக்காய்

அவரைக்காய் சூட்டுடம்புக்கு மிகவும் ஏற்றது, இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு மிகவும் உகந்தது. மேலும் இதில் உள்ள நார்ச்சத்து உடலை வலுவாக்கும் என்பதுடன், உடல் எடையை குறைக்க விரும்புபவர்களுக்கு ஏற்றது.

## வெண்டிக்காய்

வெண்டைக்காய் என்றாலே நம் நினைவுக்கு வருவது ஞாபகசக்திதான், மூளை வளர்ச்சிக்கு சிறந்தது. இதில் விற்றமின் சி.பி உள்ளன, சூட்டை தணிக்கும், உஷ்ண இருமலை குணமாக்கும். உடம்பில் வாயு உள்ளவர்கள் இதை அதிகமாக உண்டால் வயிற்று வலியை ஏற்படுத்தும் என்பதில் கவனம் தேவை.

## புடலங்காய்

நீர்ச்சத்து மிகுந்த காய்களில் இதுவும் ஒன்று, சூட்டுடம்புக்கு ஏற்றது. இது எளிதில் ஜீரணமாகி நல்ல பசியை உண்டாக்கும். வாத பித்த கபங்களால் ஏற்படும் திரிதோஷத்தை போக்கும் வயிற்று பொருமல், வயிற்றுப் பூச்சி இவற்றை போக்கும்.

## வாழைத்தண்டு

வாழையைப் பொறுத்தவரை அடி முதல் நுனி வரை பலன் தரக்கூடியது. இதில் வாழைத் தண்டில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. பித்தத்தை தணிக்க கூடியது. சூடு ஏற்படுத்தும் தன்மை இதற்கு உண்டு என்றாலும், சிறுநீரை பெருக்கும். இதை உண்டால் குடலில் சிக்கிய முடி, தோல், நஞ்சு ஆகியவை நீங்கும். வாரத்திற்கு ஒரு முறையாவது வாழைத் தண்டை உண்ணுவது நல்லது.



## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“எல்லாவற்றுக்கும் மேலானது மனித வாழ்வு, அவ்வாழ்வு நோயால் காயப்படுத்தப்பட்டுள்ளபோது, அதைப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை, கடவுள் நம் எல்லாரிடமும் ஒப்படைத்துள்ள அன்பின் கடமை”

“நல்லவற்றைக் கண்டுபிடிக்கவும் பார்க்கவும், சக்தியுடைய புதிய கண்ணோட்டத்தை வழங்கும், கிறிஸ்தவ நம்பிக்கை ஊட்டப்படவேண்டியது, மிகவும் அவசியமாகின்றது”

”நம் ஒவ்வொருவரையும் இறைவன் அன்போடு கண்ணோக்குகிறார்”

”நம் மீது இறைவனின் விடுவிக்கும் செயல்கள் வெளிப்படுவதற்கு சான்றுகளாக நாம் விளங்கும்படி, புனிதர்களான பேதுருவும் பவுலும் நமக்காக பரிந்து பேசுவார்களாக”

“ஒவ்வொரு தெருவுக்கும், மூலைக்கும், இயேசுவை மகிழ்வுடன் எடுத்துச்செல்லும், “சாலைவழி போதகர்களாக“ இளையோரை பார்ப்பது, எவ்வளவு அழகாக உள்ளது”

# உலகிலிருந்து பசியை முற்றிலுமாக ஒழிக்க வேண்டுமெனில்.......



உலகிலிருந்து பசியையும் சத்துணவின்மையையும் அகற்றும் முயற்சிகளுக்கு திருஅவை எப்போதும் தன் முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குவதாக, FAO எனப்படும் உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனத்தின் 40வது பொதுஅவைக்கு அனுப்பியுள்ள செய்தியில் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். FAO நிறுவன தலைமையகக் கூட்டத்தில் திருப்பீடச் செயலர், கர்தினால் பியேத்ரோ பரோலின் வழியாக தன் செய்தியை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒவ்வொருவருக்கும் தினசரி உணவை வழங்கிவிட்டால் மட்டும் போதாது, மாறாக, உணவைப் பெறுவதற்கு அவர்களுக்கிருக்கும் உரிமை மதிக்கப்பட்டு, ஒருமைப்பாட்டை வளர்க்க உதவவேண்டும் என தெரிவித்துள்ளார். உலகிலிருந்து பசியை முற்றிலுமாக ஒழிக்க வேண்டுமெனில், உதவி தேவைப்படும் மக்களுக்கு செயலாக்கமுடைய உதவியை வழங்கும் அனைத்துலக சமூகத்தின் கடமை ஏற்றுக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும் எனவும், திருத்தந்தையின் செய்தியில் கூறப்பட்டுள்ளது. இன்றைய உலகின் சில பகுதிகளில் காணப்படும் ஏழ்மையும் வளர்ச்சியின்மையும், பலரின் பாராமுகத்தாலும், சிலரின் பேராசையாலும் உருவானவை என்பதை உணர்ந்து, அதற்கேற்றாற்போல், அதற்கியைந்த நடவடிக்கைகளை அனைத்துலக சமூகம் எடுக்கவேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார், திருத்தந்தை. போர்கள், உள்நாட்டு மோதல்கள் மற்றும் மக்கள் தங்கள் உறைவிடங்களிலிருந்து கட்டாயமாக வெளியேற்றப்படுதல் போன்றவையும் உணவு உற்பத்தியை வெகுவாகப் பாதித்துள்ளதாக உரைக்கும் திருத்தந்தையின் செய்தி, போராலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு, உலக உணவு மற்றும் வேளாண் நிறுவனம், விதைகளை வழங்கியும், வேறுபல திட்டங்கள் வழியாகவும் ஆற்றிவரும் பணிகளுக்கு, தன் பாராட்டுக்களை வெளியிட்டுள்ளது.

# குழந்தை Charlie Gardன் பெற்றோருடன் திருத்தந்தை ஒருமைப்பாடு



இங்கிலாந்தின் மேற்கு இலண்டனைச் சேர்ந்த தம்பதியருக்குப் பிறந்த Charlie Gardஎன்ற குழந்தை, சுவாசப் பிரச்சனைகளாலும், தசை இறுக்க நோயாலும் துன்புறும் வேளையில், அக்குழந்தையை தங்கள் சொந்த செலவில், அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு எடுத்துச் சென்று, சிகிச்சை அளிக்க பெற்றோர் எடுத்துவரும் முயற்சிகளுக்கு, இங்கிலாந்து நீதிமன்றமும், தற்போது, ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றமும் தடைவிதித்துள்ளன.

குணமாக்க முடியாத நோயுடைய இக்குழந்தையின் வாழ்நாளை, சிகிச்சை என்ற பெயரில் நீட்டித்து வைப்பது, குழந்தையின் வேதனையை அதிகரிக்க மட்டுமே செய்யும் என, நீதிமன்றங்கள் காரணம் கூறியுள்ளன. ஆனாலும் குழந்தையின் பெற்றோர்கள் Charlie Gardக்கு தேவையான அனைத்து மருத்துவ உதவிகளையும் வழங்கி, அக்குழந்தையை காப்பாற்ற விரும்பும் அக்குழந்தையின் பெற்றோர் தங்கள் போராட்டத்தில் வெற்றிபெறவேண்டும் என தன் ஆவலை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருத்தந்தையின் இந்த செய்தியை இஞ்ஞாயிறன்று மாலை வெளியிட்டு பேசிய திருப்பீடத்தின் தகவல் தொடர்பு அதிகாரி Greg Burke அவர்கள், இச்சிறுவன் குறித்த செய்திகளை, திருத்தந்தை, பாசத்தோடும், அதேவேளை, கவலையோடும், மிக உன்னிப்பாக தொடர்ந்து கவனித்து வருவதாகவும், அக்குழந்தையின் பெற்றோருக்கு, தான் அருகாமையில் இருப்பதைத் தெரிவிக்க விரும்புவதாகவும் கூறினார்.

அக்குழந்தைக்கு அருகாமையில் இருந்து அக்குழந்தைக்குத் தேவையான அனைத்து சிகிச்சைகளையும் வழங்கவிழையும் பெற்றோரின் விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டும் என தான் இறைஞ்சுவதாகவும் திருத்தந்தை கூறியுள்ளதாக திருப்பீட தகவல் தொடர்பு அதிகாரி Burke அவர்கள், மேலும் கூறினார்.

## கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு விலகியிருப்பவர்களுக்காக செபம்




**“இயேசு கிறிஸ்துவே நம் மகிழ்வு என்பதையும், அவரின் அன்பு மாறாதது மற்றும், குறையாதது என்பதையும், நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது”**

என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆடி 4ந் திகதி செவ்வாய்கிழமையன்று கூறியுள்ளார்.

கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு விலகியிருப்பவர்களுக்காகச் செபிப்போம் என்ற தலைப்பில், தனது ஜூலை மாதச் செபக் கருத்து பற்றி, காணொளி வழியாகப் பேசியுள்ள திருத்தந்தை, ஒரு கிறிஸ்தவர், கவலையாக இருக்கின்றார் என்றால், அவர், இயேசுவிடமிருந்து விலகியிருக்கின்றார் என்று அர்த்தம் எனக் கூறியுள்ளார்.

ஆயினும், கிறிஸ்துவைவிட்டு விலகியிருப்பவர்களை நாம் கைவிடக் கூடாது என்றும், நம் சொற்கள், இன்னும், சிறப்பாக, நம் மகிழ்வான சாட்சிய வாழ்வு மற்றும், நம் சுதந்திரத்தோடு, கிறிஸ்தவ நம்பிக்கையை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். கிறிஸ்தவ விசுவாசத்தைவிட்டு விலகியிருப்பவர்களுக்காகச் செபிப்போம் எனவும், நம் செபங்கள் மற்றும், நற்செய்திக்குச் சான்று பகர்வதன் வழியாக, கிறிஸ்தவ வாழ்வின் அழகை, அவர்கள் மீண்டும் கண்டுகொள்வார்களாக எனவும் கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# உரோம் திருத்தந்தையின் மருத்துவமனை Charlie Gardக்கு உதவி




இலண்டனில், சுவாசப் பிரச்சனையாலும், தசையிறுக்க நோயாலும் துன்புறும், Charlie Gard என்ற, பத்து மாத ஆண் குழந்தைக்கு, உரோம் குழந்தை இயேசு (Bambino Gesu) மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்கு முன்வந்துள்ளார், அம்மருத்துவமனை தலைவர். பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக, அதேநேரம், ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தின் அனுமதியின்பேரில், வருகின்ற நாள்களில், Charlie Gardக்கு, உயிர்காக்கும் கருவிகள் அகற்றப்படவுள்ள நிலையில், உரோம் குழந்தை இயேசு மருத்துவமனைத் தலைவர், மரியெல்லா எனோக் அவர்கள், இவ்வாறு விருப்பம் தெரிவித்துள்ளார்.

குழந்தை Charlie Gardன் பெற்றோரின் விருப்பம் மதிக்கப்பட வேண்டுமென்ற, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் விண்ணப்பம், உரோம் நகரிலுள்ள இச்சிறார் மருத்துவமனையின் பணிநோக்கத்தோடு ஒத்திணங்கிச் செல்கின்றது எனவும், தனது டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார் எனோக்.

இலண்டன் Great Ormond Street மருத்துவமனை நிர்வாகிகள், அங்குச் சிகிச்சை பெற்றுவரும் குழந்தை Charlie Gardஐ உரோம் மருத்துவமனைக்கு மாற்றுவது குறித்து பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார், எனோக். உரோம் குழந்தை இயேசு மருத்துவமனை, திருத்தந்தையின் மருத்துவமனை எனவும் அழைக்கப்படுகின்றது. குழந்தை Charlie Gard துன்புறும் அபூர்வ நோயால், உலகில், 16 சிறாரே தாக்கப்பட்டுள்ளனர் என, ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

## “திருத்தந்தையிடம் சொல்லுங்கள்!” - இளையோர் வலைத்தளம்



2018ம் ஆண்டு, இளையோரை மையப்படுத்தி, வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்திற்குத் தயாரிக்கும் வண்ணம், சுவிட்சர்லாந்து ஆயர்கள், வலைத்தள கருத்துக்கணிப்பு ஒன்றை, ஆடி 6, வியாழனன்று தொடக்கியுள்ளனர்.

“திருத்தந்தையிடம் சொல்லுங்கள்!” (“Tell the Pope!”) என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வலைத்தள முயற்சியில் பங்கேற்க, 16 வயது முதல் 29 வயது முடிய உள்ள அனைத்து இளையோரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

‘இறைசார் புண்ணியங்கள்’ நேரடியாக இறைவனுடன் தொடர்பு கொண்டது. மூவொரு கடவுளுடன் கொண்ட வாழ்க்கை முறையினை வாழ்வதற்கு **கிறிஸ்தவ வாழ்வை** அமைத்து நிற்கின்றது.

# இறை புண்ணியங்கள்



மனித வாழ்வின் புண்ணியங்கள், இறை புண்ணியங்களை அடிப்படையாக கொண்டு எழுகின்றது. இது மனித செயற்பாட்டிகுள் இறைவனின் இறைத்தன்மையை எடுத்தியம்புகின்றது. இறைசார் புண்ணியங்களை நேரடியாக இறைவனுடன் தொடர்பு கொண்டது. இவை மூவொரு கடவுளுடன் கொண்ட வாழ்க்கை முறையினை வாழ்வதற்கு கிறிஸ்தவ வாழ்வை அமைத்து நிற்கின்றது. அதாவது ஒரே கடவுளை மூன்று ஆட்களாக கொண்ட உண்மையான, தன்மையாக, உந்து சக்தியாக இருக்கின்ற இறைவல்லமை தனில் வாழ்வினை கொண்டு நகர்கின்றது.

இந்த இறைப் புண்ணியங்கள் கிறிஸ்தவ ஒழுக்க செயற்பாடுகளை அடிப்படையாக கொண்டது. இவை வழிநடத்தப்பெறும் மிக முக்கியமாக தன்மையினைக் கொடுக்கின்றது. இவை வாழ்வும் அதனுடன் இணைந்த ஒழுக்க விழுதியத்தையும் கொடுக்கின்றது. இந்த இறைபுண்ணியங்களின் கடவுளினைால் நேரடியாக விசுவாசிகளின் ஆன்மாக்களல் ஊன்றப்பெற்று கடவுளின் பிள்ளையாக வாழ வழிகாட்டுகின்றது. இத்தனை பெறுமதிமிக்க இறைபுண்ணியங்கள் தான் என்ன? அவை தான் “நம்பிக்கை, எதிர்நோக்கு, மற்றும் அன்பு (1 கொரி 13:13)

## 1. நம்பிக்கை

இந்த நம்பிக்கை என்ற இறைப்புண்ணியமானது. நாங்கள் கடவுளை நம்புகின்றோம். அவரால் அனைத்தும் உலகிற்கு காட்டப்பட்டது. என்றும், இதனை கத்தோலிக்க திருச்சபை வெளிப்படத்திக் காட்டுவது “கடவுள் உண்மையானவர்” என்பதிான் நம்பிக்கையின் வழியாக மனிதன் தன்னை முழுயைமாக கடவுளுக்கு அர்ப்பணிக்கின்றான். இதன் விளைவாக விசுவாசி ஒருவன் கடவுளையும் அவரது விருப்பத்தையும் நாட வேண்டும். “நீதிமான் நம்பிக்கையினால் வாழ்வு பெறுவான் (உரோ 1:17). அன்பின் வழியாகவே நம்பிக்கை செயலாற்றுகின்றது (கலா 5:6)

“இந்த நம்பிக்கை என்னும் கொடையானது, ஒருவன் அதற்கெதிராக பாவம் செய்யாவிடில் அவனில் தங்குகின்றது. என திரித்தெந்தின் சங்கம் கூறுகிறது. எதிர்நோக்கும், அன்பும் இல்லாவிடில் நம்பிக்கை கடவுளிடம் ஒரு விசுவாசியை இணைத்து விடாது, அத்தேதாடு அது வாழும் திருச்சைபயின் உடலாகிய அதன் அமைப்பிலும் பங்குகொள்ள செய்யாது.

எனவே கிறிஸ்தவ சீடன் நம்பிக்கையை மட்டும் கொண்டிருந்தால் போதாது. மாறாக அதை வாழ்விக்க வேண்டும் அப்போதுதான் இயேசு கூறியதுபோல், “மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்பவரை விண்ணுலகில் இருக்கும்

என் தந்தையின் முன்னிலையில் நான் எற்றுக்கொள்வேன் (மத் 10:32)

## 2. எதிர்நோக்கு

இந்த எதிர்நோக்கு என்பது இறையாட்சி, முடிவில்லா வாழ்வு, கிறிஸ்துவின் வாக்குறுதியில் நம்பிக்கை கொள்ளல், எமது பலத்தில் அல்ல கிறிஸ்துவின் பலத்தில் இணைக்கப்படுதல் இவையனைத்தும் தூய ஆவியின் துணை கொண்டு பெறுவோம். என்பதை எதிர்நோக்கியிருப்பதை சுட்டிக் காட்டுகின்றது. “எனவே நாம் எதிர்நோக்கியிருப்பதை பற்றி தயக்கமின்றி அறிக்கையிடுவதில் நிலையாய் இருப்போமாக” (எபி 10:23)

இந்த எதிர்நோக்கு கடவுள் ஒவ்வொரு மனிதனின் இதயத்தில் வைத்துள்ள மகிழ்ச்சியான வாழ்வுக்க மறுமொழி கூறுகின்றது. இந்த எதிர்நோக்கு மனிதன் நடிவடிக்கைகளை முன்னெடுத்து, அதனை தூய்மைப்படுத்தி இறையாட்சிக்கு மனிதனை அழைத்து செல்கின்றது. இது இறையாட்சியின் பேறுபலனிற்கு முழுமையாக திறந்த மனதுடன் செவிசாய்க்க வழி சமைக்கின்றது. இந்த எதிர்நோக்கானது “ஆபிராமின் எதிர்நோக்குடன்” கொண்டு அதனை மூலமாக கொண்டு வாழ தேர்ந்துகொள்ளப்பட்ட மக்களை அழைத்து நிற்கின்றது. கடவுள் ஆபிரகாமை நிறைவாக ஆசீர்வதித்து ஈசாக்கின் வழியாக இந்த எதிர்நோக்கை பலப்படுத்தினார். இதனால் நம்பிக்கையின் விளைவாக அவர்,“நம்பிக்கையின் தந்தையானர்.

இதனால் கடவுளிலும், அவரின் மகிமையின் விண்ணக விருந்திலும், பங்குகொர்ளள எதிர்நோக்கியிருப்போம். இந்த எதிர்நோக்கில்தான் திருச்சபையானது. “எல்லா மனிதரும் மீட்பு பெற (1 திமே 2:4) தினமும் செபிக்கின்றது.

## 3. அன்பு

அன்பு என்ற இறைபுண்ணியம் எல்லாவற்றிலும் மேலானது. நாம் கடவுளை மேலாக அன்ப செய்கின்றொம் மற்றும் எமது அயலாரையும் எம்மைப்போலவே அன்பு செய்கின்றோம்.

கிறிஸ்து இந்த அன்பிற்காக புதிய கட்டளையை கொடுத்தார். ஒருவர் ஒருவரை அன்பு செய்வதன் வழியாக, கிறிஸ்துவின் சீடர்கள் கிறிஸ்துவை பிரதிபலிக்கின்றார்கள். எனவேதான் “எனது அன்பில் நிலைத்திருங்கள்” (யோ 15:9) என்று கட்டளையிட்டார். கிறிஸ்து எம்மேல் கொண்ட அன்பினால் தன் உயிரையே பலியாக கொடுத்தார். கிறிஸ்து எம்மிடம் கேட்டதும் ஒருவர் ஒருவரை எமது எதிரியாயிருப்பினும்...

15



# பாத்திமா காட்சிகளின் சுருக்கம் 04

### காட்சி 04

ஆவணி மாதம் 15ஆம் திகதி குழந்தைகள் வழக்கம் போல உற்சாகமாக நேரத்தைக் கழித்தார்கள். ஜெபமாலை விளையாட்டு, மலைச்சாரலில் சுற்றுதல் இப்படியாக மாலை 4.00 மணி ஆயிற்று.

திடீரென ஆகாயத்தில் ஒரு மாறுதலை லூஸ ியா கண்டாள். அது மழையின் அறிகுறி அல்ல, தேவதாயின் காட்சி தோன்றுமுன், காணப்படும் ஒரு வகை ஆகாய இறுக்கம். அவள் பிரான்சிசை பார்த்தாள். அவனும் அதே அடையாளத்தை உணர்ந்தான். ஆம் தேவ அன்னை தோன்றுவதன் முன் அடையாளம் அது தான் ஆனால் ஜசிந்தா அங்கு இல்லையே!

அன்று ஜஸிந்தாவுக்குப் பதிலாக அவளின் அண்ணன் ஜோன் தான் ஆடு மேய்க்க வந்தான். உடனே லூஸியா ஜோனிடம் ஜசிந்தாவை அழைத்து வரும் படி கூறினாள். அவனும் ஜஸிந்தாவை கூப்பிட விரைந்தாள்.

கொஞ்ச நேரம் ஆயிற்று. தேவதாய் வருமுன் காணப்படும் மின்னல் ஒளி வீசியது! அதே சமயம் அவர்களை நோக்கி ஜசிந்தா ஓடி வந்தாள். அன்னை ஒரு தாழ்ந்த அஸின்ஹேரா மரத்தில் மூவருக்கும். தோன்றினார்கள். அதே கனிவு, அன்பு குழந்தைகளின் மகிழ்ச்சிக்கு நிறைவே இல்லை.

**“உங்களுக்கு என்ன வேண்டும்’** என்று லூஸியா கேட்டாள். **‘கோவா தா ஈரியாவுக்கு மாதத்தின் 13ஆம் திகதி தொடர்ச்சியாக செல்லுங்கள் ஜெபமாலையை ஒவ்வொரு நாளும் தொடர்ந்து சொல்லுங்கள். கடைசி மாதத்தில் எல்லோரும் நம்பும்படி ஒரு புதுமையைச் செய்வேன்’** என்றார்கள் அன்னை.

**‘கோவா தா ஈரியாவில் மக்கள் போடும் பணத்தை என்ன செய்ய விரும்புகின்றீர்கள்’** என்று கேட்டாள் லூசியா.

**இரண்டு (சுருபத்) தட்டுகள் செய்ய வேண்டும். ஒரு தட்டை லூஸியா, ஜசிந்தா, இன்றும் வேறு இரு சிறுமிகள் வெண்னுடை தரித்து சுமந்து செல்ல வேண்டும். மற்றொன்றை பிரான்சிசும் அவனுடன் வேறு மூன்று சிறுவர்களும் வெண்னுடை அணிந்து சுமந்து வர வேண்டும். இவற்றில் விழும் காணிக்கை பணம் ஜெபமாலை மாதா திருநாள் கொண்டாடப்படுவதற்கு. மீதி இருக்கும் பணம் இங்கு கட்டப்பட இருக்கும் ஆலயத்திற்கென இருக்கட்டும்’** என்று மாமரி பதிலளித்தார்கள்.

**‘அம்மா சில நோயாளிகளை நீங்கள் குணமாக்க வேண்டும்.** என்று லூசியா கேட்டதற்கு **‘இவ்வாண்டில் சிலரைக் குணப்படுத்துவேன்’** என்றார்கள். மாமரி ஆவணி மாதம் 13ஆம் திகதி காட்சி நடை பெறாமல் தடுக்கப்பட்டதால் (நகராட்சி அதிகாரியை சந்திக்க சென்றபடியாலும் குழந்தைகள் கடத்திச் செல்லப்ட்டமையாலும்) ஐப்பசி மாதம் அதிசயம், நடக்க இருந்ததை விட மகத்துவம் குன்றியதாக இருக்கும் என்று கூறினார்கள். பின்பு. **ஜெபியுங்கள் அதிகமாக ஜெபியுங்கள் பாவிகளுக்காக ஒருத்தல் முயற்சிகளை செய்யுங்கள். ஏனென்றால் தங்களுக்கா ஜெபிக்கவும் ஒருத்தல் செய்யவும் ஒருவரும் இல்லாததால் அநேக ஆன்மாக்கள் நரகத்திற்கு செல்கின்றார்கள்** என்று கூறி கீழ் திசையில் அன்னை மறைந்தார்கள்.

**காட்சிகள் தொடரும்...**

# கொழும்பு நகரில் அன்னை வேளாங்கண்ணி மாதாவுக்கான பக்தி

கொழும்பு 13 செக்கடித்தெரு (தற்போது ஸ்ரீ-கதிரேசன் வீதி), கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வேளாங்கண்ணி ஆலயம் ஆயிரக்கணக்கில் பக்தர்களை ஒன்று சேர்க்கும் புனித ஸ்தலமாக திகழ்கின்றது.

200 ஆண்டுகளுக்கு முன் ஆரோக்கிய அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட இவ் ஆலயத்தில் 40 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் வேளாங்கண்ணி திருத்தலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட வேளாங்கண்ணி மாதாவின் திருச்சுரூபம் ஆலயத்தின் மகிமையை உயர்த்தியது.

ஒவ்வொரு வியாழக்கிழமைகளில் காலை 6.00 மணிக்குத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து தேவநற்கருணை எழுந்தேற்றமும் நடைபெறுகிறது. நண்பகல் 12மணி திருப்பலி திருச்சுரூப ஆசீரோடு மக்களின் விசேட வேண்டுதல்களுக்காகவும் கருத்துக்க-ளுக்காகவும் மற்றும் நன்றிக் கருத்துக்களுக்காகவும் ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. அதனைத்தொடர்ந்து மீண்டும் தேவநற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு மாலை 6.30 மணிவரை மக்களின் ஆராதனைகள் நடைபெறும். மாலை 6.30 மணிக்கு செபமாலையும் இரவு 7.15 மணிக்கு திருச்சுரூப ஆசீர் வழங்கப்பட்டு தேவநற்கருணை வழிபாடும், நற்கருணை ஆசீரும் வழங்கப்படுகின்றது.

பலவித மொழி பேசும் மக்களும், பிற மதத்தைச் சேர்ந்த மக்களும் அன்னையை தேடி வருவதும், அவர்கள் வேண்டிக் கேட்டுக்கொண்ட வரங்களைப் பெற்றுக்கொண்டதற்கு சாட்சி பகர்வதும் பிரதி வியாழன்தோறும் நடைபெறும் 12 மணித் திருப்பலியில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

காலை தொடக்கம் மாலை அதனைத்தாண்டி இரவு 9.30 மணிவரை மக்கள் ஆலயத்தின் பிரதான கதவருகில் இருந்து திருப்பலிப்பீடம் வரை தேவநற்கருணையை நோக்கி முழங்கால்களால் வருவதையும் அதேபோல் வேளாங்கண்ணி தாயின் திருச்சுரூபத்தை நோக்கி முழங்கால்களால் நகர்ந்து வருவதும் ஒரு அற்புதக்காட்சியே. இளையோர் முதல் முதியோர் வரை 7நாட்கள், 9நாட்கள் என்று நேர்ந்து மனதால் செபமாலையை தியானித்தபடி முழங்கால்களில் நகர்வது மக்களுடைய பக்தியையும் உருக்கமான வேண்டுதல்களையும் அவர்களது விசுவாசத்தையும் பிரதிபலிப்பதாக அமைகின்றது.

ஆலயத்துக்கு வெளியில் உள்ள கெபியில் வேளாங்கண்ணி மாதா குழந்தை இயேசுவை ஏந்திக் -கொண்டு ஒரு சிறுவனிடம் பால் கேட்கும் சுரூபம் மக்கள் மெய்மறந்து செபிக்கும் ஒரு இடமாக அமைகின்றது. அங்கு மக்கள் மெழுகுவர்த்திகளை ஏற்றி விளக்குக்கு எண்ணெய் ஊற்றி தங்கள் வேண்டுதல்களை அன்னையின் பாதம் வைக்க ஒன்று கூடுகின்றனர்.

### திருவிழாக்காலம்

செப்டம்பர் மாதம் 8ம் திகதிக்குப்பின் வரும் ஞாயிற்றுக் -கிழமையில் அன்னையின் திருவிழா கொண்டாடப்படும். கொடியேற்றம் திருவிழாவுக்கு 10 நாட்களுக்கு முன் வரும் வெள்ளிக்கிழமை காலை 6.00 மணித் திருப்பலிக்குப்பின் நடைபெற்று ஒவ்வொரு நாளும் நண்பகல் 12 மணிக்கு திருச்சுரூப ஆசீருடன் விசேட திருப்பலியும் மாலை 6.30 மணிக்கு நவநாள் திருப்பலியும் நடைபெறும். நண்பகல் திருப்பலியானது பல்வேறுபட்ட கருத்துக்களுக்காக, ஒவ்வொரு தேவைக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டு விசேட ஆசீர் வழங்கப்படும். கர்ப்பிணித்தாய்மார்களை ஆசீர்வதித்தல், கைக்குழந்தைகளை ஆசீர்வதித்தல், நோயாளிகளை ஆசீர்வதித்தல், மாணவர்களை ஆசீர்வதித்தல், திருமணம் எதிர்பார்ப்போருக்காக, திருமண உறவை இழந்தவர்களுக்காக, வெளிநாட்டு உறவுகளுக்காக செபிக்கும் விசேட திருப்பலியாக நண்பகல் 12மணித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. திருவிழாக்காலங்களில் நண்பகல் திருப்பலிக்குப்பின் அனைவருக்கும் பகல் உணவு வழங்கப்படுகின்றது. இந்நிகழ்வு தூர இடங்களில் இருந்து வருவோருக்கு ஆறுதலாகவும் அன்னையின் உணவை உண்ட திருப்தி, மகிழ்ச்சி அளிக்கும் விதமாக அமைகின்றது. ஏழை எளியோர் , பணக்காரரர் என்ற பேதம் எதுவுமின்றி மக்கள்



அனைவரும் இவ் உணவை உண்டு தம்மால் இயன்ற காணிக்கையை உண்டியலில் இட்டுச் செல்கின்றனர். செப்டம்பர் 8ம் திகதி மாதாவின் பிறந்தநாள். மாலைத் திருப்பலியோடு வேளாங்கண்ணி மாதாவின் புதுமைச் சுரூபத்தை தங்க முடி சூட்டி கைகளால் தூக்கிச் செல்லும் வண்ணமாக அமைக்கப்பட்ட சிறிய பல்லக்கில் வைத்து ஒரு சிறிய பவனி நடைபெற்று அன்னையின் பிறந்தநாளுக்காக கேக் வெட்டி ஆயிரக்கணக்கான மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. 8ம் திகதியும், திருவிழா தினத்தன்றும் காலை 6.00 மணி தொடக்கம் திருப்பலிகள் நடைபெறும்.

15

# தெய்யத்தக்கண்டியில் மகாவலி மாதாவின் திருவிழா



லத்பந்துற, தெய்யத்தக்கண்டியாவில், ஓர் புனிதமான சூழலில் அமைவு பெற்றிருக்கும் "மகாவலி மாதா" திருத்தலமானது, மடு அன்னையின் திருத்தலத்துக்கு சென்று திரும்பும் திருயாத்திரை மக்களால் எதிர்-நோக்கப்படும் ஒன்றாகும்.

நெற்பயிர்ச்செய்கையை மேம்படுத்தும் நோக்கோடு இப்பயிர் செய்கையில் ஈடுபடுத்தக்கூடிய புதிய குடியேற்றங்களை அமர்த்தவும், விவசாய மகாவலி விருத்தித் திட்டத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்ட "ஊ" வலயத்தில் உள்ள ஒரு நகரமே தெய்யத்தக்கண்டியாகும். 1980 ஆண்டு காலப்பகுதியில் காமினி திசநாயக்க மந்திரியினால் குறுகிய 6 ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட்டதே மகாவலி திட்டமாகும். இத்திட்டத்தின்படி 96,000 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. ஜோன் அமரதுங்க மந்திரியின் முயற்சியினால், வத்தளை, சிலாப பகுதிகளிலிருந்து 115 கத்தோலிக்க குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டது.

மகாவலி மாதா திருத்தலமானது, வனாந்தரம் நெல்வயல்கள், வாவி என்பனவற்றால் சூழல் செறிவு பெற்ற ஒரு அழகான இடத்தில் அமைவு பெற்றுள்ளது. மேலும் இத்திருத்தலமானது பல்வகை விதமான மயில்கள், நீண்ட சொண்டுடைய நாரை போன்ற பறவைகளுக்கும், மான், மரை, காட்டுப்பன்றி, கவரிமான், யானை போன்ற மிருகங்களுக்கும் சரணாலயமாக விளங்குகிறது.

இத்திருத்தலமானது அப்பாறை வட்டாரத்தில், பதுளை ஆயரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் இருக்கும் ஒரே ஒரு திருத்தலமாகும். பதுளை மறைமாவட்ட குருக்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இங்கே குடியேற வந்த மக்கள் பல கஷ்ட துன்பங்களுக்குள்ளானார்கள். ஆரம்பகாலத்தில் வீதிகள் மிகவும் புழுதிபடிந்தனவாகவும், குடிதண்ணீர் பற்றாக்குறை, பிள்ளைகள் கற்பதற்கு பாடசாலை, நோயுற்றோருக்கு வைத்தியசாலை வசதிகள் போன்றவை இருக்கவில்லை. விவசாயமும் சுலபமானதொன்றாக அமையவில்லை. மலேரியா காரணமாக பலர் இறந்தார்கள். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில்தான் நமது கத்தோலிக்க மக்கள், தாம் ஒழுங்காக ஒன்றிணைந்து செபித்து இறைவனை வழிபட ஓர் ஆலயம் ஒன்று அமைத்துத் தருமாறு எட்மன் பெர்னாண்டோ ஆண்டகையை நாடினார்கள். எனினும் உடனடியாக அவர்களது வேண்டுகோளை அவரால் நிறைவேற்ற முடியவில்லை. ஆனால் அங்குள்ள கத்தோலிக்க குடும்பங்களை தரிசித்து அவர்களோடு செபிக்க, அருட்தந்தை பிறட்ரிக் அவர்களை அனுப்பி வைத்தார். 1986ம் ஆண்டில் ஆயர் பெர்னாண்டோ அரசாங்கத்திடமிருந்து ஓர் துண்டு காணியைப் பெற்று, மிலாறு, சீமெந்து மணல் கலவை உபயோகித்து சிற்றாலயம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார். அச்சமயம் மகியங்கனை பங்குத் தந்தையாக பணிபுரிந்த அருட்தந்தை அகஸ்ரீன் பெர்னாண்டோ, லத்பந்துற ஊருக்கு ஒவ்வொரு ஞாயிறு மாலை வேளையில் சென்று மக்களுக்காக திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அதேவேளை பிரான்சிஸ்கன் சபை அருட்சகோதரிகள் பிள்ளைகளுக்கும் வளர்தோருக்கும் மறை அறிவை கற்றுக்கொடுத்தனர். 1988ம் ஆண்டிலேயே கிறிஸ்மஸ் பாடல்களோடு திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டு கிறிஸ்மஸ் விழாவை அந்த மண்ணாலான சிற்றாலயத்தில் கொண்டாடினார்கள். தொடர்ந்து கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகளாக, ஒரு பொதுநிலை பணியாளரே, மறை சார்ந்த செயற்படுகளிலும், மக்களின் ஏனைய தேவைகளிலும் குருவானவருக்கு துணை நின்று அம்மக்களுக்கு சேவைகள் ஆற்றி வந்தார். 1990இல் அருட்தந்தை கேமந்த பீரிஸ் முதலாவது பங்குத் தந்தையாக நியமனம் பெற்றதுமல்லாமல், இன்று இருக்கும் ஆலயத்துக்குமான அடிக்கல்லும் பதிக்கப்பட்டது. இவ்வாலய கட்டமைப்புக்கு முழு ஆதரவையும் (Sponsor) அருட்தந்தை தல்பதாது அடிகளார் நல்கி நின்றார். பச்சைப்பசேரென பசுமை நிறைந்த வனாந்தர மரங்களாலும், நீல மேகங்களாலும் சூழப்பட்டு அழகுற அமைவு பெற்ற இந்த தேவாலயத்தால் கவரப்பட்ட முண்ணக்கரை, பிற்றிப்பனை, நீர்கொழும்பு, பழுணுகமை, போபிற்றிய, வெலிவேரிய, தெலாத்துற, கட்டுநேரியா, வென்னப்புவ, சிலாப மக்கள் அன்னையின் பக்தியால் ஈர்க்கப்பட்டவர்களாவர் ஆலய அமைப்பைச் சூழவுள்ள கால்வாய் மேலும் மெருகூட்டியது.

இன்று மடு அன்னையின் திருத்தல விழாவிற்கு சென்று திரும்பும் ஏனைய நம்நாட்டு மக்களும் இங்கு வருகை தருகிறார்கள். இவ்வாறு ஏனைய பகுதிகளிலிருந்தும் வரும் கத்தோலிக்க மக்களின் வருகை இத்திருத்தலத்தை சூழ வாழும் 30 குடும்பங்களுக்கும் ஊக்கம் கொடுக்கும் ஆதரவாக அமைகிறது. 1980 ஆண்டுகளில் புத்த சமய மக்களுடன் கத்தோலிக்கர் உறவுப் பிரச்சினைக்குள்ளாயிருந்த போதிலும். இன்று அவர்களோடு நல்லுறவுடன் வாழ்கிறார்கள். இத்திருத்தல விழாக்காலம்...

15

# "சின்ன வத்திக்கான்" கரம்பொனூர் பாதுகாவலன் புனித செபஸ்தியார் ஆலய ஆண்டு விழா



யாழ் குடாநாட்டில் லைடன் தீவின் மத்தியில் தமிழ் பற்றும், இறைபற்றும் இணைந்திருக்கும் வேளாண்மை, வியாபாரம், பல்துறை சார்ந்த மக்கள் வாழும் கிராமம் கரம்பொன்னூர். வனப்பு மிக்க தென்னஞ்சோலைகள், பனந்தோப்புகள், செழுமையான செங்கதிர் வயல்கள் கொண்ட வளம் கொழிக்கும் இடமாகும். இக்கிராமத்து மக்கள் இறைவனால் நிறைவாக ஆசீர்வதிக்கப்பட்ட பலம்பெரும் கத்தோலிக்கப் பாரம்பரியத்தைக் கொண்ட செழுமையும், குளிமையும் கொழிக்கும் கரம்பொன் மண்ணிலிருந்து 7 ஆயர்களையும், பல மதத்தலைவர்களையும், குருமார்களையும் அருட்ச -கோதரிகளையும், கல்வி மான்களையும் உருவாக்கி புகழ்சேர்த்ததன் நிமித்தம் யாழ் கிறிஸ்தவ மக்களால் சின்ன வத்திக்கான் என்று இக்கிராமம் பெருமையாகவும் அன்பாகவும் அழைக்கப்படுகின்றது.

புனித செபஸ்தியார் பிரான்ஸ் நாட்டின் மெல்போன் நகரில் கி.பி 257ஆம் ஆண்டு பிறந்து இத்தாலியில் மிலான் நகரில் வளர்ந்து அழகு மிக்க வாலிபனாக திகழ்ந்தார். இவர் கிறிஸ்தவ மக்களுக்கு பெருமளவில் உதவிப் புரிந்ததை அறிந்த அரசன் தியாக்ளேோசியன் இவரை அம்புகளால் எய்து கொல்லும்படி கட்டளையிட்டான். கி.ப 288ஆம் ஆண்டு தை மாதம் 20ஆம் திகதி திருமறைச்சாட்சியாக மரித்தார். திருச்சபையின் ஆரம்பத்தில் இருந்தே கிறிஸ்தவர்களின் மத்தியில் புனிதர்கள் வணக்கம் இருந்து வருகின்றது. புனித செபஸ்தியார் தம் பக்தர்களால், கொலரா, பிளேக் போன்ற தொற்று வியாதிகளையும், உபத்திரங்களின் பிடியில் இருந்து தப்புவதற்காக வேண்டி மன்றாடப்படும் புனிதர். உலகெங்கும் வாழும் கத்தோலிக்க மக்கள் தை மாதம்....

15

# கொழும்பில் முழுநேர சிறப்புத் தியானம்

கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் அப்போஸ்தலிக்கப் பணிக்குப் பொறுப்பான ஆயரின் துணையாளர்

வண. அருட்பணி மனோகுமாரன் நாகரட்ணம் அடிகளாரின் மேற்பார்வையின் கீழ்..

## இந்தியா, சாலக்குடி டிவைன் தமிழ் தியானக் குழுவினர் வழிநடத்தும் நற்செய்தியும், குணமளிக்கும் சிறப்புத் தியானமும்.



இடம் : முகத்துவாரம், டிலாசால், புனித சூசையப்பர் சிற்றாலயம்.
[இல, 130 டிலாசால் வீதி, முகத்துவாரம் , கொழும்பு – 15]

திகதி : 2017 ஆவணி மாதம் 04ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை
2017, ஆவணி மாதம் 05ஆம் திகதி சனிக்கிழமை முதல் 07ஆம் திகதி திங்கட் கிழமை வரை, காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணி வரை முழு நேர தியானம்.

(N 1854)

**நற்செய்தி அறிவிப்பவர்கள்**

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
Mr. Spelman Fernando
077 - 7359892 / 076 - 7359892
076 - 4223596



REV. FR BINOY CHAKKANIKUNNEL



REV. FR. ARUN LOUIS

இச்சிறப்புத் தியானத்தில் பங்குபற்றி
இறைஆசீர் பெற அன்புடன் அழைக்கின்றோம்

---

## அழைப்பு

### நுவரெலியாவில் உள்ள குருமாருக்கான ஏமாட் இல்லம் (EHOP)

- ☆ ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி EHOP செயல் திட்ட 10ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாட உள்ளது.
- ☆ EHOPஇன் உபசரணையை அனுபிவித்த சகல குருமாரையும் அவர்களது குடும்பத்தினர்களையும் கொண்டாட்டத்தில் பங்குபற்றுமாறு அழைக்கின்றோம் .
- ☆ ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி காலை 11.00 மணிக்கு நன்றித் திருப்பலி ஆராதனை இடம்பெறும்.
- ☆ உங்கள் குடும்பத்தவர் ஒருவர் அல்லது இருவரை அழைத்து வருதல் விரும்பத்தக்கது.
- ☆ திருப்பலி ஆராதனையில் பங்குபற்ற விரும்பும் குருமார், தொலைத்தொடர்பு மூலம் அல்லது மின் அஞ்சல் மூலம் ஜூலை மாதம் 20ஆம் திகதிக்கு முன்பு ஆயத்தங்கள் செய்யும் பொருட்டு, அருட்திரு சுனில் ரூப்பசிங்க அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

அருட்திரு. சுனில் ரூபசிங்க
Tel : 077 355 3686
Email : srupasinghe2001@hotmail.com

பின்குறிப்பு :
தனித்தனி அழைப்பு அனுப்பாமைக்கு தயவு செய்து மன்னிக்கவும், காரணம் உங்கள் விலாசங்கள் மாறியுள்ளமையே.

(Q17N2536)

---

COLOMBO CATHOLIC BOOKSHOP

## இறக்குமதி செய்யப்பட்ட திருப்பலி மேலாடை



போர்த்துக்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான திருப்பலி மேலாடைகள்

தற்போது விற்பனைக்கு

விலை

ரூபா 10200/- தொடக்கம்
18600/- வரை



Serving the Catholic Faithful

கொழும்பு கத்தோலிக்க புத்தக நிலையம்,
இல.02. ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08, தொ.பே இல 011 4373869' colombocatholicbookshop@gmail.com

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்